
188

# ஜகன்மோகினி.

ஆசிரியை
வை.மு. கோதைநாயகி அம்மாள்

OFFICE OF THE



ஜ
ஊ211,N22JM
N137.14.1.
182998

சாந்தகுமாரி

அணா 2

தயாராகி விட்டது | எதிர்பாருங்கள் !!

மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்

கார்ப்பரேஷனின்

மகத்தான சமூகப் படம்

# பால யோகினி

உணர்ச்சி மிக்கது! | உள்ளத்தை உருக்கும் காட்சிகள் !!

ஹாஸ்யச் சம்பவங்கள் !

குசேலாவில் உங்கள் மனதைக் கவர்ந்த

## பால சரஸ்வதி

பல பால்ய நடிகர்களுடனும், திறமை வாய்ந்த அமெச்சூர் நடிகர்களுடனும் தோன்றுகிறாள்.

---

படம் வேண்டுவோர் எழுதுக:—

மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட் கார்ப்பரேஷன்

7-பேல்ஸ் ரோடு,

திருவல்லிக்கேணி, சென்னை.

டெலிபோன் 8487 | தந்தி: நவீனா.

8 - APR 1937

ஸ்ரீ:

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியேன்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து

—ஸ்ரீ வீரராகவ கவி.


| மலர் | தாது ௵ மார்கழி ௴ | இதழ் |
|---|---|---|
| 14 | January 1937. | 1 |


## திருமால் துதி.

ஆலிலையில் அவதரித் தகிலலோ ககங்களையும்
அன்புடன் படைத்த கண்ணு!
அவனிமிசை அடியேன் ஜெனித்துமென் மனவிருளை
அகற்றிட வழி யறிகிலேன்
சீலமாம் புண்ணியம் சிறிதும் யான் செய்கிலேன்
தீமையே செய்தொழிந்தேன்
சீதரா உன்றனிரு மலரடி பணிந்துனது
சேவை நான் செய்தறிகிலேன்
காலத்தை முற்றும் யான் கண்மூடித் தனமாய்க்
கழித்து வீண்பாவி யானேன்
கல்லாத பேதையாய் அறியாமை யெனுமிருட்
கடலினில் துளைந்து நொந்தேன்
பால கோபாலனே பாரில் என்துயர் கண்டு
பரிசோதி யாம லையா
பவந் தீர ஆதரித் தாண்டருள் செய் அப்பனே
பாவை நக்மிணீ நாதனே!

—வை. மு. கோ.

182998.
சென்னை 600

# கடந்ததும் நிகழ்வதும்

அருள் கடலாகிய ஆண்டவனின் கருணை கடாக்ஷத்தினால் 1936-வது வருடம் ஒருவாறு இனிது முடிந்துவிட்டது. மங்கள கரமான 1937-வது வருடமும் பிறந்துவிட்டது. கடந்த 36-வது வருடத்தின் அனுபவமும், இப்போது நிகழும் 37-வது வருடத்திய அனுபவமும் ஒவ்வொருவருக்கும் தனித்த வாழ்க்கையில் நன்கு தெரியும். கடந்தவாண்டில் உலகத்தின் ஒரு பகுதியில் உள்ள அபிஸீனியா மறைந்தது ஸ்பெயின் கலவரங்கள் ஆரம்பமாயின. ஏக சக்ராதிபதியாகிய எட்டாவது எட்வார்டு மன்னராகிய த்யாகமூர்த்தி மகத்தான ப்ரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைத் துறந்தார். ஆறுவது ஜார்ஜு சக்ரவர்த்தி முடியைத் தரித்தார். நம் தேசீய இயக்கமும் இன்னும் மற்ற விஷயங்களும் பலவித மாறுதல்களுடன் நடைபெறுகின்றன. இப் புதிய 37-வது வருடத்தில் உலகத்தில் எந்த பாகத்திலும் எல்லோருக்கும் ஒருவிதமான குறைவு மின்றி, ஒருவிதமான கஷ்டங்களுமின்றி சகல சந்தோஷமும் சகல பாக்கியங்களும் சகல மங்களங்களும் உண்டாகி மக்கள் வாழவேண்டிய அருள் புரியுமாறு எல்லாம் வல்ல இறைவனை ப்ரார்த்திக்கின்றோம்.

உலகத்தில் எத்தனையோ புதிய மாறுதல்களைக் கண்டோம்; காண்கிறோம்; காணப்போகிறோம். உலகம் சுழல்வதுபோல் புதுமைகளும் பழமைகளும் சுழன்றுகொண்டேதானிருக்கும் அந்தத் தத்துவத்தை மக்களிடையே உணர்த்துவதற்காகத்தான் உலகமே உருண்டை வடிவமாய் சுற்றுவதைக் கடவுள் காட்டுகிறார்.

நம் மோகினிச் செல்விக்கும் 14-வதாண்டு இனிது பிறந்துவிட்ட சந்தோஷச் செய்தியை நேயர்களறிவார்கள். இப் புதிய 14-வதாண்டில் மோகினி வழக்கம்போல் தாங்கி வரும் நாவலைத் தவிர புதிய வகையில் பொது விஷயங்களையும் இனி மாதாமாதம் தாங்கி வெளிவருவாள் என்ற நற்செய்தியை தெரிவித்துக்கொள்கிறோம்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

# உண்மை எது?

**தஞ்சையில்**

"காங்கிரஸுக்காகவும், நாட்டுக்காகவும் சிறை சென்றவர்க்குத் தேர்தலில் அபேக்ஷகராய் நிற்க அதிக உரிமை யுண்டு. தேர்தல் சம்பந்தப்பட்டவரை அந்த உரிமை அவர்களுடைய பிதிரார்ஜித சொத்து."

(செட்டி நாடு. 24—12—36)

**காங்கிரஸில்**

"தாங்கள் சிறைக்குப் போயிருப்பதால் இந்த தேர்தலில் அவர்களை அபேக்ஷகர்களாக நிறுத்த வேண்டிய உரிமை இருக்கிறதென்று சில காங்கிரஸ்காரர்கள் கருதுகின்றனர். இந்த மாதிரி எண்ணவே கூடாது."

(தினமணி 29—12—36)

ஸ்ரீமான் பட்டேல், ஒரே விஷயத்தைப் பற்றி இரண்டு இடங்களில் இரண்டு விதமாகப் பேசியிருப்பதாகப் பிரசுரித்துள்ளது படித்தவர்களுக்கே கலவரத்தை உண்டாக்கும்படியிருக்கையில் பாமர ஜனங்களின் மனத்தில் எவ்வித எண்ணத்தை யுண்டாக்குமோ?

---

# கவியரசரின் கருத்துரை

"இன்னும் மனிதனுக்கு பூர்வ மிருக நிலை பூராவும் மாறிவிட வில்லை. மனித சமூகம் விருத்தியடைந்து தன்னுள்ளே இறைவனைக் காணும் சக்தி பெறவேண்டுமென்று போதிக்க, ஜோதி மைந்தர்கள் தோன்றி வந்திருக்கிறார்கள். அன்பையும் சத்தியத்தையும் அவர்கள் போதித்தார்கள். அத்தகைய மாணிக்கங்களுள் ஏசுபகவானும் ஒருவர்.

நமக்குள் இருக்கும் ஆத்ம விபூதியை ஒவ்வொருவரும் உணர வேண்டும் "தன்னையறிவதே" மனிதவர்க்கத்தின் லட்சியம். ஏசுபோன்ற உபதேசிகள் தான் அதைப் புகட்ட வல்லவர்கள்.

"இத்தகைய மகாத்மாக்கள் எல்லாக் காலத்திலும் தோன்றி வருகின்றனர். இப்போதுமிருக்கின்றனர். சுற்றிலும் வெறுப்பு, கோரம், அக்ரமம் தாண்டவமாடும் இந்த உலகில் நாம் இன்றும் வாழமுடிகிறதென்றால் அதற்கு இந்த புருஷோத்தமர்களின் பிரபாவமே காரணமாகும்."

—ஸ்ரீ ரவீந்திர நாத் தாகூர்

---

# உணர்ச்சி பாலூட்டல்

"இந்தியா முழுவதும் இதே சப்தமாக இருக்க வேண்டும். ஒரு சமயம் மட்டும் போதாது. வருடம் பூராவும் ஸ்வராஜ்யம், ஸ்வராஜ்யம் என்று தொனி இருந்துகொண்டிருக்க வேண்டும்......

காங்கிரஸ் பகிரங்கக் கூட்டத்தில் சப்தம் போட்டுப் பேசுவது மட்டும் போதாது. 365 நாளும் நாம் உழைக்க வேண்டும். கோழைத்தனத்தை ஒழித்து தீரராகுங்கள். சுதந்தரம் அடைவதென்ற சபதம் பூணுங்கள்.........

சென்ற ஐம்பதாண்டுகளாக இந்நாட்டுக்கு நான் பணி செய்து வருகிறேன். நான் சீக்கிரத்தில் இந்த தேசத்தினின்று விடை பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த உலகத்தினின்று நான் மறையுங்காலம் அணுகி வருகிறது. எனக்கு ஒரு வருத்தம் மட்டும் நெஞ்சைப் பிளந்து கொண்டு வருகிறது. எனது தாய் நாடு அடிமைத் தளையினின்று விடுபடாமல் இருக்கும்போது இதை விட்டுப் போகின்றோமே என்ற வருத்தம் மட்டும் தாளவில்லை.

"எனது தேசமக்களே! நமது ஜன்ம பூமியில் சுதந்தர சூரியன் உதிப்பதற்கான எல்லா முயற்சிகளையும் செய்யுங்கள். அந்திய காலத்திலுள்ள என்னைப் போன்ற கிழவர்கள் வெட்கத்தோடும் வருத்தத்தோடும் மரணமடையும்படி விடாதீர்கள்.

உங்களோடு தோளோடு தோள் பொருத்தி நின்று போராடிய சிப்பாய்களில் கிழச் சிப்பாய் நான். நான் உங்களை கேட்டுக் கொள்கின்றேன். விடுதலை யடைந்தே தீருவோமென்ற நெஞ்சுறுதியோடு முன்னேறுங்கள். மலை போலிருக்கும் கஷ்டங்களும், தடைகளும் பனிபோல் மறைந்து விடும். நாம் அடைய வேண்டிய கோயிலின் பாதை சுத்தமாகும்.

—பண்டித மதன் மோஹன் மாளவ்யா

"பல வேறு திசைகளில், அவரவர்கள் வீட்டிற்கு இங்கு கூடியுள்ள நீங்கள் போவீர்கள். ஆனால் நாம் பிரியமாட்டோம். நமது லக்ஷியம் நம்மையெல்லாம் ஒன்ருகச் சேர்த்து பிணித்து விட்டது.

நாம் எங்கிருந்தா லென்ன? எந்த காலத்தில் இருந்தாலென்ன? ஒரே போர்க்களத்தில் நின்று போரிடும் யுத்த வீரர்கள் தானே! நாம் கடைகளிலும் சரி, தொழிற்சாலைகளிலும் சரி நாம் எல்லோரும் சந்திப்போம். நமக்குள்ள பந்தம் என்று அழியாது.

நான் உங்களிடம் விடை பெற்றுக் கொள்கிறேன்; ஆனால் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து முன்னேறி அணி வகுத்துச் செல்லப் போகிற போது இதென்ன அர்த்தமற்ற விடை பெற்றுக் கொள்ளல்".

—பண்டித ஜவஹர்லால் நேரு.

# மெரினா பேச்சு

## கார்போவுக்குப் பரிசு!

உலகப் பிரசித்திபெற்ற நடிகையான கிரேட்டா கார்போவுக்கு, அவரது கலாசேவையைப் பாராட்டி "லிட்டாரிஸ் எட் ஆர்டிபஸ்" என்ற பதக்கத்தை ஸ்வீடன் நாட்டரசர் அளித்தார்.

—பத்திரிகைச் செய்தி

நம் நாட்டில் ஸினிமா நடிகள், தம் கலைத்திறமைக்காக பரிசும், பட்டமும் அரசரிடம் பெறும் காலம் எப்பொழுது வாய்க்குமோ என்று ஏங்க வேண்டியதில்லை. அவர்களேயோ, படமுதலாளிகளோ பலவிதமான பட்டங்களைக் குவித்து விடுகிறார்கள்.

## பலே! ஜப்பான்.

பட்டுப் பூச்சியினின்று நேராகப் பட்டு நூல் தயாரிப்பதற்கான ஓர் புதிய முறையை, ஜப்பானியர் கண்டுபிடித்திருக்கின்றனர்.

—விஞ்ஞான ஆராய்ச்சிச் செய்தி.

"இந்த முறையால் பட்டுத் தயாரிக்கும் முறையில் பூச்சிகளைக் கொன்ற பின் நூற் குவியலைத் திரட்டி இயந்திரங்களில் சுற்றிச் சிக்கெடுத்தல் முதலிய வேலைகள் குறைந்து விடுமென 'மான்செஸ்டர் கார்டியன்' ஓலமிடுகிறது. லங்காஷயர் என் செய்வதென அறியாது தவிக்கிறதாம்.

## ஆயுதப் பெருக்கு எதற்கு?

சர்வதேச சங்க உடன்படிக்கைக்கு முரணுயுள்ள எந்த நோக்கத்திற்காகவும், பிரிட்டனின் ராணுவ பலம் உபயோகிக்கப் படமாட்டாது.

—பால்டுவினின் புது வருஷச் செய்தி.

சிரங்கு பிடித்தவன் கையும் துரும்பு பிடித்தவன் கையும் சும்மா இருக்குமா?

## "விசேஷ அநுகூலம்"

புதிய அரசியலால் தங்களுக்கு விசேஷ அநுகூலம் ஏற்படுமென இந்திய ஜனங்கள் கருதுகின்றனர். ஆனால், காங்கிரஸ் தலைவர்கள் அக்கருத்தை உணரக் காணோம்.

—லண்டன் 'டேயிலி டெலிகிராப்'

இது யார் கண்ட உண்மை? ஜனங்களா அல்லது தலைவர்களா புத்திசாலிகள்! காங்கிரஸில் சேராதவர்கள் கருதுவது யாதோ?

## மற்றவர்களுக்கு மாத்திரமா?

தேசத்தின்பால் நீங்கள் கொண்டுள்ள பக்தி விஸ்வாசமும் அன்பும் தான் உங்களை ஒன்றுபட்டவர்களாகச் செய்யும். ஒவ்வொருவரும் தம்முடைய சுய நலத்தைக் கோருவாராகில், பிறகு ஒத்துழைப்பிற்கும் ஒற்றுமைக்கும் இடமில்லை.

—பாய் பரமானந்தர்.

ஹிந்து மஹா சபையினர் இப்பொழுது செய்வது என்னவோ?

## அரிய உபதேசம்.

ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். மாகாண நன்மைக்கும், தேச விடுதலைக்கும் அவர்கள் ஒன்று சேர்ந்து போராட வேண்டும்.

—ஜனப் ஜின்னு.

இனி சுயராஜ்யம் கிடைக்கத் தடை யென்ன? ஹிந்து மஹாசபையை மறந்தே இதைக் கூறி யிருக்கிறுர் போலும்!

## தக்க மரியாதை.

ஒரு ஸ்திரீயைப் பற்றித் திட்டமாக ஒன்றும் சொல்லமுடியாமல், மறை முகமான முறையில் வெட்ககரமான புகார்கள் வெளியிடுவோரைக் குதிரைச் சவுக்கால் வீறுவதுதான் அவர்களுக்கு விதிக்கக் கூடிய சரியான தண்டனை யாகும்.

எச். ஜி. வேல்ஸ்.

நம் நாட்டு வம்பர் மகா சபைப் பெரியார்கள், எங்கு இது அனுபவத்தில் வந்துவிடப் போகிறதோ என்று பதுங்கிக் கொண்டிருப்பதாக வதந்தி.

—வழிப் போக்கன்.

---

# அமர் ஜோதியின் யாத்திரை

முதன் முதலாக பம்பாயில் ஸ்ரீ கோகுலதாஸ் தேஜ் பால் கட்டிடத்தில் தான் முதல் காங்கிரஸ் கூட்டம் நடைபெற்றது. அங்கிருந்து. காங்கிரஸ் நடக்கும் பெய்ஸ்பூருக்கு 300 மைல் தூரமாக்கும். இந்த 300 மைல் தூரத்திற்கு பம்பாயிலிருந்து "அமர் ஜோதியை" யை (சுதந்திர அக்கினிகுண்டம்) யும், தேசியக்கொடியையும் ஏந்திக்கொண்டு மைலுக்கு ஒருவராக 300 சுதந்திர வீரர்கள் ஓடிவந்தனர், 10 நாளைக்குள் சுதந்திர அக்னி பெய்ஸ்பூருக்கு வந்து சேர்ந்தது.

இந்தக் கருத்து ஸ்ரீ கோகுல் பட் என்பவர் மனத்தில் உதயமாயிற்று. அவர்தான் முதன் முதல் ஓடி வந்தார். கடைசி மைலில் காங்கிரஸ் வரவேற்புக் கமிட்டிக் காரியதரிசியான ஸ்ரீ ஜு. ஏ. தேஷ்பாண்டே ஓடி திலகர் நகரத்தில் சுதந்திர அக்னி குண்டத்தையும், தேசீயக் கொடியையும் கொண்டு வந்து சேர்த்தார்.

# வீரத் தியாகியின் தீர மொழிகள்

1920-ல் நான் சர்க்கா, ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை, மதுவிலக்குத் திட்டம், தீண்டாமை யொழிப்பு ஆகிய விஷயங்களைப்பற்றிச் சொன்னேன். இவை இன்னும் அப்படியே இருக்கின்றன. இவைகளை யெல்லாம் நீங்கள் செய்ய முடியாமற் போனால் நீங்கள் ஒருபோதும் சுயராஜ்யம் பெற முடியாது என்ற இந்த கிழவனின் வார்த்தைகளை எடுத்துக்கொண்டு சிந்தியுங்கள்.''...

''இன்னும் என் பலம் குன்றவில்லை; என் சக்தி ஒடுங்கவில்லை; உற்சாகம் குறையவில்லை. நான் முன்போலவேதான் இருக்கிறேன். இந்திய மக்கள் மட்டும் என் திட்டத்தைப் பின்பற்றினால் சுயராஜ்யம் வாயிற்படியில் வந்து நிற்கும்......

நூல் நூற்பதன் மூலம் ஸ்வராஜ்யம் கிடைக்குமென்று நான் சொல்லி வருகின்றேன். அந்த எண்ணத்தை பித்துக் கொள்ளித்தனம் என்று சிலர் நினைத்தனர். இந்த 20 வருட அநுபவத்திலிருந்து எனது எண்ணம் பைத்தியக்கார எண்ணமல்ல வென்பதை தேசம் அறிந்துகொண்டிருக்கும். நாம் நூல் நூற்பதை மறந்தோம்; சுதந்திரமும் போய்விட்டது. நமக்கு வேறு வழியிருந்தால் சொல்லுங்கள்; நான் இந்த நூல் நூற்கும் வழியை வற்புறுத்துவதில்லை. அதே நூல் நூற்பதை மீண்டும் அவலம்பிப்போம்; சுதந்தரத்தை மீண்டும் அடைவோம்......நீங்கள் கடவுளிடம் நம்பிக்கை கொண்டிருந்தால் இந்த ப்ரச்னைகளில் மத தர்மம் கலப்பதைக் காண்பீர்கள். சத்தில் அனைத்தும் அழிந்து போனாலும் ஒன்று மட்டும் நிலைத்திருக்கும் அதுதான் சத்யம்...

நான் நினைத்துக்கொண்டிருக்கும் வாழ்க்கை தர்மத்தில் ஹிந்துக்களும், முஸ்லிம்களும் அடித்துக்கொள்ள இடமில்லை. அந்த தர்மத்தை நாம் பின்பற்றிவிட்டால் என்ன வந்தும் பிரயோசனமில்லை. நமக்கு மேலே ஒரு சக்தி நம்மை ஆட்டிவைத்துக்கொண்டிருக்கிறது என்பதை நாம் நம்ப வேண்டும்......

லட்சுமணபுரியில் ஜவாஹர்லால் என்ன செய்தார்? காங்கிரஸின் கட்டளைகளையே நிறைவேற்றினர். மீண்டும் ஜவஹர்லால் ஜெயிலுக்குப் போகத் தயார். அதுமட்டுமன்று. காங்கிரஸ் கட்டளையிடுமானல் புன்முறுவலோடு தூக்கு மேடைக்குப் போகவும் அவர் தயார். எனக்கு இதில் சந்தேகமே யில்லை.

''இந்த காங்கிரஸ் தினத்தில் கிராமவாசிகள் நடுவே நான் பேசியிருக்கிறேன். நான் கிழவன், சுடுகாட்டில் ஒரு கால் வைத்துக்கொண்டிருப்பவன்; மரண காலம் எனக்கு அணுகிக்கொண்டிருக்கிறது. அடுத்த வருடம் காங்கிரசுக்கு நான் வந்து பேச முடியுமோ முடியாதோ அறியேன்; யமன் என்னைக் கொண்டுபோய்விடலாம். ஆகவே நான் எனது எண்ணங்களைக் கொட்டிவிட்டேன்''

—மகாத்மா காந்தி

# நேருஜி தமாஷ்

**ஸ்ரீ தத்தமுஜும்தார்:**—''சீமாட்டிகளே! கனவான்களே! என்று விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் பேச ஆரம்பித்தார்.

**பண்டித நேரு:**—இங்கு பெண்கள் யாரையும் காணவில்லையே!—என்றார் உடனே அவர் ''பிரதிநிதிகளே! தோழ அக்ராசனரே!'' என்று ஆரம்பித்தார்.

# வீரம் தீரம் தியாகம்

கொடியை உயர்த்த ஆரம்பிக்கையில் கொடிமரத்தின் உச்சாணியிலுள்ள உருளை தகராறு செய்ய ஆரம்பித்தது. எல்லோருக்கும் கவலையும் கலக்கமு முண்டாயது. உயர்ந்த கொடிமரத்தின்மீது ஏறி அதைச் சரிப்படுத்தத் துணிவுடன் முன்வர யாவரும் தியங்கினர்கள். அச் சமயத்தில் ஓங்காரசிங் என்னும் ரஜபுத்திர விவசாயி தன் உயிருக்குத் துணிந்து வேகமாகக் கொடி மரத்தின்மீது ஏறி உருளையைச் சீர்திருத்தினர். அவர் இறங்கி வந்ததும் பண்டித ஜவஹர்லாலும், ஸ்ரீ சங்கரராவ் தேவும் அவ் வீரனை ஆலிங்கனம் செய்து தட்டிக்கொடுத்துப் பாராட்டினர்.

---

## காந்திஜி பந்தயம்

"நான் ஜவஹர்லாலுடன் பந்தயம் கட்டத் தயார். பெரிய நகரங்களி னின்று ஒரு இம்மியளவு சாமான்கூடக் கொண்டு வராமல் ஆகாய விமானம் போன்றது விதமாக செல்லக்கூடிய சாதனங்களின் உதவி யில்லாமல், மத்தியதர வகுப்பினர் ஒருவர் கூட லாபமடையவிடாமல், இந்த கிராமவாசிகளின்வருவாயை இரட்டிப்பு மடங்காகச் செய்கிறேன் என்று பந்தயம் கட்டத் தயார்.

காந்திஜி பேசிக்கொண்டிருக்கையில் கூட்டத்திலிருந்த ஒருவர் காந்திஜியின் கையிலிருந்ததைப் பார்க்கவேண்டி கையை உயர்த்திக் காட்டும்படிக் கூறினர்.

"நான் இன்னும் என் "கையை" காட்ட ஆரம்பிக்கவில்லை. கொஞ்சம் காத்திருங்கள். முழுவதையும் நீங்கள் காலக்கிரமத்தில் காண்பீர்கள்" என்ருர்.

உடனே "கொல்" என்று கூடியிருந்தவர் யாவரும் சிரித்தனர்.

---

## உயர்தர உத்தியோகஸ்தரின் சம்பளத்தைக் குறைப்பது நியாயமா?

"பல இலாக்காக்களில் உயர்தர உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைக் குறைப்பது முற்றிலும் நியாயமே. அவ்வாறு குறைப்பதில் அதிகமான கால தாமதமும் இருக்கலாகாது......உத்தியோகஸ்தர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு கவர்னரிடம் பல விசேஷ அதிகாரங்களிருப்பினும் அவைகளைப் பிரயோகிக்கும்படி நாங்கள் கவர்னரை கேட்கமாட்டோம். எங்கள் நாட்டினர் ராஜதந்திரத்துடனும், பொறுப்புணர்ச்சியுடனும் நடந்துகொள்வார்களென்பதில் எங்களுக்கு நம்பிக்கையுண்டு......பொது நன்மைக்காக உத்யோகஸ்தர் சம்பளத்திலோ, வேறு விஷயத்திலோ மாறுதல்கள் செய்யப்படும் போது நாங்கள் நஷ்ட ஈடு கேட்பதை மானக்கேடான காரியமென்றே மதிப்போம்.

—திவான் பகதூர், என். கோபாலஸ்வாமி அய்யங்கார்.

# சுதந்திர தாகம் :: திலகர் நகர்

ஸ்ரீமான் M. C. ஸ்ரீநிவாஸன். M. A.. B. L.,

திலகர் நகர் (பெய்ஸ்பூர்)
28—12—'36.

காங்கிரஸ் சபை ஸ்தாபனம் செய்து ஐம்பத்தொன்று வருடங்கள் ஆயின. ஒவ்வொரு வருட காங்கிரஸையும் சரித்திரத்தில் எழுதவேண்டிய தென்றே சொல்லவேண்டும். ஏனெனில் ஸ்வராஜ்யப் போரில் காங்கிரஸ் நம்மை வருடா வருடம் ஒவ்வொரு அடி உயரச் செய்கிறது. நமது தாய்நாடு பூர்ண சுதந்திரத்தை யடைந்து, இந்தியரின் அடிமை வாழ்வு மடியவும், விஸ்தாரமாக பரவிக் கிடக்கும் ஏழ்மையும், அறிவின்மையும் போக்கடிக்கவும் காங்கிரஸ் சபையால்தான் முடியுமென்பது ஒவ்வொருவரும் அறிந்த விஷயம்.

பெய்ஸ்பூர் காங்கிரஸிற்கு வேடிக்கை பார்க்க வந்தவர்களுக்கு காங்கிரஸின் சக்தி நன்கு விளங்கும். ரயிலடியிலிருந்து ஐந்து மைலுக் கப்பாலுள்ள ஒரு சிறிய கிராமத்தில், வருடா வருடம் நடப்பதைவிடச் சிறப்பாக நடந்தேறிய இத் திருவிழாவின் மகிமை பார்ப்பவர்கள் மனதை ஸ்தம்பிக்கச் செய்கிறது. நம் நாடுகளில் உத்ஸவங்களும், மேளாக்களும் ஜனங்கள் மனதில் உத்சாகத்தை யுண்டுபண்ணி ஆஸ்திகத்தை அதிகரிப்பதைப்போல், காங்கிரஸ் வருடக்கூட்டமும் சுதந்திர தாகத்தை யதிகரித்து வருகிறது. சாதாரண தினங்களில் சாவ்டா ஸ்டேஷனில் ரயிலதிகாரிகளே திரிந்துகொண்டிருப்பார்கள். இப்பொழுதோ, வண்டிகள் போன வண்ணம் வந்த வண்ணமிருக்கின்றன. நாட்டு வாசிகள் நகரவாசிகளெல்லோரும் கிராமங்களில் சுலபமாகக் கிடைக்கும் இரட்டைமாட்டு வண்டிகளில் குடும்பமாக காங்கிரஸ் வேடிக்கை பார்க்கச் செல்லுகிறுர்கள். வெகு தூரத்தில் தென்படும் மலைத்தொடர்கள் தோரணம் மாதிரி இருக்கின்றன. சூரியன் வெப்பம் சிறிதேனும் தெரியவில்லை.

திலகர் நகரைப்பற்றி வர்ணிக்கச் சாத்யமன்று. அதைப் பார்த்தால் தான் இந்த காங்கிரஸை நடத்த மேற்கொண்டவர்களின் புத்தியும் உத்ஸாகமும் தென்படும். எதிலும் அசவுகரியமே கிடையாது. ஸாவ்டாவிலிருந்து நிமிடத்திற்கு நிமிடம் பஸ்ஸுகள் செல்லுகின்றன. ஜலத்திற்குக் குறைவே இல்லை. ஏராளமான தொண்டர்கள், குடிக்கும் ஜலத்தை கைவண்டிகளில் இழுத்துச் சென்றுகொண்டிருக்கிறுர்கள். இலைபோட்டு சாப்பாட்டிற்கும் சவுகரியங்களிருக்கின்றன. கிராம ஜனங்கள் வெகு தூரத்திலிருந்து கட்டை வண்டிகளில் வந்திருக்கிறுர்கள். இவ்வளவு விஸ்தீரணமான காங்கிரஸ் நகரில் சிறிதேனும் ஆபாஸமென்பது தென்பட வில்லை. குப்பைகள் போடுவதற்கு அடிக்கு அடி க்ராமத்திலேயே செய்யப்பட்ட—பிரம்பினுல் பின்னப்பட்ட—தொட்டிகளிருக்கின்றன. தேக சுத்தம் செய்துகொள்ள தட்டியினுல் மறைக்கப்பட்டு பலவிடங்களிருக்கின்றன. மூன்று நான்கு அடி பள்ளம் நீள வெட்டிவிட்டிருப்பதால் துர்க்கந்த மென்பதே தெரியவில்லை. கிராம உத்தாரண வேலையிலீடுபடுபவர்கள் திலகர்நகர் ஏற்பாடுகளைப் பார்த்தால் வேலைகள் சுலபமாகவும் நயமாகவும் எப்படி நடத்த முடியுமென்பது

விளங்கும். எல்லாவற்றிற்கும் உற்சாகத்துடன் வேலை செய்யத் தொண்டர்களும், விடாமுயற்சியும் நற்குணமும் உள்ள தலைவர்களுமே அவசியம். தேச சேவிகைகளும், தொண்டர்களும் நம் நாட்டில் நிரந்தரமாக இருக்க ஏற்பாடு செய்ய வேண்டிய அவச்யம் காங்கிரஸ் நகரை நோக்கினால் விளங்கும்.

எக்ஸிபிஷனில் கிராமத்தில் கிடைக்கும் வஸ்துக்களையும், விதம் விதமான கதர்த்துணிகளையும், இன்னம் மற்ற அறிவை யதிகரிக்கக் கூடிய விஷயங்களையும் நேரில் கண்டவர்கள் தான் அனுபவிக்க முடியும். காங்கிரஸ் பிரேரணைகளைப்பற்றியும், தலைவர்களின் கர்ஜனைகளையும் பத்திரிகைகளில் படிக்கலாம். தலைவர்களை நேரில் காண்பதும் சுலபம். அவர்கள் சுற்றுப்பிரயாணத்திற்கு வருவார்கள். ஆனால் எக்ஸிபிஷன்களையும், கிராம ஏற்பாடுகளையும் நேரில்தான் காணமுடியும். சினிமாவில் பட மெடுத்தாலும் அனேகர் சினிமா போகமாட்டார்கள். கிராமத்தில் வசிக்கும் ஜனங்களுக்கு எங்ஙனம் சினிமாவும் டிராமாவும் போகமுடியும்? தேசிய சபைகள் இங்ஙனம் கிராமங்களில் அடிக்கடி கூடினால் கிராம ஜனங்கள் தேசியப்போரில் ஏராளமாக கலந்து கொள்வார்கள். நாட்டின் விடுதலை வெகு சீக்கிரத்திலேயே நேரிடும் என்பது சந்தேகமில்லை. 'வந்தேமாதரம்'

---

# அனுபவ நீதிசாரம்

(1) எங்கும் வ்யாபியான கடவுளை என்றுமே மறந்திருக்க முடியாது. அட்டூழியக் குட்டையில் மிதப்பவனாக இருப்பினும் அந்திய காலத்தில் அவன் செய்த குற்றங்களுக்காக வருந்தி கடவுளை நினைக்கத்தான் வரும். ஆகையால் என்றும் இறைவனை மறக்காது துதித்தால் இன்பமே வருமன்றோ...

(2) தன் காலம் தடமாட்டமாகிவிட்டால் சிலர் தம் பழய சொந்த மதிப்பும், கவுரவமும் கூடச் சிதறிவிடும்படித் தாமே நடந்துவிடுகிறார்கள். பழய பெருமையை அறிந்தவர்கள் இதைப் பார்க்கையில் மனம் தபிக்கிறது.

(3) தினம் ஒரு படம் தயாரித்துப் பொருளீட்டவேண்டுமென்பது முதலாளிகளின் ஆசை. தினம் ஒரு படத்தில் நடித்துப் பொருள் தேடுவதில் நடிகர்களுக்கு ஆவல். இரண்டு பேரும் இதே நோக்கத்துடன் வேலை செய்யும் வரையில் கலையின் வெற்றியோ, நீடித்த புகழோ உண்டாகப்போவதே இல்லை.

(4) பெண்களைப் பெற்றவர்கள் எக்கப் பேய் பிடித்து அலைகிறார்கள். ஆண்களைப் பெற்றவர்கள் ஆசைப்பேய்க்கு அடிமையாகி அலைகிறார்கள்: இவ்விரண்டு பேய்களையும் ஓட்டுவதற்கு எந்த பூசாரி முக்கியம்?

(5) ஆத்ம சிந்தனை செய்யும் எவரும் அல்ப விஷயங்களைக் கவனிப்பதே இல்லை. அல்ப விஷயங்களை விடாத எவரும் ஆத்மாவை அறியப்போவதே இல்லை.

(6) வினா :—அறம், பொருள், இன்பம்...வீடு...இவற்றிற்குப் பொருள் என்ன!

விடை :—அரம்...தச்சனுக்குள்ள ஓர் ஆயுதம். பொருள்...பணந்தான் ...அரத்தை வாங்குவதற்குப் பணம்...இன்பம்...அரத்தை வாங்கிவிட்டால் இன்பம் கேட்கவேண்டுமா!...வீடு...பிறகு அதை வீட்டில் வைத்துக் கொண்டு சந்தோஷமாக வாழலாம்...இதுதான்.

# வனிதா விலாசம்

"சூடாமணி"

"என்ன பாட்டீ! நீங்கள் அப்பளாம் செய்கிறீர்களே! நாட்டுப்பெண் எங்கே? அவளும் செய்யக்கூடாதோ?" என்று பாக்கியம் கேட்டாள். அதற்குக் கிழவி முக்கி முனகிக்கொண்டே "ஏண்டியம்மா! என் தலைவிதியை நான் தொலைத்துத்தானே ஆகவேண்டும். வயசு நூறானால் என்ன, இருநூறு ஆனால் என்ன! எனக்குச் சாவு என்னமோ இல்லை. அந்த நாளில் நான் என் மாமியாரிடமும் புருஷனிடமும் பயப்பட்டு செத்தது போல இந்த காலத்து நாட்டுப் பெண்கள் யாரிருக்கிறார்கள்?

அதிலும் என் பிள்ளையைப்போல் இடங்கொடுத்துக் கொழுக்கடிக்கும் தடியன் யாராவது இருப்பார்களா! நான் எப்படி செத்தால் என்ன? சாப்பிடும்போது தினம் ரெண்டு வேளையும் அப்பளாம் இல்லாப்போனா பிள்ளையாண்டானுக்கு சாதம் பிடிக்கிறதில்லை. அப்பளாம் செய்யவில்லையாவென்று அதட்டுகிறான். அதுக்காக இன்னிக்குப் புத்தி இல்லாமெ மாவெ கலந்துட்டேன்.

கேட்டயாடீ! களப்பா! கிளப்பா! ஏதோ ஒன்று இருக்கே! அதிலெ இந்த சிறுக்கி சேந்திருக்கா. அந்த எழுவுலெ இன்னிக்கு என்னமோ சூர்ண மட்டெயாம் (டூர்னமெண்டு)

பாக்யம் :—என்ன! என்ன! சூர்ணமட்டெயா! அப்படின்னா என்ன?

பாட்டி :—அதென்ன எழவொ! சூர்ணமோ! லேகியமோ! நான் கண்டேனாடீ! நான் அதென்னன்னு கேட்டத்துக்குப் பொம்மனாட்டிகள்ளாம் பந்தாட்ரதுன்னு சொன்னா. என்ன பந்தாட்டம் ஆம்பளையாட்டம் வேண்டி இருக்கு? நாம்பல்லாம் வெளீலே எந்த பந்தாடினோம்...வீட்டிலெதான் வேலெ சரியாப்பூடும். அது நடுவே சற்று ஒழிந்தால் அப்பாடான்னு படுத்துக்குவம். இல்லாப்போனா கச்சக்கா; அம்மானே, பல்லாங்குழி, தாயக்கட்டம், பலகாரே, புளியங்கொட்டெ, எட்டுக்கட்டம், கோனால் கட்டம், பந்தாட்டம், நாய் புலி, இல்லையா! இந்த மாதிரி ஏதாவது ஆடுவோம். இந்த மாதிரி சூரணத்தை யாருடீ கண்டது? ஏதோ லட்டு சலிக்கிற கரண்டியாட்டும் ஒன்னு இருக்கு. அதைத் தூக்கிண்டு தினம் ஓட்ராம்மா! என் தலைவிதி இப்படி இருக்கு. ஏதாவது சொன்னால் என்பாடு நாயும் படாது—என்று கூறிக்கொண்டே அப்பளம் செய்தாள்.

பாக்யம் :—என்னமோ போங்க. என் வீட்டிலேயும் இப்படித்தான் அக்கப்போரு. இந்த மாதிரி பந்தாடினால்தான் ஒடம்புக்கு வலிவாம். பலமாம்; நம்ப காலத்திலே வலிவுக்காக விளையாட்டுத்தேடினோமா! நம்ப பழைய காலத்து விளையாட்டில் எத்தனையோ அனுகூலங்கள் இருந்தன. பள்ளிக்கூடம் போகாமெ வாய்கணக்குலெயே பந்தடிப்பதிலும், பிளியங்கொட்டெ பொறுக்குவதிலும் ஆயிரம் ஆயிரமாய் கணக்கு வந்துவிடும். ஆடும்போது ஒருவர் காயை ஒருவர் வெட்டி ஜெயிக்கவேண்டுமென்ற சுறுசுறுப்பு புத்தியும் எப்படி காய் வைக்கலாம் என்ற யோசனையும் உண்டாகும். நாம் பந்தாடும்போது

கைக்கும் தேகத்திற்கும் உழைப்பு இருக்கலையா? வீட்டிலேயே விளையாடு வோம். இதென்னடியம்மா!

பாட்டி :—பழய விளையாட்டுக்கள் தள்ளுபடியாண்டியம்மா! பழய அப்ளாம் மட்டும் ஓணமொன்னு என் பிள்ளையாண்டானைக் கேட்டேன். நீ இப்ப சொன்னதெல்லாம் அவனிடமும் சொன்னேன். அதைக் கேட்டப் புறந்தான் பழய விளையாட்டுமேலே என் பிள்ளைக்குக் கொஞ்சம் மதிப்பு வந்தது. கிளப்பிலே புதிய பந்தாட்டம் முதலிய விளையாட்டுடன் பழய விளையாட்டும் வைக்க ஏற்பாடு செய்கிறேன். நீங்கள்ளாமும்போய் சந்தோஷமா ஆடுன்னு சொன்னான். என்னுட்டுப் பெண்ணும் அதை ஏற்பாடு செய்துவிட்டாளாம். நாளைக்கு அதைப் புதுசா ஆரம்பிக்கப்போறுளாம். அதுக்கு என்னையே முதலில் ஆரம்பிக்கணும்னு யாரோ வந்து கேட்டா! ஆகட்டுமுன்னு சொல்லிப்புட்டேன். நீயுந்தான் வாயேண்டீ! சோணல் கட்டம் ஜமாய்க்கலாம். பந்தாட்ரதையும் பாத்துட்டு வரலாம்'' என்றுள். தீர்மானம் ஏக மனதாக நிறைவேறிவிட்டதால் பாட்டியம்மாளால் மறு தினமே பழங்கால விளையாட்டுப் பகுதி திறந்து வைக்கப்பட்டது. இப்போது தினம் பாட்டிமார்கள் கிளப்பில் அதிகமாகிக்கொண்டே வருகிறுர்கள்.

---

# புத்தக விமர்சனம்

( ஸ்ரீராம சரிதை. சௌ. கே. எஸ் சங்கரி எழுதியது. விலை அணு 7.
கிடைக்கும் இடம். ஸ்ரீரமணதாஸ் K. S. சேஷகிரி.
138 பிராடீஸ் ரோட் மயிலாப்பூர்.)

ஸ்ரீராமசரிதை என்ற அதி அத்புதமான சிறிய புத்தகம் பால் மணம் மாருத சிறுமி என்றுலும் தகும், அத்தகைய 8 வயது சங்கரி என்ற சிறுமி எழுதியதை அன்புடன் வரப்பெற்றேம். சாதாரணமாக அந்தந்த தொழிலில் இருப்பவர்களுக்குத்தான் அத் தொழிலின் அருமை பெருமைகளும், சுக துக்கங்களும், கஷ்ட நஷ்டங்களும் தெரியும். அம்மாதிரி கஷ்ட சாத்யமான ஓர் எழுத்து வேலையை கேவலம் சிறுமி செய்திருக்கிறுள் என்றல் அதை யார்தான் வியந்து போற்றுமலிருக்க முடியும்?

இவ் வயதில் சொல்லிய கதைகளை மனத்தில் வாங்கிக்கொள்ளவும் சக்தி இல்லாத—வாங்கிக்கொண்டதைத் திருப்பிச் சொல்லவும் சக்தி இல்லாத—ஆயிரக்கணக்கான குழந்தைகளை நாம் காண்கிறேம். அங்ஙனமிருக்க 8 வயதில் சங்கரி தெவிட்டாத தெள்ளமுதம் போன்ற ராமசரிதையைத் தானே அன்வயித்து பக்திபூர்வமாய் ராமசரிதையின் சாரங்குன்றுமல் சங்கிரகமாய் எழுதி இருப்பதானது அச் சிறுமியின் புத்தி வளர்ச்சியையும், பூர்வ ஜென்மத்தின் சக்தியையும் நன்கு விளக்குகின்றது. இச் சிறுமிக்கு

மேன்மேலும் இதுபோன்ற துறைகளில் குன்ருத குன்றுபோன்ற ஊக்கமும், உத்ஸாகமும், திட சரீரமும், தீர்க்காயுளும், சௌபாக்யமும் கொடுத்து ரக்ஷிக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன். இந் நூலை ஒவ்வொரு சிறுவன், சிறுமிக்கும் பெற்ளோர்கள் ஓர் புதையலைப் போலக் கொடுத்துப் படிக்கச் செய்யவேண்டியது அவசியம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(வை. மு. கோ.)

---

# சினிமாப்பகுதி

"வத்ஸகுமாரி"

## "இரு சகோதரர்கள்"

மரத்திலிருந்து இலைகள் உதிர்வதேபோன்று இப்போது தினம் ஒரு டாக்கி கம்பெனியும், புதிய புதிய படங்களும் உதயமாகிக்கொண்டே இருக்கின்றன. நாம் பார்த்த எல்லாப் படங்களையும் விட உயர்ந்த ரகத்தில் சேர்ந்த சமூகப்படங்களாகிய "மேனகா" பதி பக்தி 'சதி லீலாவதி' புராண படமாகிய "பக்த குசேலா" இவைகளைத் தவிர வேறு படங்கள் நம் தாய்ப் பாஷையில் இதுவரையில் நான் பார்க்கவில்லை. தர்மாத்மா, அமர்ஜோதி, பாக்யசக்ரா, அச்சூத்கன்யா முதலிய ஹிந்தி படங்களைப் பார்க்கும்போது நம்முடைய மனம் எத்தகைய சந்தோஷத்திஞல் மலர்ந்தது என்பது அனுபவித்தோருக்கே தெரியும்.

அக் காலையில் மனம் எத்தனை சந்தோஷப்பட்டதோ அத்தனை ஒருபுறம் ஏக்கமும் கூடவே பாதித்தது. நம் தாய்ப்பாஷையில் இம்மாதிரி முழு வெற்றியுடனும் இல்லையெனினும் பாதிக்குப் பாதியாவது அமைந்த படம் ஒன்றேனும் வெளிவராதா! நாம் பார்த்து மகிழும் காலம் வராதா! என்று ஏங்கினேன். அப் பெருங் குறையை ஒருவாறு போக்கி உத்ஸாகமளிக்கச்செய்த படம் "இரு சகோதரர்கள்" தான் என்பதை வெகு சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரு சகோதரர்கள் என்ற படத்தைப் பார்க்கும்பொழுது தமிழ்ப்பட உலகத்திற்கும் விமோசனம் உண்டாகும் காலம் வந்துவிட்டது என்ற பெரிய மகிழ்ச்சியும் ஆநந்தமும் உண்டாகியது. படம் ஆரம்பமுதல் முடிவு வரையில் ஒருவிதமான ரஸபாவத்துடனும், நடிப்புத் திறமையுடனும் விருவிருப்பாகக் கதை செல்லுவது மிகவும் போற்றத்தக்கதாகும். கதையும் அளவுக்குட்பட்டு எளிய நடையில் செல்கிறது. சில இடங்களில் பாக்யசக்ராவில் நாம் கண்டு களித்த காட்சிகள் கதையில் கலந்திருக்கின்றன. அதை ஊன்றிக் கவனித்த எவருக்கும் விளங்கும்.

கதா நாயகனுகிய கேசவனின் நடிப்பு தமிழ்நாட்டில் உள்ள எல்லா நடிகர்களேயும்விட உச்சஸ்தானத்தை எட்டி இருக்கிறது. அதற்கேற்றது போன்று கதாநாயகியின் நடிப்புமிருப்பின் வெகு நன்ருக இன்னும் விசேஷ சோபையைக் கொடுத்திருக்கும். அதுதான் மிகவும் குறைவு. கேசவனின் ஒவ்வொரு பாகத்திய நடிப்பும் மிகமிகப் போற்றத்தக்கதாகும். மூத்தவனுக நடித்த K. K. பெருமாளின் நடிப்பு நடிப்பாகவே தோன்ருமல் மிகவும் இயற்கையாயும், பொருத்தமாகவும் வீடுகளில் பார்ப்பதுபோலவிருந்ததே யன்றிக் கண்காட்சியாகத் தோன்றவில்லே.

ஸ்திரீ நடிகர்களுக்குள் சரியான முதல் தாம்பூலம் ஸ்ரீமதி ராதாபாய்க்கும், அங்கு தோன்றிய கிழவிக்கும் தாராளமாகக் கொடுக்கலாம். கிழவி மூத்தவனிடம் பேசும் ஒரு காட்சி தத்ரூபமாகவிருந்தது; மனத்தைப் பரவசமுறச் செய்தது.

**உயர்ந்த அம்சங்கள்.**

வேலேயில்லாத் திண்டாட்டம் நாயினுங் கடையது என்பது விறகு வெட்டிவிட்டுச் சாப்பிடும்போது வெகு தெளிவாக விளக்கப் பட்டிருக்கிறது.

முதலில் முருகேசனின் உயிர் போகும்போது அங்குள்ள விளக்கின் ஜோதியும் குறைந்து அணைவது மிகவும் போற்றத் தக்கது.

ஒருபுறம் அண்ணன் வீட்டுப் பணக்கார நிலேமையும், அதே சமயம் தம்பியின் வீட்டு ஏழ்மை நிலேமையும் காட்டுவது வெகு அழகாயும் இயற்கையாயும் இருக்கிறது.

பசுபதி, நாடகம் நடிக்கக் கற்றுக்கொடுப்பதாகக் காட்டியுள்ள காட்சியிலும், தவிர இன்னுமோரிடத்தில் நான்கு வேலேயாட்கள் கஞ்சா குடித்து விட்டுக் கூத்தாடும்போது அங்கு பசுபதி வருவதைக் கண்டு அவர்கள் ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாகக் கூச்சலிடும் காட்சியிலும் ஹாஸ்யச் சுவையைக் கதையிலேயே பொருத்தமாக அமைத்திருப்பது வெகு அருமையாயிருக்கிறது.

பல அம்சங்களில் முன்னணியில் நிற்கும் இப்படத்திலும் கவனிக்கப் படாத சிறு குறைகளும் இல்லாமலில்லே. பாடுகையில் ஒலிப்பதிவு சரியாக இல்லாதது கவனிக்கத்தக்கது. வேலேக்காரியான பார்வதி கார்டு கரை சரிகைப் பேட்டு புடவையுடன் அவல் இடிப்பது சற்று பொருத்தமற்றதேயாகும். இவைபோன்ற சிறுகுறைகளும் இல்லாமலிருப்பது அரிதுதான்.

இதுபோன்ற சிறந்த முறையில் ஆபாஸக் காட்சிகளின்றிச் சுத்தமான படங்களேயே ஜனங்கள் பெரிதும் விரும்புகின்ருர்கள் என்பதை எல்லாப் பட முதலாளிகளும் அறிந்துகொண்டு, இனி இத்தகைய உயர்ந்த சமூகப் படங்களேயே தயாரித்து அதன்மூலம் ஜனங்களுக்கு நல்லறிவும் சீர் திருத்தங்களும், உயரிய நோக்கங்களும், சமூக சேவையில் ஆர்வமும் உண்டாகுமாறு செய்வார்களென்று எதிர்பார்க்கிருேம்.

தமிழ்ப் பாஷை தெரியாத டைரக்டரின் படம் இவ்வளவு வெற்றிகரமாயுள்ளது குறிப்பிடத் தக்கது.

———

# உதிர்ந்த மணிகள்

மனிதன் இயற்கையில் பிசாசுமல்ல; தேவனும் அல்ல. ஆனல், தனது செய்கையால் சுவர்க்கத்தையோ நரகத்தையே உண்டுபண்ணலாம்.

—ஜனப். எம் ஏ. ஹகீம். சாகிப்.

நீ உலகத்தில் வாழ்ந்திருக்கும் வரையிவ் உன்னிடம் அச்சமும் மரியாறையும் கொள்ளும்படி நட. ஒருவருக்கும் தீங்கு செய்யாதே. பிறரால் தீங்கு வராதபடியும் காத்துக்கொள்.

—ராமகிருஷ்ண ப்ரமஹம்ஸர்.

தேச நன்மைக்காகவே வாழ்ந்து, அதற்காகவே உயிரையும் விடத் தயாராக இருக்கிறவர்களே காங்கிரஸுக்கு வேண்டும்.

...பாபு ராஜேந்திர பிரசாத்.

ஊழியர்களின் ஆதரவில்லாவிட்டால், ஒரு தேசத்திற்கும் கதிமோக்ஷம் ஏற்படாது.

—சக்லத்வாலா.

பணமிருந்தால் விருந்து, இல்லையாஞல் விரதம்.

—மௌலாஞ சவுகத்தலி.

தேசியத்திற்குக் கிளர்ச்சிதான் ஏற்றது.

—தாதாபாய்.

சுதந்திரம் பெறுவது இந்தியாவின் உரிமையாகும். அந்த உரிமை இந்தியாவுக்குக் கிடைக்காதவரையில் மனித நாகரிகம் முற்றுப் பெருமல் குறையாகவே இருக்கும்,

—ரோமேய்ன் ரோலண்டு.

மரியாதையான வீட்டிற்குச் சமமான பள்ளிக்கூடமும், யோக்யமான நல்லொழுக்கமுள்ள பெற்ருேர்களுக்குச் சமமான ஆசிரியரும் கிடையாது.

—மகாத்மா காந்தி.

தீங்கு செய்வதைக் காட்டிலும் கஷ்டத்தை அனுபவிப்பது மேல்; பிறரை நம்பாமல் இருப்பதைக் காட்டிலும், சில சமயங்களில் மோசம் செய்யப்பட்டுவிடுவது மேல்.

—பண்டித. திரு. ராகவாசாரியர்.

## அச்சுப் பிழைகளின் ஹாஸ்யச் சுவை

| | | |
|---|---|---|
| 1. | ஸர்கில் பர்டுஸ்டோள். | ஸர் கில்பர்டு ஸ்டோன். |
| 2. | லைதகளை. | தலைகளை. |
| 3. | மர்ஞன்குடி. | மன்ஞர்குடி. |
| 4. | அவர் ரஸ்தாபித்தார். | அவர் பிரஸ்தாபித்தார். |
| 5. | ஸ்ரீமான் எஸ்கள் சத்தியமூர்த்தி. | ஸ்ரீமான்கள் எஸ். சத்தியமூர்த்தி முதலியோர். |
| 6. | உயபாத்திரியர். | உபாத்தியாயர். |
| 7. | ஆபராமன. | அபாரமான. |

# கவிதா மண்டலம்

## திருமால் இரட்டை மணி மாலை

[இந்நூல், ஆசிரியர் பண்டித திரு. ராகவாசாரியரால் இயற்றப்பட்டதாகும். இவர், திருவல்லிக்கேணி ஹிந்து ஹை ஸ்கூலில் 35 ஆண்டுகள் தலைமைத் தமிழாசிரியாக இருந்தார். 1870-ஆம் ஆண்டில் செங்கற்பட்டைச் சேர்ந்த ஸ்ரீரதபுரத்தில் தோன்றினர். தகப்பனர் ஸ்ரீ. பெரிய ராமாநுஜாசாரியார்; தாயார் வேதவல்லியம்மாள். 'துருவ வெண்பா' 'சம்பு ராமாயணம்,' 'சூளாமணி வெண்பா, 'நீதி மஞ்சரி' சதுந்தலை சரிதை முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார். இவர் இயற்றியுள்ள தனிக் கவிகள் மிகப் பல.

நமது முதல் நாடக நூலாகிய "இந்திர மோஹனு" வுக்கு முன்னுரை எழுதியுதவிய பெரியார். இப் பெரியார் கடைசிநாள் வரை நமது "ஜகன் மோகினி" யை அன்புடன் ஆதரித்து, அரிய பல முன்னேற்றங்களை நாம் செய்ய ஊக்கமளித்து வந்தார். 9—6—35ல் காலமானபோதிலும் எமது உள்ளத்தில் என்றும் நிலவி, வழிகாட்டியாயிருப்பவர்.]

**வெண்பா**

பூமகள்சேர் மார்வன் பொருந்தும் உயிரனைத்தும்
கோமகனுய்க் காக்குங் குறிப்புடையான்——நாமகள்சேர்
பூந்தா மரையான் புரிசடையான் போற்று கழல்
தேந்தா மரைநெஞ்சே சேர். 1.

**கட்டளைக் கலித்துறை**

சேர்க்கும் புனற்கங்கைச் செஞ்சடை வானவன் செய்குறையைத்
தீர்க்கும் புனிதன் திறமன்றி வேறோர் செயல் நினைவார்
ஈர்க்கும் கடுவினை எழ்பிற வாழி இடர்ப்படுவர்
பார்க்கு மளைக்கு மங்காந்தவன் பாதம் பரவுமினே! 2.

**வெண்பா**

பரவிப் பணிந்தேத்தும் பண்புடைய தொண்டர்
விரவு நலமடைய வேண்டிக்——கரவுடைய
பவ்வப் பெரும்பிறவி பாழ்படவென் சிந்தையினில்
எவ்வுருவங் கொள்வேன் இயைந்து. 3.

**கட்டளைக் கலித்துறை**

இயைந்த மனத்தால் எருவைக் கருசுக் கிரும்பதவி
வியந்து பயந்த நம்வேத முதல்வன் விரிஞ்சனைமுன்
நயந்து தனுந்தி நளினத்துத் தந்தருள் நாரணன்றாள்
உயர்ந்த கரத்துத் தலைமிசைக் கொள்பவர் உத்தமரே. 4.

**வெண்பா**

உத்தமனே சிந்தைக்(கு) ஒளியே உனதடியைப்
பத்திமையா லேத்திப் பணிவேனைச்——சித்தம்
உருகும்வகை அருளி ஒண்பதத்தை மேவ
அருளுவையோ ஆழியாய் அன்று. 5.

—பண்டித திரு. ராகவாசாரியர்
[1870—1935]

திங்கள்தோறும் தங்களைக் களிப்பித்து பொங்கிடச் செய்வது எது!

## சாந்த குமாரி

பெற்றவர்களுக்கும், பிறந்தவர்களுக்கும் உள்ள பகை எவ்விதம் முடியப்போகிறது ? மறு தேர்தல்களின் தடபுடல் முழக்கங்கள் எப்படி ? கிருஷ்ணகுமாரியின் மீது ப்ரகாசம் கொண்ட காதலும், சாந்தமூர்த்தியின் சந்தேகமும் எவ்வித முடிவை கொடுக்கப்போகின்றன ? வஸந்தகுமாரியின் அதி விசித்திரமான எதிர்கால வாழ்க்கையின் மர்மமென்ன? கிருஷ்ணகுமாரியின் முடிவு என்ன? சாந்தமூர்த்தியின் கிராமமும், நெற்களஞ்சியமும் எப்படி தீக்கிரையாகின்றன ? சித்திரக் காட்சியில் நடக்கும் வைபவமென்ன ? முதலில் நீறு பூத்த நெருப்புபோல இருந்து நீறு விலகிய நெருப்பு போல புகழ் யாருக்கு உண்டாகிறது ? இணையிலாத் அற்புதமான காதல் சக்தி யாரிடத்தில் உண்டாகி எப்படி, யாருக்கு ஜொலிக்கப்போகிறது? இன்னும் மனித வாழ்க்கையில் திடுக்கிட்டலறும் சம்பவங்களும், அனுபவக் களஞ்சியம்போன்ற அபூர்வ விசித்திரவினோத பயங்கர விஷயங்களும் அடுத்தடுத்து வரும் இதழ்களில் கண்டு களித்து மகிழத் தவறாதீர்கள்.

---

## ADVERTISEMENT RATES

| | |
|---|---|
| Rs. 10—0 for full page | Rs. 3—0 for quarter page. |
| Rs. 5—8 „ half „ | Rs. 12—0 for inner wrapper. |

**SPECIAL RATES FOR CONTRACT ADVERTISEMENTS**

## 14—வதாண்டுப் பரிசுகளின் விவரம்

1936-ம் டிசம்பர் மீ 20 தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

| பரிசு ந. | ரூ. | சந்தா ந. | |
|---|---|---|---|
| 1 | 25. | B. 25. | Mr. K. Bakshi Sahib. Singapore. |
| 2 | 15. | M. 216. | ,, R. Muthia, Kyuanggen. |
| 3 | 10. | S. 864. | ,, P. R. Subramaniam, Pollachi. |
| 4 | 5. | V. 371. | ,, M. Varatharajoo, Seremban. |
| 5 | 5. | T. 100. | ,, Dr. Thangammal, P. T. Madras. |
| 6 | 5. | M. 432. | ,, M. Magarajan, Colombo. |

## பிப்ரவரி மீ 20 தேதிக்குள்

சேரும் சந்தா நேயர்களுடைய நம்பர்களை குலுக்கிப் போட்டு 6 சீட்டுகள் எடுத்து அவற்றிற்கு கீழ்க்கண்ட தொகையுள்ள புத்தகங்கள் பரிசாக கொடுக்கபடும்.

| ரூ. 15<br>முதற் பரிசு | ரூ. 10/-ல்<br>இரண்டு பரிசுகள் | ரூ. 5/-ல்<br>மூன்று பரிசுகள் |
|---|---|---|


## நீங்கள் இன்னும் படிக்கவில்லையா?

# அனாதைப் பெண்

அல்லது

## கனிந்த காதலர்


அனுபவம் நிறைந்த ஆச்சரிய சம்பவங்களும், இணையிலாக் காதலும், ஈடிலாப் பக்தியும், ஒருங்கே அமையப்பெற்று, உயரிட படக் காட்சிக்கு உகந்த சிறந்த நாவல்.

விலை ரூ, 1/4. சந்தா நேயர்களுக்கு ரூ. 1.

முன்பணமனுப்பவும். வி. பி. கிடையாது.


Kabeer Printing Works, Triplicane, Madras.

ஸ்ரீ



# சாந்தகுமாரி

## 1-வது அதிகாரம்.

### வஞ்சம் மிஞ்சினல் வாஞ்சையும் நஞ்சாம்

“அளவு கடந்த ஆநந்தத்தை மக்களுக்கு அள்ளிக் கொடுப்பவை இணையற்ற பண்டிகைகள், கல்யாணம், காட்சி முதலிய உயரிய நன்னாட்களன்றோ! இன்று செவிக்கும், நேத்திரத்திற்கும் உள்ள ஆநந்தம்

இனி அடுத்த வருடந்தானே! விடிந்தால் அதி மனோகரமான தீபா வளிப் பண்டிகையின் ஆரவாரம் இப்போதே பட்டாசின் பேரொலி யாலும், குழந்தைகளின் சந்தோஷ ஆரவாரத்தின் இனிய தொனி களினாலும் எவ்வளவு அற்புதமாயும் மகிழ்ச்சியாயும் விளங்கு கின்றது!

அதோ பாரு.........அம்மா! ஜவுளிக் கடைகளின் வாசலில் ஜனங்கள் நிற்கவும் இடமில்லாது எத்தனை கூட்டம்? பட்டாசு கடைகளில் என்ன கூட்டமும் பேரிரைச்சலும் பாரு. இத்தகைய அருமையான நன்னாளில் அப்பா ஒரு அல்ப விஷயத்திற்காக பிடி வாதம் செய்வது அழகாம்மா! அவருக்கு இன்னமும் நீ எடுத்துச் சொல்லு.........சென்ற தீபாவளியன்று அக்காவும் நானும் எத் தனையோ ஆநந்தமாகப் பூரித்து மகிழ்ந்தோம். இந்த தீபாவளிக்குள் மனிதரிடையே காலச் சக்கரம் எத்தனை விபரீதமாக மாறிச் சுழன்று மனஸ்தாபத்தையும், பிரிவினைகளையும் உண்டாக்கி விட்டது. இதை நினைக்க மிகவும் விசனமாகவே இருக்கிறது. அம்மா! அப்பா இன் னும் வெளியில் போகவில்லை. கடைசி தரமாகச் சொல்லிப் பாரேன். ......நானும் கூட வருகிறேன்'' என்று அழகே உருக்கொண்ட அங் கனமணி யொருத்தி வயது சென்ற தன் தாயை நோக்கிக் கூறினாள்.

தாயார்:—கண்ணே! நமதருமை கிருஷ்ணகுமாரியைப் பிரிந்து நாம் இப்படி மனஸ்தாபத்துடன் இருக்கப் போகிறோம் என்று நான் சொப்பனத்திலும் நினைக்க வில்லை. "ஒன்று நினைக்கின் அது ஒழிந்திட்டோன்றாகும்'' என்ற மூதுரை பொய்யாகுமா? உன் தந் தைக்கு நான் இனி கூற வேண்டியது பாக்கியே இல்லை. அவருக்கிருக் கும் பிடிவாதமும், மூர்க்க சுபாவமும் கடவுளே கொடுத்ததை அக் கடவுளே மாற்ற முடியுமா என்பதும் சந்தேகம். அங்ஙன மிருக்க, நான் என்ன சொல்லித்தான் என்ன பயன்? மனித வாழ்க் கையில் இப்படித்தான் சுகமும் துக்கமும், பிரிதலும் கூடலும் மாறி மாறித் தோன்றும். அதைப் பொறுத்துத் தான் தீரவேண்டும்.— என்று சொல்லிக் கண்ணீர் விட்டாள்.

வஸந்தகுமாரிக்குத் தன் சகோதரி கிருஷ்ணகுமாரியைப் பிரிந்து இத்தனை நாள் இருந்ததைவிட இன்று தான் அதிகமான

விசனமும், பிரிவாற்ருமையும் நன்கு தெரிந்து இளந்தளிர் போன்ற மனத்தை வாட்டுகிறது. மாடி வராண்டாவில் நின்று வீதியை நோக்குகிருள். வீதியில் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் குழந்தைகள் ஆநந்தமாக பட்டாசு சுட்டு இன்புறும் காட்சியின் எழிலைக் கூறத் திறமன்று.

அதைப் பார்க்கப் பார்க்க வஸந்தகுமாரியின் மனம் தன் சகோதரியையே நாடி நின்றது. தன்னிடம் உள்ள ஏராளமான பட்டாசுகளையும், மற்ற வாணங்களையும் கண்ணுல் பார்க்கவும் அவள் மனம் வெறுத்தது. புதிய உடைகள் வீட்டை அலங்கரித்து இருந்தபோதிலும் இவர்களின் மனத்தை அவை மயக்கவில்லை.

ஜவுளிக்கடைக்கும், பட்டாசு கடைக்கும் தன் சிநேகிதைகள் —அக்காளும், தங்கையுமாகவும்—இன்னும் சிலர் குடும்பத்துடனும் ஜோடி ஜோடியாகச் செல்வதைக் காண வஸந்தகுமாரியின் கண்ணில் ஜலம் வந்துவிட்டது. சென்ற வருடம் இதே தீபாவளியன்று தானும் தன் சகோதரியும் களித்த களியாட்டமும், அக்காலையில் தான் கிருஷ்ணகுமாரியைப் பரிகவித்து "அடுத்த வருடம் உனக்குத் தலை தீபாவளியாகவிருக்கும். நீயும் உன் புருஷனும் ஒன்ருக மகிழ்வீர்கள். அப்போது என்னை நினைப்பாயா!" என்று தான் கூறியதும் கண் முன்பு இப்போதே நிகழ்வதுபோலத் தோன்றி விட்டது.

அந்த உணர்ச்சியின் வேகம் சிறு தளிர் போன்ற அவள் இதயத்தைத் தாக்கியதால் மீண்டும் தாயாரிடம் ஓடி வந்தாள். கவலையே வடிவாய் உட்கார்ந்து தீபங்களுக்காக பஞ்சுத் திரி திரித்துக்கொண்டிருந்த ஸாவித்திரி யம்மாளை நோக்கி "அம்மா! நீ அப்பாவிடம் சொல்லமாட்டாயா?...அதோ ... அதோ ... அப்பா டீ சாப்பிட இறங்கி வருகிருர். இப்போது கடைசீதரமாகக் கேட்டுவிடம்மா!" என்று உருகினுள்.

அதே சமயம் திவான் பகதூர் திருவேங்கடம் கடுகடுத்த முகத்துடன் கீழே வந்தார். ஸாவித்திரியம்மாள் வெகு வணக்கத்துடன் அவருக்கு டீயும், பழ வகைகளும் கொடுத்துவிட்டு தியங்கித் தியங்கி நின்றபடியே..."என்ன செய்வேன்,...குழந்தை வஸந்தகுமாரி காலை

முதல் இன்று காப்பிகூடக் குடிக்கவில்லை. நம்மைவிட அவளுக்குத் தான் அதிகமான விசனம் பாதிக்கிறது. குழந்தைக்காகவாவது பெரிய மனது செய்து கிருஷ்ணகுமாரியை ஒரு வார்த்தை கூப் பிட்டு விடுங்களேன்...

என்று முடிப்பதற்குள் திவான் பகதூர் கையில் வைத் திருந்த ஆப்பில் பழத்தை வீசி எறிந்துவிட்டுத் தலையிலடித்துக் கொண்டு "சீச்சீ...மானங்கெட்ட மூதேவிகளே! உங்களுக்குப் புத்தி இல்லையா! ஒரு மனிதனைக் கொலை செய்வதைவிடக் கேவலமாக அவ மானப்படுத்திப் பாதாளத்தில் தள்ளிய அந்த தரித்திர தேவதைக ளின் முகத்திலா என்னை விழிக்கச் சொல்லுகிறீர்கள்? என்னிடம் அதிகப்பிரஸங்கம் செய்யவேண்டாம். வஸந்தகுமாரி சாப்பிடவில்லை என்றால் பட்டினி கிடந்து சாகட்டும். இந்த பசப்பலுக்கு நான் அசைகிறவனில்லை.

ஸாவித்ரி! நான் ஏற்கெனவே சொல்லியதுபோல அந்தக் கிருஷ்ணகுமாரி இறந்து விட்டதாகவே நான் தீர்மானித்து விட் டேன். இனிமேல் இந்த ஜென்மத்தில் அவள் முகத்தில் விழிக்கப் போவதில்லை. எனக் குற்ற இந்த அவமானம் உங்களைப் பாதிக்க வில்லையா! என் ப்ராணன் போகாத குற்றமாய் ஏதோ கூண்டில் உலாவுகிறது. வெளியில் தலை காட்ட வெட்கம் தாங்க முடிய வில்லை

இந்த இன்பபுரி நகரத்தில் நாம் தலைமுறை தத்துவமாக ஓர் சிற்றரசன் போன்ற செல்வாக்குடன் வாழ்ந்து வருவது மல்லாது, என் பாட்டன் தலைமுறை முதல் இந்த நகர பரிபாலன சபையின் அங்கத்தினராய் மிராசுபோல் இருந்து வந்த என்னை இந்த பிச்சைக் காரப் பயல்—யோக்யதை யற்ற ஆண்டி—இவன் பவிஷுக்கு தங் கம் போல ஒரு பெண்ணையுந் தூக்கிக் கொடுத்து, உண்டான சீர் வகைகளையும் செய்து இவனைச் சரிக்குச் சரி சம்மந்தியாக்கிக் கொண்ட சம்மந்தி என்ற ஒரு மரியாதையையும் பார்க்காமல் நெஞ்சு துணிச்சலாக ஏழைகளின் கட்சி என்று ஒரு சோம்பேறி களின் கூட்டத்தைக் கூட்டிக் கொண்டு பயமில்லாது எனக்கு

எதிரில் நின்று என்னைத் தோற்கடித்த சண்டாளனுக்கு இனி நான் மரியாதை செய்வதா......அவன் வீட்டிற்குச் சென்று அழைப்பதா! ஆஹ்ஹா!......என் மனம் கொதிக்கிறது. வயிறு எரிகிறது''. என்று கண்கள் சிவக்க, மீசை துடிக்க, தேகம் ஆத்திரத்தினல் படபடக்கக் கூறிக் கொண்டே, டீ கோப்பையையும், பழத் தட்டையும் மூலைக் கொன்ருக வீசி எறிந்து சின்ன பின்னமாகச் சிதற வடித்தார். சிங்கம் போன்று செய்த கர்ஜனையினல் வீடே அதிர்ந்தது......

அந்த கூடத்துச் சுவரில் மாட்டப் பட்டிருந்த கிருஷ்ண குமாரி, அவளுடைய கணவன், மாமி, மாமன் முதலியவர்களடங்கிய குடும்பப் புகைப்படம் அவர் கண் முன்பு தெரிந்தது. அவரைக் கண்டு எளனமாக நகைப்பது போன்ற உணர்ச்சி தோன்றிவிட்டது. உடனே அடங்காத ஆத்திரத்துடன் பல்லை நெற நெற வென்று கடித்துக் கொண்டே, படத்தைக் கழற்றி முற்றத்தில் வீசி எறிந்து "துலையுங்கள்; துலையுங்கள்.........சரிக்குச் சரியாய் கவுரவமான சம்மந்தம் செய்யாமல் பிச்சைக்கார சம்மந்தம் செய்ததன் பலன் இது தான்.........

பெண்ணும் பெண்ணு.........வயிற்றைப் பற்றி எரிகிறது. ஸாவித்ரீ......வஸந்தகுமாரீ!......இனி இப்பேச்சை என்னிடம் எடுத்தால் நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது. அந்த பாதகப் பெண் என் முகத்தில்—ஏன் என் சவத்தின் முகத்திலும்—விழிக்கக்கூடாது ஜாக்ரதை.........அவள் செத்துவிட்டாள் என்று நான் தலை முழுகிவிட்டேன்' நீயொரு பெண்ணும், குல சேசரன் ஒரு பிள்ளையுந்தான் எனக்குப் பிறந்ததே என்று தீர் மானித்து விட்டேன். என் கோபத்தைக் கிளற வேண்டாம்...... இனி அவர்களுக்கும், நமக்கும் சாவுமில்லை; வாழ்வுமில்லை. எல்லாம் முடிந்தது.

பெண்ணின் புத்திகெட்டத்தனத்தினலன்றே என் கதி இப்படியாயிற்று. அந்த பிச்சைக்காரப் பையனுடன் அதிகப்ரஸங்கியாய்ப் பேசிப் பழகித் தன் மனத்தைத் தளர விட்டு விட்டு, நம் மானத்தையும் போக்கிவிடும் நிலைமைக்கு வந்து விட்டதாலன்றே அந்த மூதேவிகளின் சம்மந்தம் செய்ய நேர்ந்தது!. வயது சென்ற

பெண்களுக்கு விவாகம் செய்வதென்ருல் இந்த மாதிரி ஆபத்துக்கள் நிறைந்திருப்பதால்தான் அக்காலத்தில் சிறிய வயது விவாகத்தை ஆதரித்திருக்கிருர்கள் பெரியார். தன் சுய புத்தியுடன், தன்னடக்கமாயில்லாது போய் விட்டதால் தான் காதலாம்..........காதல்.........காதலைப் பார்க்க வில்லை! காரியுமியும் காதல்......உண்டாகி நம்மையே கிணற்றில் தள்ளி விட்டது.

காதலிக்கப்பட்டவனுவது நல்ல செல்வமும், நாணயமும் நாகரிகமும் நிறைந்த குடும்பத்தினனுகவிருக்கலாகாதா! பங்கியடித்தவன் போல மாமனுர் தடியன்......குடிகாரன்போன்று காதலனும்......காதகன்.........சூனியக்காரியைப் போல மாமியார். சித்ராங்கி நீலியைப்போல மற்றவர்கள். என்ன அழகு சம்மந்தம்.........ஐயோ......அந்த விவாகத்தைச் செய்யாதிருந்தால் பெண்ணை அடக்க முடியாது போய்விடுமே......பெண் எங்கே கெட்டுப்போய் ஓடி விடுவாளோ!.........எங்கே பேராபத்தும் அவமானமும் வந்து விடுமோ என்று பயந்து போய் அந்த பாழாய்ப் போன சேற்றில் கால் வைத்தேன். அச்சேறு என்னையே இழுத்து விட்டது. எக்கேடாவது கெட்டு விடட்டும் என்றிருக்காமல் போனது என் முட்டாள்தனம்!......இத்தகைய கொடிய ஜெந்துக்களுக்குத் தலை தீபாவளியாம்.........கால் தீபாவளியாம்......இனி சாவு தீபாவளிதான் மிச்சம்.........

நினைத்தால் பகீரென்கிறது. கிருஷ்ண ஜயந்தியன்று பிறந்த அருமை மகளாயிற்றே என்று கிருஷ்ணகுமாரி என்று பெயரிட்டுக் குலாவியதற்கு க்ருஷ்ண சர்ப்பம் போல என்னையே கடித்துக் கொல்ல வந்துவிட்டது. எத்தனையோ வருடமாக இந்த நகர சபையில் எதிர்ப்பே இல்லாது ஏகாதிபத்யம் போல ஸ்தானம் வகித்து வந்த எனக்கு இந்த பிச்சைக்காரப் பயல் எதிரில் நின்று, எனக்கு 800 ஓட்டும் அவனுக்கு 3000 ஓட்டும் பெற்று ஜெயித்தான் என்ருல் இதை விட அவமானம்......இதை விட ஆத்திரம்........இதை விட இன்னும் வேறு என்ன வேண்டும்......என்று பல்லை நெற நெற வென்று கடித்து கட்டு மீறி அபாரமாய்ப் பொங்கிவரும் ஆத்திரத்துடன் கூறிக் கொண்டே போய்விட்டார்.

திவான் பகதூர் திருவேங்கடம் என்றும் சற்று கடுபிடி மனிதர். முன்கோபமும், ஆத்திரமும், டாம்பீகமும், தடபுடலும் அவருக்குக் கவசம் போன்றவை. அவர் சதா அதிகார தோரணையி லேயே செல்வாக்காக வாழ்ந்தவர். மனைவியாயினும், மற்ற யாராயி னும் தனக்குக் கீழ்ப்படிந்த அடிமைகள் என்ற ஒரே நோக்கம் கொண்டு நடப்பவர். இவர்களுடைய தலை முறை தத்வமான நகர பரிபாலன ராஜ்யாதிகார ஏக சக்ராதிபத்யத்தின் பலனால் ஜனங்கள் அடைந்தலாபமோ, நஷ்டமோ ஒன்றையும் அவர் அறிந்ததில்லை.

எதிர்த்து நிற்க அதுபரியந்தம் யாரும் துணிந்ததே கிடை யாது; ஏனெனில் அவருடைய முரட்டுச் சுபாவத்தையும், செல்வச் செருக்கையும் வெல்லும் மனிதர்களே இல்லை. மனமும் தைரிய மும் இருந்தாலும் அதற்கு ஆதரவு கிடைக்காமையினால் இவர் சுயேச்சையாகப் பதவி வகித்து வந்தார். நகர சபையின் பதவி யினால் கை கட்டி, வாய் புதைத்து சதா காவலாளிகளும், ஏவலாளி களும் வீட்டில் ஆஜராயிருப்பார்கள். தான் பெரிய மனிதன் என்ற தற்கு மேல் இன்னொருவன் இருக்கிறான் என்று சொப்பனங் கூடக் கண்டால் சகிக்க மாட்டார்.

அத்தகைய பகதூர் இப்போது தன் சம்மந்தியாலேயே எதிர்க்கப்பட்டுத் தோல்வியும் அடைந்தார் என்றால், அதைவிட அவமானமும் ஆத்திரமும் வேறு என்ன வேண்டும்? தன்னைத் தவிர எல்லோரும் முட்டாள்கள். அந்தஸ்தில்லாதவர்கள் என்ற மனப் பான்மையுடனேயே இவர் தன் சம்மந்தியையும் நோக்கினார். தன் மகள் அந்த பையனையே மணந்து கொண்டால் தான் உயிர் வாழ் வேன்; இல்லாவிடில் உயிரை விடுவேன் அல்லது அவனுடன் ஓடிப் போய் விடுவேன் என்ற மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டு விட்டதால் எத்தனை அதிகார தோரணை இருந்த போதிலும் அவ மானத்திற்கும், குடும்பத்து கவுரவத்திற்கும் அஞ்சி சாதாரண மான அந்தஸ்து உள்ள அவர்களின் சம்மந்தத்தைச் செய்து தீரும் படியாகி விட்டது.

அவனுக்குப் பெண்ணைக் கொடுத்து விட்டு அவனை வீட்டோடு கொண்டு வைத்துக் கொண்டு, நகர சபையில் இது வரையில் தன்

பந்துக்களுக்கும், சினேகிதர்களுக்கும் எத்தனையோ பேர்களுக்கு வேலை செய்து வைத்தது போல அவனுக்கும் செய்து வைத்துக்கொண்டு, ஒரு லக்ஷம் ரூபாய் பெண்பேரில் எழுதிவைத்து விடலாமென்று எண்ணினர்.

தீராத விதியாக அந்த சம்மந்தத்தைச் செய்தார். தனக்குச் சரியாக லக்ஷக்கணக்கில் பணமில்லாத சம்மந்தத்தை இவர்கள் செய்வதுபற்றி ஊர் ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களுக்குத் தம் பெண்ணின் ரகஸியத்தை மறைத்து, "இந்த பெண் ஒரு சமயம் ப்ரமாதமாய் உடம்புக்கு வந்து படுத்திருந்த சமயம் இவள் பிழைத்தால் போதும். ஒரு ஏழை ப்ரம்மச்சாரியைப் பார்த்து கன்னிகாதானம் செய்து கொடுப்பதாகப் பிரார்த்தனை செய்து கொண்டோம். அதனல் இம் மாதிரி செய்கிறோம்" என்று கூறிக் கொண்டார்கள்.

சம்மந்திகளுக்குச் சரியானபடி கல்யாணத்திலேயே மரியாதை செய்யாமல் மிகவும் அலக்ஷ்யப்படுத்தி வரிசைகள் வைத்தது முதல் சகலத்திலும் நடத்தியதானது சம்மந்திகளின் மனத்தைப் புண்படுத்தியது. யாராவது பந்துக்கள் கேட்டால் "இவர்களுக்கு இது போதாதா! மாப்பிள்ளைக்குத்தான் செய்யவேண்டும், இவர்களுக்கெதற்குச் செய்வது?" என்று சொத்தைப் பாக்கும், சுரை இலை போன்ற வெத்திலையும் 5, 6 வாழைப் பழங்களும், சொட்டைகள் விழுந்து நசுங்கிப்போன பாத்திரமும் சீர் வைத்து ஏளனம் செய்தார்கள்.

இவைகளை எல்லாம் பார்த்து அவர்கள் மனம் புழுங்கியது. "நமக்கு இவர்கள் வரிசைகள் வைக்கவில்லை என்று அழவில்லை. இப்படி மரியாதையின்றி மட்டந்தட்டுவதுதான் மனங்கொதிக்கிறது." என்று கல்யாண காலத்திலேயே வருந்தினர்கள். இவ் வருத்தம் அவர்களுக்கு வளர்ந்துகொண்டே இருந்தது.

கல்யாணப் பிள்ளை பார்ப்பதற்கு ஆடம்பரமும் டம்பமும் இல்லாது சாதாரண வணக்கத்தோடும் பெரியாருக்கு அடங்கி சாந்தமூர்த்தி என்ற தன் பெயருக்கு மிகவும் பொருத்தமாய் எப்

போதும் சாந்தமாகவே ஒழுக்கத்துடன் இருப்பவன். அவன் தன் மாமஞரின் கருத்தை முதலில் அறியமாட்டான். கல்யாணத்திற்காக வந்திருந்த தன் சொந்தக்காரர்களுக்கு வாங்கிய உயர்ந்த ஜவுளிகளைவிடக் குறைவாக தன் பெற்ருேர்களுக்குத் தன் மாமஞர் வாங்கி மட்டந்தட்டியதை சாந்தமூர்த்தி அறியாமலில்லை.

விவாகத்திற்குப் பிறகே மாமஞரின் கருத்தை சாந்தமூர்த்தி நன்கு தெரிந்துகொண்டான். தன் கண்ணினும் இனிய பெற்ருேரைப் பிரிந்துவிட்டு போலி ஆடம்பர வாழ்க்கையில் மூழ்க அவனுக்கு ஒருபோதும் இஷ்டமில்லை. மாமஞர் தன் கருத்தைத் தெரிவித்தபோது அதற்குக் கண்டிப்பாய் மறுத்ததோடு 'உங்களுக்கு இஷ்டமிருந்தால் உங்கள் பெண்ணை எங்கள் வீட்டிற்கு அனுப்புங்கள்; இல்லையேல் உங்களிடமே இருக்கட்டும்; எனக்கு அவசியமில்லை'' என்று முடுக்காயும், கண்டிப்பாயும் கூறிவிட்டான்.

கிருஷ்ணகுமாரி தன் காதலனைத் தன்னுடன் கூடவே தாய் வீட்டிலிருக்கும்படி வேண்டிஞள். அதற்கு அவன் கண்டிப்பாய் மறுத்துவிட்டதால் தன் காதலனைப் பிரிய இஷ்டமின்றி அவளும் அவனுடன் கூடவே சென்றுவிட்டாள். திருவேங்கடத்திற்கு இதுவே ஒரு பெரிய மனக்குறையாயும் ஆத்திரமாயுமிருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் இருவருக்கும் மிக்க வாக்குவாதங்கள் நடந்தன. 'அல்பம், பிச்சைக்காரர்கள்,' கண்ணியமற்றவர்கள் என்றெல்லாம் மாப்பிள்ளையையும் சம்மந்திகளையும் திட்டிவிட்டார். அதன் பிறகு திரும்பியும் பார்க்கவில்லை.

சில மாதத்திற்கெல்லாம் நகர சபைத் தேர்தல் வந்தது. சாந்தமூர்த்தியின் பிதாவாகிய சங்கரனுக்கு ஏற்கெனவே இருந்த த்வேஷத்திஞலும், ஆத்திரத்திஞலும் பொது ஜனங்களின் ஆதரவிஞல் தானே எதிர்த்து நின்று, தங்களை அவர்கள் செய்த அவமானத்திற்குப் பதில் இவ் வகையில் பெரிய அவமான மடையச் செய்ய வேண்டுமென்ற ஓர் உறுதியான எண்ணமும் ஆவேசமும் உண்டாகிவிட்டன. பணத்திற்குப் பலமா! ஏழைகளாயினும் நாணயத்திற்கும், ஒழுக்கத்திற்கும் பலமா! என்றதை நன்கு விளக்கிவிடவேண்டுமென்று

தோன்றிவிட்டதால் அவ் வூரிலுள்ள வியாபாரிகள் ஏழைத்தொழிலாளிகள் முதலியவர்களின் அபாரமான பக்க பலத்தினால் ஏழைகளின் கட்சியின் சார்பாக சங்கரன் தைரியமாகத் துணிந்து எதிர்த்து நின்றார்.

சம்மந்தியே திவான் பகதூரை எதிர்த்து நிற்பதைக் கண்ட ஊரார், கோமுட்டி சாட்சியைப்போல "எத்தனை காலமானாலும் இந்த திவான் பகதூருக்கேதான் உரிமைச் சீட்டு எழுதி இருக்கின்றதா என்ன! இத்தனை வருடங்கள்தான் பதவி வகித்தாயிற்றே! வேறு மனிதன்தான் வரட்டுமே" என்று சிலரும், என்னவிருந்தாலும் இத்தனை பெரிய மனிதர் அதிலும் சம்மந்தி தலைமுறை தத்துவமாக இருக்கும் மனிதர், யோக்யதை வாய்ந்த மனிதரைப் போய் இவன் எதிர்ப்பதாவது என்று சிலரும், இவரும் விட்டுக் கொடுக்கலாம்; தன் பெண்ணைக் கருதி விலகிக்கொள்ளலாம்... அவரும் இந்த சனியன் நமக்கெதற்கு என்று பேசாமல் போகலாம். இருவரும் போட்டியிடுவது மிகவும் அசங்கியமாகவன்றோ இருக்கிறது என்று சிலரும் தம்தம் இஷ்டப்படிக்குப் பேசிக்கொண்டார்கள்.

ஆனால் அபேக்ஷகர்களாக நிற்கும் இருவரும் இவ் வார்த்தைகளைச் சற்றும் காதில் வாங்கவில்லை. பொதுவாக உள்ள யாராவது திவான்பகதூரை 'உங்களுக்குக்கூட எதிர்ப்பு இருப்பது வெகு ஆச்சரியமாயிருக்கிறதே...ஏன் நீங்கள்தான் விட்டுக் கொடுக்கலாகாதா!' என்று கேட்டால், அவருடைய கண்கள் கோவைப் பழமாகச் சிவந்து, கோபம் உச்சஸ்தாயியை எட்டிவிடும். "அந்தப் பயலை ஒரு ஆட்டு ஆட்டிவிடா விட்டால் என் பெயர் திருவேங்கடமல்ல. அவன் சம்மந்தி என்று இனி சொன்னால் என் தேகமே பற்றி எரிகிறது. என் மகள் செத்துவிட்டாள்" என்று கண்டிப்பாய்க் கூறிவிடுவார்.

சங்கரனைக் கேட்டால் "ஏனைய்யா! இந்த ஸ்தானங்களுக்கு ஒருவரே சாச்வதமாயிருக்கவேண்டுமென்று முறியல் சீட்டு எழுதியிருக்கிறதா? நான்தான் பிச்சைக்காரப் பயல், அல்ப நாய். கனம் பொருந்திய திவான் பகதூராகிய யானைக்கு இந்த நாயிடம் பயம்

என்ன? நான் பாட்டில் நின்று குரைத்துவிட்டுப் போகிறேன்.''
என்று கூறிவிடுவார்.

மும்முரமாக இரு கக்ஷியினரும் பல கூட்டங்கள் கூட்டியும், நோட்டீஸ்கள் போட்டும், வீடுவீடாகப் பிரசாரம் செய்தும் வேலை செய்தார்கள். திவான் பகதூர் திருவேங்கடம் கணக்கற்ற லஞ்சம் வாங்கிய ஊழல் முற்றும் வெளியில் வந்துவிட்டது. அவரும் சளைக்காமல் 20 ஆயிரம் ரூபாய் வரையில் லஞ்சம் கொடுத்தும் ஏழைகளை மிரட்டி உருட்டி அதிகாரம் செய்தும் பலவிதத்திலும் அரும் பாடு பட்டுப் போராடினர்.

அவரிடம் லஞ்சம் வாங்காது மறுத்துவிட்ட ஏழைகள் எத்தனையோ பெயர்கள். பணத்தைத் தாராளமாக வாங்கிக்கொண்டு சங்கரனுக்கே வாக்குக்கொடுத்த ஏழைகளும் எத்தனையோ பேர்கள். பட்ட பாடெல்லாம் வீணுகிவிட்டது. தேர்தல் நடக்கும்போதே தனது தோல்வியைத் தெரிந்துகொண்ட திருவேங்கடம் அன்றே தன்னுடைய ஆத்திரத்தையும், அவமானத்தையும் சகிக்காமல் தனது புராதனமான பட்டிக்காட்டுக் கிராமத்திற்குப் போய்விட்டார்.

தேர்தல் முழக்கத்தின் ஜெயகோஷம் அண்டத்தை யளாவுகிறது. தன் மகளுடைய வீட்டையே நெருப்பு வைத்துக் கூண்டோடு ஒழித்துவிடலாமா என்றும் திருவேங்கடமும், அவருடைய திருக்குமாரரும் எண்ணினர்கள். சில சோதாக்களை விட்டு சங்கரனையும், சாந்தமூர்த்தியையும் நன்ருக உதைத்துக் காலை ஒடித்துவிடவும் ஏற்பாடு செய்தார்கள். அத்தனை ஆத்திரம் கரைபுரண்டுவிட்டது. தன்னுடைய தோல்வியைக் கேட்ட உடனே திருவேங்கடத்தின் மூளையே கலங்கி சித்தப்ரமை உண்டாகிவிட்டது. எத்தனையோ வைத்தியங்கள் செய்தும், மலையருவிகளில் நீராட்டியும் சில மாதங்கள் சென்ற பிறகுதான் சற்று மூளை சரியாகியது. அதன்பிறகே ஊருக்குத் திரும்பி வந்தார்.

இத்தகைய நிலைமையில் இருக்கும்போது தீபாவளிப் பண்டிகைக்கு மாப்பிள்ளையை அழைக்க அவர் இசைவாரா! இசைந்தால் கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதித்துவிட

மாட்டானு! ஸாவித்திரிக்கும், வசந்தகுமாரிக்கும் தேர்தல் விஷயமான ஆத்திரம் ஒருபுறம் இருந்தபோதிலும், கிருஷ்ணகுமாரியின் பாசம் மட்டும் விடவில்லையாதலால் அவர்கள் மனம் மட்டும் தத்தளித்தது.

ஸாவித்திரியம்மாள் தன் புருஷனுக்குத் தெரியாமல் புடவை வேஷ்டிகள், சீர் வகைகள் முதலியவற்றைத் தன் ஆட்களிடம் கொடுத்து, ரகஸியமாக கிருஷ்ணகுமாரியின் வீட்டில் கொண்டு கொடுத்துவிட்டு வரும்படியாக அனுப்பினுள். இது புருஷனுக்குத் தெரிந்தால் என்னவாகுமோ என்று பயமும் நடுக்குகிறது. ஆனுல் பெற்ற பாசம் பயத்தையும் பாராது துணிந்து அனுப்பிவிட்டாள்.

திருவேங்கடம் வீதிப் பக்கத்து ஹாலில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக்கொண்டிருக்கையில் கிஷ்ணகுமாரிக்கு அனுப்பிய வரிசைகள் முற்றும் அவர்கள் திருப்பியடித்துவிட்டதை ஆட்கள் கொண்டுவந்ததைப் பார்த்துவிட்டார். அவ்வளவுதான் வந்துவிட்டது ஆவேசம். "இவைகளெல்லாம் ஏது? எங்கே இருந்து வருகிறது?" என்ருர். எஜமானனிடம் பயத்தினுல் அவர்கள் உண்மையைக் கூறிவிட்டார்கள்.

திருவேங்கடம் அடக்கமாட்டாத ஆத்திரத்துடன் புலி போலப் பாய்ந்து தட்டுக்களையும், ஆட்களையும் ஒரு கை பார்த்து மூலைக்கொன்ருக அனுப்பிவிட்டு, ஆக்ரோஷத்துடன் உள்ளேசென்று "திருட்டு நாயே! அல்ப புத்தி மூம்தவியே! இத்தனை கொழுப்பா உனக்கு? இம்மட்டும் தைரியமா உனக்கு?" என்று கண்மூடித்தனமாய் தடார்புடார் என்று ஸாவித்திரியை அடித்துத் தலைமயிரைப் பிடித்து உலுக்கி, ஓர் மூலையில் தபீரென்று தள்ளிவிட்டார். இந்த பயங்கரச் செய்கையைக் கண்டு கதிகலங்கிப்போய்த் தடுக்க வந்த வஸந்தகுமாரியின் மெல்லிய சரீரமும் ஒரு மூலையைத் தேடிக் கொண்டு உருண்டு ஓடியது. வீடே அல்லகல்லோலமாயும், ஆத்திர நிலையமாயும் ஆய்விட்டது. வஞ்சம் மிஞ்சினுல் வாஞ்சையும் நஞ்சாம். என்பது சரியாகிவிட்டது.

## 2-வது அதிகாரம்

### வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்

கிருஷ்ணகுமாரியின் மனத்தில் மட்டும் சந்தோஷம் குடிகொண்டுவிட்டதா? ஒரு நாளும் இல்லை. வஸந்தகுமாரி நினைத்து உருகுவதுபோலவே பழைய நினைவுகளை அவளால் விலக்கவே முடியவில்லை. தான் காதலையே முக்யமாகக் கருதி விவாகம் செய்துகொண்டு வரும்போது தங்கள் குடும்பத்தில் இத்தனை மாறுதல்கள் ஏற்பட்டு பெரும் பகையாக மாறிவிடும் என்று சொப்பனத்திலும் நினைக்கவில்லையாதலால் நாட்கள் ஏற ஏற அவள் தன் பெற்றோரையும், சகோதரி சகோதரனையும் பார்க்காது விரோதிகளைப்போலப் பிரிந்திருப்பதும், தந்தைக்குத் தன் மாமனாரால் ஏற்பட்ட அவமானமும் அவளைப் பாதிக்காமலில்லை. ஆனால் இனி என்ன செய்வது?

இந்த சம்மந்தம் வேண்டாம். நமக்குத் தகாது என்று தந்தை பலதரம் கூறியபோதெல்லாம் கேட்காமல் பிடிவாதமாகச் செய்துகொண்ட பிறகு இனி பழங்கதைகளை எண்ணிப் பிரயோஜனம் யாது? வாய் திறக்கவும் யோக்யதை யற்றுவிட்டது. பழைய மாதிரி வஸந்தகுமாரியும் தானும் களங்கமற்ற மனத்துடன் கூடி விளையாடி மகிழ்வது சொப்பனத்திலும் இல்லையல்லவா...தாயின் மனம் இன்று எப்படி இருக்கும்? வஸந்தாவின் மனம் எவ்வாறு தவிக்கும்? தந்தையின் ஆத்திரம் எத்தகைய நிலையில் இருக்கும்...உம்... எல்லாம் வேளையின் கூற்று...

வரிசைகளைத் திருப்பி யனுப்பிவிட்டாளேயன்றிக் கண்ணில் நீர் முத்து முத்தாகத் ததும்பிவிட்டது. "எத்தனையோ ஆசையுடன் அனுப்பிய பொருளைத் திருப்பியனுப்பும் காலம் வந்துவிட்டதே!

நாளை தலைதீபாவளி எவ்வளவோ சந்தோஷமாயும், சிறப்பாயும் கொண்டாடப்படும் என்று விவாக காலத்தில் நினைத்தது முற்றும் வீணாகி மலை போன்ற மனஸ்தாபம் வந்துவிட்டதே!'' என்று தனக்குள் மிகவும் வருந்துகிறாள்.

அந்தி நேரம். எங்கு பார்த்தாலும் கோலாகலமும், சந்தோஷமும் குடிகொண்டிருக்கிறது. பட்டாஸின் வெடிகளும், பாணங்களின் அழகும் கண்ணைக் கவருகின்றன. குழந்தைகளின் குதூகலமோ சொல்ல முடியாது.

ஒவ்வொரு குழந்தையும் ''எப்போது மேளம் வாசிக்கும்? எப்போது தீபாவளி ஆரம்பமாகி தீபாலங்காரங்கள் செய்வார்கள்? எப்போது நலங்கிட்டுக்கொண்டு எண்ணெய் தேய்த்துக்கொள்வது? புதிது கட்டிக்கொள்வது? பக்ஷணங்கள் தின்பது. பட்டாசு சுடுவது?'' என்றவை போன்ற எண்ணற்ற ஆநந்தகரமான எண்ணங்களுடன் தூக்கமும் பிடிக்காது புரளுகிறது.

இரவு இரண்டு மணி முதலே மேளவாத்ய கோஷங்கள்—ஸ்வஸ்வரமும், அபஸ்வரமும் கலந்த பலவிதமான சங்கீத முழக்கம்—கிளம்பிவிட்டன. எல்லோர் வீட்டிலும் தீபாலங்காரங்களும், முத்து உருளுவது போன்ற கோலமும், மாவிலைத் தோரணங்களும் ப்ரம்மானந்தமாக ப்ரகாசிக்கின்றன. மங்கள ஸ்நானமும், ஸ்வாமி பூஜையும் பலகாரப் புசிப்பும் புதிய ஆடைகள் அணிந்து அலங்காரம் செய்துகொண்டு பட்டாஸ் வெடிப்பதும் ஆநந்தமே உருவாய் எங்கு பார்த்தாலும் ஜொலிக்கின்றன.

தம் தம் சொந்தக்காரர்களையும், சிநேகிதர்களையும் ஒருவருக்கொருவர் பார்த்து ''கங்கா ஸ்நானம் ஆயிற்று!'' என்று விசாரிப்பதும், பெரியவர்களாயிருந்தால் சேவிப்பதுமாக எல்லோரும் வெகு குதூகலமாக விளங்கினார்கள். சங்கரன் வீட்டிற்கும் அவருடைய சிநேகிதர்களும், பந்துக்களும் வந்தார்கள். வழக்கப்படி 'கங்கா ஸ்நானம் ஆயிற்று?' வென்று குசல ப்ரசனம் செய்த பின்னர் 'என்னடா! மூர்த்தி இங்கேயே இருக்கிறானே! மாமனார் வீட்டிற்குப்

போகவில்லை?.........இந்த தலை தீபாவளிக்குக் கூட அந்த மனுஷன் கூப்பிட வில்லையா! என்ன அனியாயம்! ஆயிரந்தான் மனஸ்தாபம் இருந்தாலும் இத்தகைய சமயங்களில் கூடவா இதையே பாராட்டு வார்கள்? மனிதத்தன்மையே இல்லையே.........இது வெறும் வீண் மனஸ்தாபமல்லவா! அவருக்கே இந்த நகரசபை ஸ்தானத்தை பரம் பரை சொத்தாக சிலா சாசனம் செய்திருக்கிறார்களா?......என்று கேட்டார்கள்.

சங்கரன் "காலச்சக்கரம் சுழல்வதைத் தடுக்க யாரால் முடியும்? அத்தனை பெரிய சம்மந்தம் செய்து விட்டால் இப்படித்தான் ஆகும். விரலுக்குத் தக்க வீக்கம் வீங்கினல்தான் சரியாகும். அவர் களின் காலிலேயே சரணுகதி செய்ய யார் விரும்புவார்கள்? அவர்கள் எப்படியாவது போகட்டும். கிருஷ்ணகுமாரி மிகவும் புத்திசாலி, நல்லவள் அதுபோதும் என்றும் கர்வத்துடனிருப்பவர்களைக் கடவுள் சற்று மட்டந் தட்டாமலிருப்பாரா?" என்றார்.

கிருஷ்ணகுமாரிக்கு அந்த வார்த்தைகள் முற்றும் மனத்தைத் துளைத்து வேதனை செய்கின்றன. ஒவ்வொரு விநாடியும் அவள் தங் கையையும், தாயையும் நினைக்காமலிருக்க முடியவில்லை. சென்ற வரு டம் இத்தனை நேரம் தானும் தன் தங்கையும் எத்தனையோ சங் தோஷமாக விருந்ததெல்லாம் கண் முன்பு தோன்றி அவளை யொரு கண நேரம் தம்பிக்கச் செய்தன.

அச்சமயம் அங்கு வந்த சாந்தமூர்த்தி குமாரியின் மனோ நிலையை அறிந்து கொண்டான். "கிருஷ்ணு! என்ன யோசனை செய் கிறாய்? உன் சடலம் இங்கும், ஜீவன் அங்குமாக விருக்கிறாயா!...... நான் உன்னைத் தடை செய்யவில்லை......வேண்டுமாயின் நீ அங்கு சென்று உன் தாயையும் சகோதரியையும் பார்த்துவிட்டு வா" என்று வெகு சாந்தமாகக் கூறினன்.

கிருஷ்ணகுமாரி மிகுந்த ப்ரேமையுடன் பேசத்தொடங்கி "நாதா! என்னை வேடிக்கை செய்கிறீர்களா! நான் அத்தனை புத்தி கெட்ட முட்டாளா! தங்களின் இணையற்ற அன்பை விட எனக்கு

வேறொன்றும் பெரிதல்ல. அரும் பாடுபட்டுப் பெற்று வளர்த்த தந்தையே என்னை இறந்ததாக எண்ணித் தலை முழுகி விட்டேனென்று பறை சாற்றும் நிலைமை ஏற்பட்ட பிறகு இனி அங்கு நான் கால் வைப்பேனு? என் தந்தை கூறியதைப் போல, என்னுயுள் முடிந்தாலும் நான் இனி அங்கு கால் எடுத்து வைக்கமாட்டேன். இது நிச்சயம். எனக்கு என் காதல் தெய்வமாகிய நீங்கள்தான் ப்ரதானம்.'' என்று ஒருவிதமான உணர்ச்சியுடன் கூறினுள்.

சாந்தமூர்த்தி அதற்குமேல் அவளிடம் ஏதும் பேசவில்லை. தன் வேலையாய்ப் போய்விட்டான். கிருஷ்ணகுமாரியும் தான் இன்று விசனத்தை அதிகமாகப் பாவித்தால் தன் மாமி மாமன் என்ன நினைப்பார்களோ வென்ற யோசனையுடன் தன் வேலையைச் செய்யப் போய்விட்டாள்.

* * * * *

திவான் பகதூர் வீட்டில், அவர் தலைகால் தெரியாத ஆவேசத் துடன் ஸாவித்திரியம்மாளை உதைத்துத் தள்ளிய வேகத்தில் அந்த அம்மாள் ஓடி தலை குப்புற ஒரு கண்ணுடி பீரோவின்மீது தபாரென்று மோதியடித்துக்கொண்டு விழுந்ததில் கண்ணுடி சுக்கல் நூறுக உடைந்து அந்தம்மாளின் தலையிலும் முகத்திலும் பொத்தி ரத்தம் ஓட வாரம்பித்தது. ப்ரக்ஞையற்றுவிட்டாள்.

இந்த கோபம் பாபம் சண்டாளம் என்றபடி தலைகால் தெரி யாத ஆத்திரத்தின் அலங்கோலத்தைக் கண்ட வஸந்தகுமாரியின் நெஞ்சு பதறித் தவித்து "ஹா! அம்மா! அம்மா!'' என்று அலறி யடித்துக்கொண்டு ஓடி வந்து தாயைத் தூக்கிக் கிடத்தியபடியே கூச்சலிட்டாள். திருவேங்கடத்தின் ரத்தக் கொதிப்பில் மீண்டும் ஆத்திரமும் ஆவேசமும் தலைதூக்கி யாடுகின்றன. குலசேகரன் ஓடி வந்தான்.

உடனே டாக்டரை வரவழைத்து ஸாவித்திரிக்குத் தக்க சிகிச்சைகள் செய்து வெகு ஜாக்ரதையாகப் படுக்கவைத்தார்கள். திருவேங்கடத்திற்குத் தான் கண்மூடித்தனமாக செய்துவிட்ட பெரிய குற்றத்தினுல் இவ்வித பேராபத்து நேர்ந்துவிட்டதே என்கிற விசனகரமான உணர்ச்சி தோன்றுது, அந்த சம்மந்தி படு

பாவிகள்...மாப்பிள்ளைச் சண்டாளன்...பெண்ணான பெரும் பழையாளி இவர்களால்தான் தனக்கு ஆபத்து நேர்ந்துவிட்டதாகவே இன்னும் அதிகமாக அவர்களைப் பகைக்கலானார்.

குலசேகரனும் தந்தையின் போக்கிலேயே செல்பவனாகையினால் அவனும் அவர்களைக் கண்டபடி திட்ட வாரம்பித்தான். வஸந்தகுமாரிக்கோ தன் சகோதரி வீட்டாரால் தன் தந்தைக்கு ஏற்பட்ட பெரிய அவமானத்தினால் சற்று கோபம் இருப்பினும், அதையே ஓர் தீராத பகையாகக்கொண்டு தன் தந்தை இவ்விதம் செய்துவிட்டாரே என்ற ஆத்திரமும் விசனமும் அவளை வதைக்கின்றன.

தன் தந்தையின் ஆவேச அரக்கனின் தாண்டவம் ஒரு புறம்! அண்ணனின் கடுஞ்சீற்றம் ஒரு புறம், தாயின் நிலைமையின் சங்கடம் ஒரு புறம் ஆக மூன்றும் பாதிக்க மனங் கலங்கிக் கண்ணீர் விட்டவாறு "அம்மா! அம்மா!" என்று கதறுகிறாள். திவான் பகதூரின் சொந்தக்காரர்களுக்கு இந்த விஷயம் தெரிந்ததும் விசாரிக்க வந்துவிட்டார்கள். மகா புத்திசாலியாகிய வஸந்தகுமாரி, நடந்த விஷயங்களைக் கூறி தன் தந்தையின்மேல் வெறுப்பையும், அசூயையும் உண்டாக்காமல் அவற்றை மறைத்து, தானே தலை சுற்றி மயக்கமாகக் கீழே விழுந்துவிட்டாள் என்றும் அந்த வேகத்தில் அடி பட்டுவிட்ட தாயும் கூறிவிட்டாள். ஸாவித்திரியின் நிலைமையைக் கண்டு பயந்தவாறு "அம்மா வஸந்தகுமாரி! கிருஷ்ணகுமாரிக்குச் சொல்லியனுப்பினீர்களா! அவளும் வந்து பார்க்கட்டுமே...இவளுடைய நிலைமையைக் கண்டால் பயமாகவும், கவலைக்கிடமாகவும் இருக்கிறதே" என்றார்கள்.

இந்த வார்த்தை எங்கே தன் தகப்பனாரின் காதில் விழுந்துவிடப் போகிறதோ, இன்னும் ஆத்திரம் அதிகரித்துவிடுமோ! என்ற பயம் நடுக்குகிறது. சற்று தூரத்தில் சாய்வான நாற்காலியில் பத்திரிகையைப் புரட்டிக்கொண்டு திவான்பகதூர் உட்கார்ந்திருந்தார். பத்திரிகையில் பொது ஜனங்களில் சிலர் சங்கரனின் உத்ஸாகமான உழைப்பையும், அவர் வெகு ச்ரத்தை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு தெருச் சாக்கடைகளையும் குழாய்களையும்

தெருவிலுள்ள கக்கூஸ்களையும் தானே நேரில் சென்று பார்வையிட்டு ஆட்களைக் கொண்டு வெகு சுத்தமாயும், ஜனங்கள் மெச்சும்படி விரும்பத்தக்க விதமாயும் வேலையைச் செய்விப்பதோடு, வீட்டுக்கு வீடு சென்று வேண்டிய வசதிகளைத் தானே விசாரித்துச் செய் வதையும் அதேபோல ஒவ்வொரு நகர சபை பள்ளிக்கூடத்துக்கும் சென்று தானே நேரில் சகலத்தையும் கவனித்து வேண்டிய வசதி களைச் செய்தும், குறைகளை நிவர்த்தித்தும், இதுபோல சகல காரியங் களையும் வெகு அக்கரையுடனும், சந்தோஷத்துடனும் செய்வதா னது மிகவும் மெச்சிப் போற்றத் தகுந்தது'' என்றும்,

''இதுவரையில் எந்த கவுன்ஸிலரும் இம்மாதிரி ஒருபோதும் செய்ததே இல்லை.'' என்றும் ''ஆடம்பரமற்ற அவருடைய எளிய வாழ்க்கையையும், தொழிலாளர்களிடம் உள்ள விச்வாசத்துடன் உழைக்கும் உழைப்பையும் வெகுவாய்க் கொண்டாடி சுமார் நாலு காலம் எழுதி, சங்கரனின் புகைப் படத்தையும் ப்ரசுரித்திருந்தது.

இதைப் படித்ததும், புகைப் படத்தைப் பார்த்ததும் தன்னையே மறந்த ஆவேசமும் மிதமிஞ்சிய கோபமும் பொங்கி விட்டது. வயிற்றில் பற்றி எரிகிறது. நெஞ்சு பிளந்துவிடும் போலாய்விட்டது. அந்த பத்திரிகையைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து எறிந்தவாறு ''அயோக்யப் பயல்!...பிச்சைக்காரப் பயல்... என்னை வேறு யாராவது அவமானப்படுத்தி இருந்தாலும் நான் பொறுப்பேன்; சகிப்பேன். என் மகளையும் மணந்து, சம்மந்தி என்ற பெயரையும் வகித்த இந்த த்ரோகி செய்த கொடுமையும் அவமானமும்தான் என் குடும்பத்தையே அழித்துவிடும்போ லாகிவிட்டது'' என்று கண்களில் தீப்பொறி பறக்கத் தனக்குத் தானே கூறிக்கொண்ட சமயம், முன் தெரிவித்தபடி வந்தவர்கள் கூறிய வார்த்தைகள் அவர் காதில் கேட்டுவிட்டன.

அவ்வளவுதான் பின்னும் அவர் கோபம் அதிகரிக்க எழுந்து வந்து அபாரமான ஆத்திரத்துடன் ... ''ஆஹ்ஹா ... என்ன சொன்னீர்கள்...உங்களை இம்மாதிரி மத்யஸ்தம் செய்ய யார் வரச் சொல்லியது? சண்ட நாய்களும் வீட்டில் வந்து தம் தம் இஷ்டப்படி

உளறுவதற்கு இது ஏற்ற இடமல்ல ... எல்லோரும் எழுந்து போங்கள்; உங்களை யாரும் கூப்பிடவில்லை.'' என்று கோபத்தில் தாறுமாறுகக் கூறிக் கூத்தாடினுர்.

வந்தவர்கள் மிக்க விசனத்தையும் மனஸ்தாபத்தையும் அடைந்து ''நன்ருக இருக்கிறது. உலகத்தில் இம்மாதிரி ஆத்திரமும், பகையும் நாங்கள் கேட்டதுமில்லை; பார்த்ததும் இல்லை. பெத்த தகப்பனுக்கும் பெண்ணுக்குமே உறவு முறை இத்தனை அழகாகவிருக்கும் போது எங்களுக்கென்ன வந்தது? தன் விரலே தன் கண்ணைக் குத்தினுல் விரலை வெட்டிவிடுவாரோ! எக்கேடாவது கெட்டுப் போங்கள். வந்ததற்கு மரியாதை போதும்'' என்று கூறிக் கொண்டே போய்விட்டார்கள்.

அவர்கள் சென்ருல் சனி விட்டதென்றே திவான்பகதூர் நினைத்தார். வஸந்தாவினருகில் வந்து ''வஸந்தா! உன் தாயார் செய்தது போல ஏதாவது தண்டா வேலை செய்தாயானுல் கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிடுவேன். ஜாக்ரதை'' என்று கூறிக்கொண்டே போய் விட்டார்.

சற்று நேரத்திற்கெல்லாம் வீதியில் பாண்டும், மேளமும் வாசிக்கும் சப்தம் கேட்டது. திருவேங்கடம் தன் பங்களாவின் வராண்டாவில் உலாவிய படியே பார்த்தார். பெரிய கூட்டமான ஊர்வலம் வருவதையறிந்து கவனித்தார். ஊர்வலத்தின் மத்தியில் சங்கரன் கழுத்தில் தாங்கமாட்டாத ரோஜா மாலைகள் நிறைய போடப் பட்டிருந்தது. சங்கரன் நகைத்த முகத்துடன் வெகு வணக்கமாக ஊர்வலத்தில் செல்லுகிருர்.

அந்த ஊர்வலத்தில் அனேக பெரிய மனிதர்களும், உத்யோகஸ்தர்களும், தொழிலாளிகளும் நிறைந்திருந்தார்கள். இடை இடையே ஒருவர் ''கனதனவான்களே! ஈச்வரன் கோயில் தெருவில் 40 நம்பர் இலக்கமுள்ள வீட்டில் காலை 10 மணிக்கு சகல ஏழை மக்களும் இலவசமாகப் படித்துப் பயன் பெறத்தக்க ஓர் இலவச வாசகசாலையை நமது கௌரவம் பொருந்திய முனிசிபல் கவுன்சிலர்

ஸ்ரீமான் சங்கரன் அவர்கள் திறந்து வைக்கப் போகிறுர்கள். யாவரும் அவ்விழாவுக்கு வந்து ஏழைகளாகிய எங்களைக் கவுரவிக்கக் கேட்டுக் கோள்கிறேம்.

அந்தோ! எரியும் அடுப்பில் எண்ணெயை வார்த்தது போல இந்த ஊர்வல வைபவத்தையும், கோலாகலத்தையும், தன் சம்மந்தியான அல்பப்பதர் சங்கரன் மாலையும், மரியாதையுமாகச் செல்வதையும் பார்த்த திருவேங்கடத்திற்கு இதயமே படக்கென்று நின்று விடும் போலாகி விட்டது. தனக்கு நேர்ந்த அபரிதமான தோல்வியும். தலை காட்ட முடியாத அவமானமும் அவரைக் கொலை செய்யவும் துணியச் செய்து விட்டன.

ஒரு பெரும் பாறையை அப்படியே அவன் தலைமீது புரட்டி விடலாமா வென்றும் ஆத்திரம் பொங்கியது. சாதாரண சில பாமரக் கூட்டங்கள் "புதிய கவுன்ஸிலர் சங்கரனுக்கு ஜே!...தலை முறை தலை முறையாக இருந்த பழம் பெருச்சாளியைத் தோற்கடித்த சங்கரனுக்கு ஜே"!......என்று அநாகரிகமாய்க் கத்துவதைக் கேட்க இன்னும் தேகமே பற்றி எரிந்தது. இதைக் கண்ட குலசேகரனும் சகிக்க முடியாததால்: அவன் வீதிக் கதவை பட்டாரென்று சாத்தித் தாளிட்டான்.

ஊர்வலத்தில் வரும் சாந்தமூர்த்தியும், சங்கரனும் "அம்மாதிரி கூச்சலிட்டவர்களை நோக்கி இம்மாதிரி அசம்பாவிதமாக நடந்து கொண்டால் எங்களுக்கு மிகவும் கோபம் வரும். இப்படிக் கூறி யாரையும் புண்படுத்தக் கூடாது. இனி இவ்விதம் யாராவது கூறினுல் நாங்கள் ஊர்வலத்தை விட்டுப் போய்விடுவோம்" என்று நயமாயும் கண்டிப்பாயும் கூறினுர்கள். இம்மாதிரி கூறிய பெருந்தன்மையைக் கண்ட கூட விருந்த பெரிய மனிதர்கள் வெகுவாய்க் கொண்டாடினுர்கள்.

குலசேகரனும், திருவேங்கடமும் "இவர்களே வேண்டு மென்று இப்படிக் கூறச் செய்துவிட்டு மேலுக்கு வேஷம் போடுகிறுர்கள். திருட்டுக் கழுதைகள்" என்று தமக்குள் கண்டபடி திட்டிக் கொண்

டார்கள். இந்த ஆரவாரமும், காட்சியும் பின்னும் திருவேங்கடத்தை நிலை குலையச் செய்து விட்டன. சில பிச்சைக்காரப் பயல்களைப் பிடித்து அவர்களுக்குப் பணத்தைக் கொடுத்து, வேண்டுமென்று தன்னைத் தான் விளம்பரம் செய்து கொள்ளும் பொருட்டு இம் மாதிரி தானே செய்துகொண்டு கூத்தாடுகிறான். இந்த பிச்சைக் காரப் பயலை யாரோ லக்ஷ்யம் செய்து அழைக்கிறார்கள்!'' என்று நரி த்ராக்ஷைப்பழம் புளிப்பதாக எண்ணியது போல திருவேங்கடம் எண்ணினான். மகனும் அதை ஆமோதித்துத் தாளம் போட்டான்.

வஸந்தகுமாரி தன் தாயை விட்டு எழுந்திருக்கவே இல்லை. அவள் மனம் ஒரே அடியாகக் குழம்பிவிட்டது. சென்ற வருஷம் தீபாவளியன்று இருந்த சந்தோஷமும், இந்த வருஷம் அதே தீபா வளியன்றுள்ள அலங்கோலமும் அவள் மனத்தில் தாங்க முடியாமல் வேலை செய்கிறது. காலச் சக்கரம் சுழலும் வேடிக்கையையும்' சர்வ வியாபியான தயாபரனின் திருவிளையாடலின் மகிமையின் மாயா விநோதத்தையும் மாறி மாறி எண்ணிப் பெருமூச்சு விடு கிறாள்.

வயதில் சிறியவளாயினும், பெற்றோர் வளர்த்த உயரிய முறை யிலிருந்து அவளுடைய அறிவு மிகவும் ப்ரகாசத்துடன் விசாலமாகி இருப்பதால் பெரிய பெரிய எண்ணங்களிலேயே ஈடுபட்டு "ஆ! உலக விநோதம் இதுதான். ஒவ்வொரு பெரியாரும் கூறி இருக்கும் வாக்கு தேவ வாக்கல்லவா! அது எங்காவது பொய்யாவதுண்டா! இந்த நிலையற்ற வாழ்க்கையில் நம்பிக்கை, மோகம், ஆவேசம், பற்று ...ஊம்...பகற் கனவு...சற்றும் உதவாத எண்ணங்கள்.

ஒவ்வொரு மனிதருடைய ஜீவிய ரகஸ்யமும் ஈசனின் சோத னைக்குட்பட்ட பம்பரமல்லவா! சென்ற தீபாவளியன்று என் சகோ தரியும் நானும் ஒன்றாகக் களித்து விளையாடினோம். அடுத்த தீபா வளியன்று அக்காளுக்குக் கல்யாணமாகிவிடும்; தலை தீபாவளியில் சம்மந்திகளுடனும் புது மாப்பிள்ளையுடனும் வெகு ஆநந்தமாக நடக்குமென்று கோட்டை கட்டினேன். அந்தக் கோட்டையின் பொடி சூரணங்கள்கூடக் கிடைக்காது சிதறிவிட்டன. இந்த தீபா வளியன்று என் கண்ணால் காண்பது எது?

தீராத பகைமை, என்னுயிரினும் இனிய சகோதரியின் பிரிவு, என் தந்தைக்கு நேர்ந்த சகிக்க வியலாத அவமானம், தாயின் மரணப்படுக்கை, என்னுடைய ஒண்டியான தனிப் புலம்பல் இவைகள்தாம். அடுத்த வருடத்தை இனி கனவிலும் நினைக்கவேண்டாம்...கடவுள் மனமிரங்கி என் தாய்க்கு உயிர்ப் பிச்சை கொடுத்தால் போதும். உலகம் இத்தகைய நிலையில் இருக்கையில் எத்தனை த்வேஷம், எத்தனை பாசம், எத்தனை மோசம், எத்தனை நாசம், எத்தனை வேஷம்! ஆ!...நினைக்க நினைக்க பகீர் என்கிறதே!...

அம்மா! அம்மா! கண்ணைத் திறந்து பாரேன்...அம்மா... உனக்கு என்ன வேண்டும்?''...என்று கண்ணீர் பெருகக் கேட்டாள். சற்று தெளிவு பெற்ற ஸாவித்திரி தன் கண்களை மெல்லத் திறந்து பார்த்தாள். வஸந்தகுமாரி கண்ணீர் சிந்துவதை நோக்கி அவளுடைய இரு கரங்களையும் மெல்லப் பிடித்துக்கொண்டாள். வாய் திறந்து பேசக்கூடவில்லை. அவள் கண்களிலும் கண்ணீர் மடை திறந்துவிட்டதுபோல ஓடுகிறது. மீண்டும் மௌனமாகப் படுத்து விட்டாள்.

வஸந்தகுமாரி தன் தாயின் காதோடு “அம்மா! என்ன வேண்டும்...அக்காளைப் பார்க்கவேண்டுமா! அப்பாவிடம் சொல்லட்டுமா!'' என்று கேட்டாள். ஸாவித்திரி தன் தலையை அசைத்துக் கையினாலும் வேண்டாம்...என்று சைகை காட்டிவிட்டாள். வஸந்தகுமாரிக்கு தாங்க முடியாத துக்கம் தொண்டையை அடைத்து விட்டது. குலசேகரன் அச்சமயம் அங்கு வந்தான். அவனிடம் மட்டும் ரகஸியமாக “அண்ணா! அப்பாவை எப்படியாவது சமாதானம் செய்து அக்காளை அழைத்து வரக்கூடாதா? அம்மா! அவளைப் பார்த்தால் சற்று த்ருப்தியடைவாள்'' என்று கூறி முடிப்பதற்குள் தந்தைக்குமேல் குலசேகரனுக்குக் கோபம் வந்துவிட்டது. “வஸந்தகுமாரீ! பேசாதே; வாயைத் திறக்காதே. இனி அந்தக் கழுதையை நம் சகோதரி என்று வாயினாலும் கூறவேண்டுமா! துஷ்டை! அதிகப்ரஸங்கி! கிருஷ்ணகுமாரியின் துர்ப்புத்தியால்தான் இத்தனையும் விளைந்தன. காதலாம்...காதல்! காதல்தான் கொண்டாளே! நல்ல உத்தமனையும் உயர் குடும்பத்தினனையும் பார்த்துக் காதல் கொண்

டாளா! சாந்தமூர்த்தியை மட்டும் இலேசாக நினைக்காதே. அவன் வர வர மகா குடியனும், வேசிக் கள்ளனும், துன்மார்க்க சகவாஸமுடையவனும் ஆய்விட்டான். அத்தகையவனை மணந்து அவளும், அவளால் நாமும் அடைந்த பலன் போதாதா! இன்னுமா அந்த ஆசை! இந்த வார்த்தை அப்பா காதில் கேட்டால் அவர் பிராணன் அப்போதே போய்விடும். இனி இந்த பேச்சே எடுக்காதே'' என்று கூறிவிட்டான்.

இந்த வார்த்தைகள் ஸாவித்திரியின் செவியில் விழாமலில்லை. நிமிடம் ஏறயேற ஸாவித்திரியின் நிலைமை அதிக கவலைக் கிடமாகிக் கொண்டே வருவதால் வஸந்தகுமாரியின் திகில் அதிகரித்து விட்டது. அண்ணனுக்குப் பதில் கூறவே இல்லை. கால வித்யாஸத்தை எண்ணிக் கண்ணீர் விடுவதைத் தவிர வேறு என்ன செய்வாள் பாவம்!

ஸாவித்திரி மெல்ல தட்டித் திணறியபடியே ''குமாரீ! அப்பாவைக் கூப்பிடு'' என்றாள். உடனே திருவேங்கடம் அங்கு வந்து ஸாவித்திரியின் நிலைமையைக் கண்டு மனம் தவித்தவாறு கண்ணீர் பெருக நின்றார். ஸாவித்திரி அவருடைய இரு கரங்களையும் பிடித்துக் கொண்டு ''நாதா!.........நான் மூடத்தனத்தினால் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும். பதியே தெய்வமாக வணங்கி வந்த நான் உங்களுக்குத் தெரியாது த்ரோகம் செய்வதுபோலச் செய்த குற்றத்திற்கு இது தண்டனையாகக் கடவுள் செய்து விட்டார்

நாதா! இனி நான் பிழைக்கமாட்டேன். என் ஜீவியத்தின் முடிவு ஏற்பட்டு விட்டது.........இனி நான் மறு பிறவியிலும் தங்களுக்கு விரோதியாகிய கிருஷ்ணகுமாரியை நினைக்க மாட்டேன். இது சத்தியம்......வஸந்தகுமாரியைக்.........காப்பாற்றுங்கள்... அவளுக்கு மட்டும் 50 ஆயிரம் ரூபாய் எழுதி வைத்து விடுங்கள். அவளைத் தக்க இடத்தில்.........விவாகம் செய்து... கொடுங்கள்... தங்கள் மனத்தை நோகச் செய்ததற்கு மன்னிக்கவும்.........அந்த யோக்கியர்களுக்கு காலணாவும் கண்ணில் காட்ட வேண்டாம்...... என் மகள் வஸந்தகுமாரி ஒருத்திதான்.........நாதா!......நான்... நான்...,..மேலே சொல்ல முடியாமல் வாய் தழதழத்து விட்டது,

திருவேங்கடம் பதை பதைத்தவாறு, ஸாவித்திரியின் கைக ளைப் பிடித்துக் கொண்டு, "ஸாவித்ரீ! ஸாவித்ரீ! நீயா என்னை மன்னிப்பு கேட்பது?......நானல்லவா உனக்கு எமனுகிவிட்டேன். நானன்றோ மன்னிப்பு கோர வேண்டும். ஹா!......பெத்த அருமை மகளாலேயே நான் உன்னையும் இழக்கப் போகிறேன்......இத்தனைக் கும் காரணம் அந்த சண்டாளப் பாவிகள்தான்...ஹா...ஸாவித்ரீ! ......நான்......என்று ஏதோ ஆரம்பித்தாயே........அதென்ன ......உன்னிஷ்டப்படியே நான் செய்கிறேன்......ஸாவித்ரீ"...... என்றார்.

ஸாவித்ரியின் ஸ்வாஸம் தடமாடத் தொடங்கியது. வாய் பேசமாட்டாது அடைத்து விட்டது. "இவளுடைய மரண அவஸ் தையைக் கண்டாவது தந்தையின் மனம் இளகி மாறிவிடும் அக்கா விட்டாரின் மீதுள்ள கோபத்தை மறந்து விடுவார்; வைராக்யம் பிறந்து விடும் என்று நினைத்தேனே!......முற்றிலும் விரோதமாய்ப் போய்விட்டதே......இந்தம்மாளை இழப்பதுவும் அவர்களால் ஏற் பட்ட க்ரோதந்தான் என்று இப்படிப் பாய்ந்து விட்டாரே...... ஹா!......இனி என்ன செய்வது......அக்காவை கடைசி முறையும் பார்க்காமல் அம்மா மறையப் போகிறளே! அக்காவும் அம்மாவைப் பார்க்க வில்லையே......மனித ஜீவியத்தின் மர்மம் இதுதானு...... கடவுளே!......என் தாயை எனக்கு இன்னும் சில காலம் தாயாகவே அளிக்கக் கூடாதோ?

ஆ......அம்மா! ஏற்கெனவே உள்ள மனே நிலைமையில் உன் பிரிவும் சேர்ந்தால் அப்பாவின் நிலைமை என்ன ஆகுமோ! அந்தோ! அக்காவை உயிருடன் பிரிந்தாயிற்று; உன்னையும் இழந்து விட்ட பிறகு நான் என்ன செய்வேன்? ஒண்டி வாழ்க்கையாய் எவ் விதம் காலந்தள்ளுவேன்? என் எதிர்காலத்துச் சக்கரம் எவ்விதம் சுழலப் போகின்றதோ தெரியவில்லையே! நினைக்கையிலேயே நடுங்கு கின்றதே. அம்மா!......என்னருமை அம்மா!" என்று கண்ணீர் ஆறுய்ப் பெருக்குகிறுள்.

குலசேகரனும் தன் தாயின் மரண வேதனையைச் சகிக்காது இடிந்துபோய் விட்டான். வைத்தியர்கள் ஒருவர்மேல் ஒருவராக

வந்து "இனி இது உபயோக மில்லை; சில மணி நேரந்தான் தாங்கும்" என்று கூறிவிட்டார்கள். பந்துக்களில் காலையில் வந்தவர்களை திருவேங்கடம் அவமதித்து விட்டதால் மற்றவர்கள் வருவதற்கு அஞ்சியும் வெறுத்தும் விலகி நின்றார்கள்.

இரவு 9 மணி இருக்கும். அமாவாசைக் கருக்கல் இருள் எங்கும் நிர்ப்பயமாகப் புகுந்து தன்னரசு புரிகிறது. வீதியில் ஜன சந்தடியும் அடங்கிக்கொண்டே வருகிறது. ஸாவித்ரியின் வாழ்க்கையின் ஜோதியும் குறைந்துகொண்டே வருகிறது. அச்சமயம் வீதியில் ஒரு பிச்சைக்காரன் மிகவும் இனிமையாயும், மனத்தை உருக்கும்படியாயும்

வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதான்
தாழாதறஞ் செய்ம்மின் தடங் கண்ணான் மலரோனுங்
கீழ் மேலுற நின்றான் திருக் கேதார மெனீரே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

182998

என்ற அதி அற்புதமானதும், உலக மக்களின் ஜீவிய ரகஸ்யத்தையும், நிலையற்ற, சாஸ்வதமற்ற வாழ்க்கையின் மாயத் தோற்றத்தையும் வெகு அழகாய் சித்தரித்துக் காட்டும் வேதாந்தப் பாடலை பாடிக்கொண்டே "சந்திபிச்சே தாயே! ஒரு சாண் வயிற்றுக்கு ஒரு புடி அன்னமின்றி பதறுகிறது தாயே.!" என்று கூவினான்.

நிச்சப்தமான வேளையில் ஏற்கெனவே கண்கலங்கிப் பரிதபித்துக்கொண்டிருக்கும் வஸந்தகுமாரியின் செவியில் இப் பாடல் விழுந்தவுடனே "மனித ஜீவியத்தின் நிலையற்ற ரகஸ்யம் இதுதானா! இம் மாயா ப்ரபஞ்சத்தின் லீலா விநோதங்கள் இவ்வளவுதானா? ஹா...பிச்சைக்காரன் பாடும் பாடலிலும் எவ்வளவு இனிமை! எவ்வளவு ஆநந்தம்! எவ்வளவு அர்த்தம் பொதிந்து கிடக்கின்றது... ஆம்...ஆம்...அவன் பாடும் பாடலின் தத்துவம் மிகவும் உண்மையானதே...இதை யறியாமலா பெரிய பெரிய மகான்களின் வாக்கில் இத்தகைய அம்ருத தாரைபோன்ற பாக்கள் பொழிந்தன...

அந்தோ!...வாழ்வாவது மாயம்...மண்ணாவது திண்ணம்... என் அன்னையின் இதுகால பரியந்தம் நடந்த வாழ்வு முற்றும் மாய மாய் மறைந்துவிட்டது...அதோ...அதோ...அவளுடைய ஆவியும் பறந்துவிட்டது...கிளிக்கூண்டிலிருந்து கிளி பறந்துவிட்டது...இனி இச் சடலம் மண்ணாவது...நீறும் நெருப்புமாகி...மண்ணாவது திண் ணம்...அம்மா!...உன் வாழ்க்கையின் ஜோதி அணைந்துவிட்டது. எங்களைத் தன்னந்தனியே விட்டாய்...நிர்மலமான வாழ்க்கை யுலகத் திற்குச் சென்றுவிட்டாய்...அம்மா! அம்மா!''...வென்று கதறிப் புலம்பியவாறு தாயின்மீது சாய்ந்தாள்...அதே பிச்சைக்காரனின் பாடலை இந்த வீட்டின் நிலைமையின் அலங்கோல சப்தம் அடக்கி விட்டது. ஸாவித்ரி சலனமற்ற சந்தோஷ நித்திரையிலாழ்ந்தாள்.

---

## 3-வது அதிகாரம்

### உலக விநோதம்—உக்ரகத் தாண்டவம்

ஊர்வலத்துடன் சென்ற சாந்தமூர்த்தியும், சங்கரனும் அன்று நடக்கவேண்டிய திருவிழாவை நடத்திவிட்டு மக்களுக்கு வேண்டிய அரிய பொருள் நிறைந்த உபன்யாஸங்களைச் செய்துவிட்டு வீட்டிற்குச் சென் றார்கள். அவர்களுக்கு ஸாவித்ரியின் நிலைமையோ இவ் வீட்டில் நடந்த சம்பவங்களோ ஒன்றுமே தெரியாது.

கிருஷ்ணகுமாரி தன்னுடைய காதலனுடன் ஆநந்தமாக இருந்தபோதிலும் அவளையறியாது மனத்தில் ஏதோ சங்கடமும் குழப்பமும் உண்டாகி சகிக்கமாட்டாத வேதனை செய்கிறது. சாப் பாடோ, பலகாரங்களோ ஒன்றும் பிடிக்கவில்லை. முகத்திலும் தேஜஸ் மங்கி கவலைக் குறியான களையே உண்டாகிவிட்டது. திடும் திடும் என்று ஏதோ திடுக்கிடலுடன் மனத்தில் திகில் உண்டாகின்

றது. இத்தனைக்கும் அவளுக்குக் காரணமே தெரியவில்லை. "என் என்னை இவ்வித சித்திரவதை செய்கிறது. எனக்கே ஒன்றும் புரிய வில்லையே"...என்று அவளே நினைத்துக் கலங்கியவாறு படுத்துத் தூக்கமின்றி புரளுகிறாள்.

வீதிப்பக்கத்து ஜன்னலின் முன்பு நின்று வீதியையும் நீலத் திரைபோன்ற ஆகாயத்தையும் இவர்கள் வீட்டிற்கு எதிரில் சிறிது தூரத்தில் தெரியும் பயங்கரமான சப்தத்துடன் கொந்தளித்து உறுமும் கருங்கடலையும் நோக்கினாள். எங்கும் அந்தகாரம் குடி கொண்டு மனத்தில் அச்சத்தை உண்டாக்குகிறது. ஆகாயத்தில் ஆங்காங்கே தோன்றும் நக்ஷத்திரக் கூட்டத்தைத் தவிர வேறு ஒளி யற்று விளங்கும் ஆகாயமும் இவளை மிரட்டுவதுபோலவே தோன்றியது.

அதே சமயம் முன் கூறிய பிச்சைக்காரன் "வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்." என்ற பாடலை வெகு உருக்கமாகப் பாடிக் கொண்டு "அம்மா! பசி பொறுக்கவில்லை. ஒரு கவளம் அன்ன மளித்து என் பசியைப் போக்குங்கள் தாயே"...என்று சொன்ன சப்தம் கிருஷ்ணகுமாரியின் மனத்தைத் துளைத்தது. வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம் என்ற வாக்கியம் அவளுடைய இதயத்தில் ஓர் புதிய மாறுதலையும், புதிய உணர்ச்சியையும் உண்டாக்கியது.

சாந்தமூர்த்தி அப்போதே தன்னறையை விட்டுப் படுக்கைக்கு வந்தான். கிருஷ்ணகுமாரி ஏதோ பித்து பிடித்தவள் போல நிற் பதையும் வீதியில் பிச்சைக்காரன் பாடுவதையும் கண்டும் கேட்டும் ஒருவித மன உணர்ச்சியைப் பெற்றவனாய்......"என்ன குமாரீ! நன்றாகக் கவனித்து அப் பாடலைக்கேளு; உலகத்தில் மனித ஜீவியத் தின் மர்மங்கள் அவ்வளவுதான். எத்தனையோ ஆசையும் அன்பும் கொண்டுள்ள நீயும் சரி; நானும் சரி ஒரு நாளைக்கு மண்ணாவது நிச்சயம்.

மனித வாழ்க்கை என்னும் புசல் காற்றில் அல்லல்பட்டுழன்ற பின்னர் சாச்வதமான நிலை மண்ணாவதுதான்" என்று ஒருவித மான வெறுப்புடனும், வேதாந்தமாயும் கூறினான். இதைக் கேட்ட

கிருஷ்ணகுமாரிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. ப்ரமை பிடித்தவள் போலவே மெல்ல ஜன்னலை விட்டு நகர்ந்தாள். சாந்தமூர்த்தி சோபாவில் உட்கார்ந்திருந்தான். கிருஷ்ணகுமாரி அவனருகில் வந்து "நாதா!...வாஸ்தவம். வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம். முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடி சாம்பலாவது திண்ணமல்லவோ...உலக வாழ்வே அவ்வளவுதான். அந்த பிச்சைக்காரனுக்கு ஏதாவது தின்பதற்குக் கொடுத்துவிட்டு வரலாம்; பலகாரங்கள் நிறைய இருக்கின்றன'' என்று கூறிக்கொண்டே ஒரு தட்டில் பலகாரங்களை எடுத்துவந்து கொடுத்தாள்.

சாந்தமூர்த்தி அதை வாங்கிக்கொண்டு வீதிக்குச் சென்றான். கிருஷ்ணகுமாரி மாடியிலிருந்து பார்த்துக்கொண்டே நிற்கையில் சாந்தமூர்த்தி வீதிக் கதவைத் திறந்துகொண்டு வீதியில் வந்தான். அச் சமயம் அப் பிச்சைக்காரன் "இப்பவோ! பின்னையோ! சற்று நேரத்திலோ! இரவுதான் படும் நேரமோ! என்ற பாடலை வெகு இனிமையாகப் பாடிக்கொண்டு வழக்கம்போலப் பிச்சை கேட்டான்.

சாந்தமூர்த்தி அந்த அருமையான பாடலைக் கேட்டுக்கொண்டே சற்று நேரம் நின்ற பின்னர் "அப்பா! சந்தி பிச்சை! இதோ இந்த பலகாரத்தை பசியாறச்சாப்பிடு''என்று கூப்பிட்டான். சந்திப் பிச்சையும் வெகு சந்தோஷத்துடன் வந்து பலகாரத்தை வாங்கிக்கொண்டு "தரும தேவதை!...கடவுள் ஒங்களுக்கு கருணை பண்ணனும்'' என்று கூறியவாறு, தெருவிலேயே உட்கார்ந்து அந்த பலகாரத்தில் சிறிது சாப்பிட்டுவிட்டு மிச்சத்தை தன் கந்தைத் துணியில் முடிந்துகொண்டு "சாமி வவுறு குளுந்துது. நீங்க நல்லாயிருக்கணும். நாளைக்குக் கொண்டுபோறேன். எல்லாம் ஈசன் செயல். யார் வாழ்வை யார் கண்டது?'' என்று மீண்டும் இப்பவோ பின்னையோ! என்ற பாடலை பாடிக்கொண்டே சென்றான்.

எதிரில் காற்றினும் கடுமையான வேகத்துடன் வந்த ஓர் செல்வச் சீமானின் மோட்டார் எமன் ஒரு நொடியில் பிச்சைக்காரக் கிழவனின் ஆவியை அபகரித்துக்கொண்டு பறந்துவிட்டது. கிழவன் "ஹா...சங்கரா!...சம்போ...நாராயணா! என்று அலறிய சப்

தமே அவன் ஜீவியத்தின் கடைசீ வார்த்தையாய் அமைந்தது. ஒரு விநாடிக்கு முன் அவன் பாடிய பாடலின் உண்மை அடுத்த விநாடியே நிரூபணமாகி விட்டதைக் கண்ட சாந்தமூர்த்தியும், மாடியிலிருந்த கிருஷ்ணகுமாரியும் திடுக்கிட்டு அலறி நடுங்கி "ஹா...... ஹா........கிழவன்! கிழவன்......மாண்டான்......ஐயோ! மோட்டார் எமனுக்கு இரையாகி விட்டான்" என்று கதறினார்கள்.

நிச்சப்தமும் இருளும் குடிகொண்ட அப்பயங்கர இரவில் கேவலம் பிச்சைக்காரனாகிய, நாதியற்ற கிழவனின் மீது வண்டியை ஏற்றி விட்ட சீமான் திரும்பியும் பார்க்கவில்லை. கார் கிழவன் மீது ஏறியதை அவன் கொடிய இதயம் அறியவில்லையா! நன்றாக அறியும். அவன் இவ்வுலகை நீத்து விட்டான். அவன் உயிர் தன் காருக்கே பலியாகி விட்டது என்பதை நன்றாக அறிவான். ஆனால்... அவன் தினம் இப்பவோ பின்னையோ......வாழ்வாவது மாயம்... என்ற பாடல்களைப் பாடிக்கொண்டு திரியும் சந்தி பிச்சைக்காரன் தானே! அவனுக்காக அதிகாரம் வகித்துப் பேசி வாதாட........ பழிக்குப் பழி வாங்க மனிதக்கட்டுப்பாடு உண்டா?......பணந்தான் உண்டா........ஒன்று மில்லை. அனாதைப் பிணம்......கேட்பாரில்லை...

அதுவே ஓர் சீமானாயிருந்தால் இம்மாதிரி போக முடியுமா? போனால்தான் சும்மா விடுவார்களா! அச்சீமான் நன்றாகக் குடித்து விட்டுக் காரில் தன்னோடு கூட ஓர் ஆசைநாயகியை வைத்துக் கொண்டு தலைகால் தெரியாத மோகத்துடன் ஓட்டுவதால் காரை நிறுத்த முடியவில்லை. அதோடு, வீதியில் தன் காரை நிறுத்தினால் தன்னுடைய ரகஸியம் தெரிந்து விடப் போகிறதே என்ற உணர்ச்சி மட்டும் அத்தனை மறத்த கட்டை போன்ற மனத்திலும் உண்டாகியதால் ஓரே ஓட்டமாக மறைந்து விட்டான்.

கிழவனின் தேகம் கீழே வீழ்ந்தது. ஆவி பறந்தது. இந்த பரிதாபகரமான காட்சியைக் கண்டு மனம் உருகிக் கரைந்து விட்ட சாந்தமூர்த்தியும், குமாரியும் கூவிய கூக்குரலில் வீட்டுக்குள்ளே இருந்த பலரும் ஓடி வந்தார்கள். "ஹா......சந்தி பிச்சைக்காரக்

கிழவனு மாண்டான்! இப்பொழுதுதானே அவனது இனிமையான மதுரகானம் செவியில் விழுந்தது. இதற்குள்ளாகவா அவன் வாழ்வு முடிந்து விட்டது! எந்தப் படுபாவி வண்டியை ஏற்றிவிட்டுத் திரும்பி பார்க்காமல் போய்விட்டான். அடாடா! மனித வாழ்க்கையின் மர்மம் இதுதானு...அவன் பாடிய பாடல் அவனுக்கே பலித்து விட்டதே......

ஐயோ பாவம்!... நல்ல கிழவன் வெகு காலமாக இதே இராப் பிச்சையில் ஜீவித்து வந்தான். மகா யோக்யன் ஊம்...... இவ்வளவுதான் உலகம்......என்று மிக்க விசனத்துடன் கூறி அநுதாபப் பட்டார்கள். கார் ஓடிய வேகத்தில் இருட்டில் காரின் நம்பரும் தெரியாது போயிற்று. இனி என்ன இருக்கிறது?

சாந்தமூர்த்தி அப்படியே மனமுடைந்து லயித்துப் போய் விட்டான். வேலைக்காரர்களின் உதவியால் கிழவனை தெருக் கோடியிலுள்ள மரத்தடியில் கிடத்தினுன். அவன் பனம் பதைத்த பதைப்பைக் கூறவே திறமன்று. கிருஷ்ணகுமாரி இந்த கோரக் காட்சியைக் கண்டு மனமுடைந்து சோர்ந்து படுத்து விட்டாள். இக்கிழவன் கதியற்றவனென்று எல்லோருக்கும் தெரியுமாதலால் இவனுக்குத் தன் சொந்த செலவிலேயே சாந்தமூர்த்தி தகுந்த மனிதர்களைக் கொண்டு வேண்டிய சடங்குகளுடன் காலையில் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்து, போலீஸுக்குத் தெரிவித்து விட்டான்.

இரவு முற்றும் சாந்தமூர்த்திக்கு மனம் தவித்த தவிப்பைக் கூறவே திறமன்று. உயிர்......உணர்ச்சிகள்......சுகம்...துக்கம்... யாவும் ஏழை பிச்சைக்காரனுயினும், செல்வச் சீமானுயினும் ஒன்றல்லவா?

அந்தோ! சற்று முன் பாடி பிச்சை வாங்கித் தின்ற கிழவனின் உடல் தற்போது நிச்சிந்தையாய்ப் படுத்துவிட்டது. இவனை இக் கதிக்குள்ளாக்கிய அச் சீமானின் உயிரும் ஒரு காலத்தில் பறக்கத் தானே போகிறது! தன்னுயிர் வெல்லமென்று நினைத்ததுபோல பிறரின் உயிர் வெல்லமல்லவா...என்ன அனியாயம்!'' என்று பல விதமான எண்ணத்துடன் குழம்பிப்போய் தன்னறைக்கே போய்

விட்டான்...காலையில் எழுந்த உடனே கிழவனின் பிணத்தருகில் கூட்டம் தேர் திருநாளைப்போல் கூடிவிட்டது. சவத்தை அடக்கவேண்டிய ஏற்பாடுகளை சாந்தமூர்த்தியும், சங்கரனும் செய்துகொண்டிருக்கையில் அங்கு கூட்டத்திலிருந்த ஒருவன் "உம்...மனித ஜீவியத்தின் முடிவு இவ்வளவுதான்.

இந்த கிழவன் நேற்றிரவு என் கடையினருகில் வந்து பிச்சை வாங்கிச் சென்றான்; இதோ பிணமாகிக் கிடக்கின்றான். திவான் பகதூர் திருவேங்கடத்தின் மனைவி முந்தா நாள் காலையில் என் கடையில் வந்து நான்கு சேலைகள் வாங்கிச் சென்றார்கள். அச் சேலையை அந்தம்மாள் பிரித்துக் கட்டிக்கொள்ளவே இல்லை. நேற்றிரவே இறந்துவிட்டார்களாம். சவ அடக்கத்திற்கு வேண்டிய கொட்டு முழக்குகள் நடக்கிறதைப் பார்த்து பரிதவித்து இங்கு வந்தால் இந்த கோரக் காட்சி...என்ன உலகம்...என்ன வாழ்க்கை!''...என்றான்.

இந்த வார்த்தைகள் காதில் விழுந்ததும் சாந்தமூர்த்தியும் சங்கரனும் தீயை மிதித்தவர்கள்போலத் திடுக்கிட்டார்கள். ''என்ன! என்ன! ஸாவித்ரியம்மாள் இறந்துவிட்டார்களா? இது உண்மையா! எப்படி இறந்தார்கள்? என்ன உடம்பு?'' என்று அந்த கடைக்காரனையே சங்கரன் கேட்டார்.

அக் கடைக்கார குமாஸ்தா அக் கடைக்குப் புதியவனுகையினுல் சங்கரனையாவது...திவான் பகதூரையாவது அறியமாட்டான். ஆதலால் " நான்தான் இப்போது நேரில் பார்த்துவிட்டு வருகிறேனே! நான் பொய்யா சொல்லுவேன்...என்ன ஐயா! சாவைக் கூடவா பொய் சொல்வார்கள்? அந்தம்மாளுக்கு என்ன சீக்கு... எப்படி இறந்தார்கள் என்று தெரியவில்லை. வேலைக்காரர்களையும் அக்கம் பக்கம் உள்ளவர்களையும் விசாரித்ததில் அந்தம்மாள் தடுக்கி கண்ணுடி பீரோவின்மேல் விழுந்து அடிபட்டு இறந்துவிட்டதாகச் சிலர் கூறுகிறுர்கள்.

அந்தம்மாளின் மூத்த மகள் வீட்டாருக்கும் அவர்களுக்கும் ஏதோ கடும் பகையாம். அதனுல் போக்குவரத்தே இல்லையாம்.

அந்தம்மாள் மகளை தீபாவளிக்குக் கூப்பிடவேண்டுமென்று சொன்ஞர்களாம்...அதற்கவர் சம்மதிக்காமல் அதனுல் சண்டையாக அவரே அடித்துத் தள்ளிவிட்டாராம். அந்த அடியின் வேகத்தினுல் ரண ஜன்னி கண்டு இறந்துவிட்டார்கள் என்று சிலர் கூறுகிருர்கள். எது உண்மையோ யார் கண்டார்கள்! அம்மாளின் முடிவு என்னமோ நிச்சயம். சின்ன பெண்ணு கதறுகிருள்''...என்று கூறிக் கொண்டே மணியைப் பார்த்து வெகு நேரமாகிவிட்டதை யறிந்து ஓட்டமாக ஓடிவிட்டான்.

அதற்குமேல் அங்கு இருப்பு கொள்ளாத தந்தையும், மகனும் விசனமே வடிவாய் "இந்த துக்ககரமான விஷயத்தை கிருஷ்ண குமாரியிடம் எவ்விதம் கூறுவது? இதைக்கேட்டதும் புழுகெனத் துடிப்பாளே...என்ன அனியாயம்......பெத்த மகளுக்குக் கூட தாயின் முக விழிப்புக்குச் சொல்லியனுப்பாத க்ஷாத்திரமன்ருே கொண்டாடுகிருர்கள்? ... ... சாவைக்கூடவா சொல்லாதிருக்கிருர்கள்?'' என்று வருந்தியபடியே வீட்டிற்கு வந்தார்கள்

இரவு கண்ட கோரக் காட்சியிலேயே திகிலும் பயமும் கொண்டு கலங்கிவிட்ட கிருஷ்ணகுமாரி இடிந்துபோய் உட்கார்ந்திருந்தாள். சாந்தமூர்த்தியின் முக மாறுதலேயும் விசனத்தையுங் கண்ட கிருஷ்ணகுமாரி பிச்சைக்காரனுக்காகத் தான் இம்மாதிரி விசனிப்பதாக எண்ணி "நாதா! பிச்சைக்காரன் சவம் அடக்கமாகி விட்டதா?...வாழ்வாவது மாயம்...இப்பவோ, பின்னேயோ என்ற பாடல்களின் உண்மையை விளக்கிக் காட்டிவிட்டான்.'' என்று விசனித்தபடியே கூறினுள்.

இதுகேட்ட சாந்தமூர்த்தி "கிருஷ்ணகுமாரீ! உலகமே அவ்வளவுதான். கிழவனின் மறைவு எப்படியோ அப்படியேதான் உலகமே...நேற்று நன்ருக இருந்த உன் தாயார் இன்று பிணமாகக் கிடக்கிருளாம்......வாழ்வாவது மாயம்...என்ன அனியாயம்... என்று கூறி முடிக்குமுன்..."ஹா....என்ன! என்ன...என் அன்னேயா...என் தாயார் இறந்துவிட்டாளா! ஐயோ! யார் சொன்ஞர்கள்...இது உண்மையா? யாராவது க்ஷாத்திரத்தினுல் கட்டுக்

கதைகட்டி விட்டார்களா! ஹா...சொல்லுங்கள்...என்று துவண்டு சுவரில் சாய்ந்து கதறியபடியே கேட்டாள்.

அதே சமயம் அவள் மாமியார் "குமாரீ! உண்மைதான். நான் ஆளே அனுப்பிப் பார்த்து வரச்சொன்னேன். நேற்றிரவு 10 மணிக்கு இறந்து விட்டார்களாம். தீபாவளிக்கு உன்னே அழைக்க வேண்டுமென்று கூறியதற்கு உன் பிதா கோபித்து ஆத்திரத்தில் கீழே பிடித்துத் தள்ளியதில் கண்ணுடி பீரோவின்மீது விழுந்து கண்ணுடிகள் மண்டையில் பொத்தி ரண ஜன்னி கண்டு இறந்து விட்டதாகத் தெரிகிறது. அம்மா! கதருதே......என்ன செய்வது? நீ கொடுத்து வைத்தது இவ்வளவுதான். முகத்தில் விழிக்கவும் பாக்யம் செய்யவில்லே. இத்தனே கொடிய க்ஷாத்திரத்தை நான் கண்டதுமில்லே; கேட்டதுமில்லே. பெத்த மகளுக்குக் கூடவா சாவு சொல்லாதிருப்பார்கள்? இது என்ன நியாயமோ?......அம்மா! குமாரீ!...... கதருதே''......என்று தேற்றினுள்.

பெற்ற தாயைப் பாராது பறிகொடுத்து விட்டுத் தவிக்கும் நெஞ்சுக்கு ஆறுதல் உண்டாகுமா? தேற்றினுல்தான் மனக் கொதிப்பும், தாயை இழந்த தீராத விசனமும் அடங்குமா! முன்னறி தெய்வம் அல்லவா அவள்! அன்னேயின் அன்பும் அந்த தனித்த வாத்ஸல்யமும் இனி இப்பிறவில் காணமுடியுமா? 90 வயது வாழ்ந்த பின்னர் தள்ளாத கிழவியான அன்னே இறந்தாலும் அவ்வரிய தெய்வத்தின் பிரிவாற்ருத் துயரம் பாதிக்கு மன்ருே! அத்தகைய அன்னேயை வெகு நாட்களுக்கு முன்பே பாராது பிரிந்து வருந்துகையில் உலகையே விட்டு நீத்தாள் என்றதைக் கேட்டதும் கிருஷ்ண குமாரிக்கு ஆகாயமும், பூமியும் ஒன்ருகச் சுழன்றது.

"ஹா......அம்மா! அம்மா!......என்னருமை அம்மா!.... என் கண்ணுன தாயே!......செல்வத் திருவே......அம்மா...... என்னேப் பாராதிருந்த போதிலும் நீ எங்காவது க்ஷேமமாய் நன்ருக இருக்கிருய் என்று எண்ணிப் பரம சந்தோஷ மடைந்திருந்தேனே......உன் திருமுகத்தை எங்காவது கண்டு களித்திருந்தேனே! ......இனி உன்னே எங்கு காண்பேன்?......எவ்வாறு காண்பேன்?.

அம்மா......அம்மா......வென்று கதறி பிரக்ஞை யற்றுத் தன் னிறை யழிந்து வெட்டிச் சாய்த்த மரம்போல விழுந்தாள்.

அவளுடைய சோகத்தைக் கண்டு மனமுருகிய சாந்தமூர்த்தி யும், அவன் தாயும் கிருஷ்ண குமாரிக்கு ஆறுதல்கள் கூறித் தேற்றி னர்கள். என்ன செய்தும் குமாரி மன அதிர்ச்சியையும், தாயின் மரணத்தினுலுண்டாகிய சோகத்தையும் தாங்க முடியாமல் "அம்மா! அம்மா!" என்று ப்ரலாபித்துப் புழுகெனத் துடிக்கின்றாள்.

"சாவுச் செய்தியை, பெற்ற மகளுக்கே சொல்லியனுப்பாத விசித்திரம் உலகத்தில் எங்கேனும் நடக்குமா! ஆத்திரத்திற்கும் ஓர் எல்லை இல்லையா! குமாரி! மணி பத்தடித்துவிட்டதே! நேரமோ சென்றுகொண்டே இருக்கிறது. இன்னம் உன் வீட்டிலிருந்து சாவுச் செய்தி வரவே இல்லையே...என்ன செய்வது?...இன்னேரம் சவ அடக்கத்துக்கும் ஏற்பாடாகி இருக்குமே...நாங்கள் இல்லா விட்டாலும் நீயாவது உன் தாயாரைக் கடைசீ தரமாகப் பார்க்க வேண்டாமா! இனி அந்தம்மாளை எஜ் ஜென்மத்தில் பார்ப்பாய்?... உன் பிதாவுக்குத்தான் ஏதோ அவர் பாட்டன் வீட்டு சொத்தை நாங்கள் கொள்ளை யடித்துவிட்டதாகக் கோபம் பொங்குகிறது. உன் அண்ணன், உன் சகோதரி அவ்விருவரும்கூடச் சொல்லியனுப்பாது பேசாதிருக்கிறார்களே! குமாரீ! பெத்த தாயாகையினுல் நீ மட்டும் சென்று பார்த்துவிட்டு வருகிறாயா?" என்று மாமியார் கேட்டாள்.

சாந்தமூர்த்தியும் அதையாமோதித்தபடியே "குமாரீ! பிறகு எங்கள்மீது பழி வேண்டாம். சாவுகூடச் சொல்லியனுப்பாத அத்தனை க்ஷாத்திரம் பாராட்டுவதற்கு ஒரு குடி முழுகி விடும் அக்ரமமும் நடக்கவில்லை. பிதாவைவிட மகன் விரோதம் பாராட்டு வதில் குறைந்தவனு!...அப்பப்ப!...வஸந்தகுமாரியா சொல்லி யனுப்புவாள்...ஊம்...யார் எப்படியாவது போகட்டும். உனக்காக நாங்களும் வருகிறோம். நீ வா...சவம் அடக்கமாய்விட்டால் பார்க்க முடியாது; எழுந்திரு" என்றான்.

கிருஷ்ணகுமாரிக்கோ, தாயைப் பார்த்து அவள்மீது விழுந்து கதறி தன் துக்கம் தீரப் புலம்பிவிட்டால் சற்று நிம்மதியாகும்

என்று ஒரு புறம் தோன்றுகிறது. மற்றொரு புறத்திலோ பெத்த பிதாவும், உடன் பிறந்த பிறப்புகளும் பகைமையையே முதன்மையாகக் கொண்டு, பெத்த தாயின் மரணத்தைத் தெரிவிக்காது தன்னை உதறித் தள்ளியிருக்கையில் அவ் வீட்டிற்குப் போவதா! அவர்கள் முகத்தில் விழிப்பதா என்ற எண்ணமும், ரோஷமும் தோன்றி வதைக்கின்றன.

எது எப்படி இருப்பினும், இனி தான் தவம் செய்தாலும் பார்க்க முடியாத தன் தாயை பார்த்துவிட்டுப் பின்னர் சற்றும் தாமதியாமலும் ஒருவரிடமும் பேசாமலும் வந்துவிடுவது என்று தீர்மானம் செய்து கொண்டு தன் மாமியை நோக்கி "அம்மா! நீங்களும் எனக்காக மரியாதையைப் பார்க்காது என்னுடன் வாருங்கள். என் தாயைக் கடைசி முறையாகப் பார்த்துவிடு கிறேன்." என்று கெஞ்சினாள்.

சாந்தமூர்த்தியும் தன் தாயைக் கூப்பிட்டான். சங்கரனும் வெகு தைரியத்துடன் "குமாரி! நானும் வருகிறேன் வா; நமக்கு சாவுச் செய்தியைக்கூட தெரிவிக்காதவர்களுக்கு நாமே சென்று பாடங் கற்பிக்கலாம்" என்று கூறித் தானும் கிளம்பினார்.

தன் மாமனாரின் உத்தம குணத்தைக் காண குமாரிக்கு பெரும் வியப்பு உண்டாகியது. நால்வரும் கிளம்பி திருவேங்கடத் தின் வீட்டிற்கு அங்குள்ளோர் யாரும் எதிர் பாராத வண்ணம் வெகு ஆச்சரியத்தை பளிக்கும்படிச் சென்றார்கள். வீதி வராண் டாவில் கூடியிருந்த கும்பலின் மத்தியில் திருவேங்கடம் மிக்க விசனத்துடன் உட்கார்ந்திருந்தார். குலசேகரன் பக்கலில் உட்கார்ந் திருந்தான்.

அங்கு வரும் சங்கரன் முதலியோர்கள் தூர வருகையிலேயே பார்த்துவிட்ட திருவேங்கடத்திற்கு அவ்வளவுதான், ஆத்திரமும் ஆவேசமும் பொங்கிவிட்டன. ஓர் மதங் கொண்ட யானையைப் போலும் வெறி பிடித்துக் காட்டில் திரியும் சிம்மம் போலும் சீறி விழுந்தபடிவீதியில் ஓடி "அம்மா! அம்மா!" என்று கதறும் கிருஷ்ணகுமாரியை நோக்கி "சீச்சீ! த்ரோகி! சண்டாளி, என்

குடியை நிர்மூலமாக்கிய மகா கொடிய பாவீ! வெட்கங்கெட்ட பேமானி! உன்னை யார் இங்கு வரச்சொல்லியது? நீதான் என்றோ செத்து சாம்பலாகிவிட்டாய் என்று நான் தலைமுழுகிவிட்டேனே... பிச்சைக்கார கழுதைகளே...பேமானி நாய்களே...வஞ்சக த்ரோகிகளே இழுத்துக்கொண்டு உன்னை யார் வரச்சொல்லியது?

ஊம்...ஊம்...நட...திரும்பிப் போ! என் வீட்டுப் படிமீது கால் வைக்காதே. குடிகாரப் பாவியை, சோம்பேறித் தடியனை... சமத்வ அந்தஸ்து அற்ற பிச்சைக்காரப் பயலை மணந்து என் கண்ணியத்தையும், சந்தோஷத்தையும் கொலை செய்த பாதகி! ஸாவித்திரியையும் உங்கள் த்ரோகத்திற்கே பலி கொடுத்துவிட்டேன். இனி வராதே...காலை ஒடித்துவிடுவேன்...போங்கடா அல்ப நாய்களா''...என்று வாயில் என்ன வருகிறது, என்ன பேசுகிறோம் என்பதையே மறந்து, வெறிபிடித்துக் கூச்சலிட்டு கிருஷ்ண குமாரியின் கழுத்தைப் பிடித்துத் தபீரென்று தள்ளினான்.

அதே சமயம் குலசேகரன் சாந்தமூர்த்தியின்மீதும் சங்கரன் மீதும் காரி எச்சிலை உமிழ்ந்து "சீ......பேமானிப் பயல்களே! என் வீட்டில் அடி எடுத்து வைக்க உங்களுக்கு மூஞ்சி இருக்கிறதா!... எங்கள் குடும்பத்தையே அதோகதி செய்துவிட்ட சண்டாளர்கள் வரவில்லை என்று யார் அழுதது போடா! சோதாப்பயலே!... போடா! குடிகாரப்பயலே!'' என்று தாறுமாறாகத் திட்டினான்.

சாவுக்கு வந்தவர்கள் இதைக் கண்டு நடுநடுங்கிப்போய் இடையில் சமாதானம் செய்ய வந்தவர்கள் திட்டும் உதையும் வாங்கிக்கொண்டு சென்றார்கள். சாந்தமூர்த்திக்கும் சங்கரனுக்கும் கோபம் பொங்கிவிட்டதெனினும் திவான்பகதூரைப் போல வரம்பு மீறிவிடவில்லை. கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் எல்லோருக்கும் சரியானபடிக்குத்தான் கூலி கொடுப்பார் என்பதை மறக்கவேண்டாம். நாக்கை உள்ளே அடக்கிப் பேசுங்கள். தாறுமாறாகக் குடிகாரனைப்போல அறிவிழந்து உளற வேண்டாம். நகரசபையின் ஸ்தானம் இந்நகரைச் சேர்ந்த தோட்டிமுதல் தொண்டமான் வரையில் வகிக்க பாத்யதை உண்டு என்பது ஞாபகமிருக்கட்டும்.

அந்த ஸ்தானம் உங்கள் பிதிரார்ஜித சொத்தல்ல. தலை முறை தலைமுறையாக நீங்களே அக்ரமச் செங்கோல் செலுத்தி அனியாய அரசு புரிந்து, ஏழை மக்களின் வயிறெரியச் செய்து லஞ்சம் வாங்கி லக்ஷாதிபதியாக இனி வாழ முடியாது. ஜாக்ரதை உங்கள் ஊழலுக்காக வாயில் வந்தபடியெல்லாம் உளற வேண்டாம்.'' என்று ஆவேசத்துடன் கூறிவிட்டு, கிருஷ்ணகுமாரியை அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

கிருஷ்ண குமாரிக்கு "நாம் ஏன் வந்தோம்? நம்மாலல்லவோ இவர்களுக்கு இத்தனைபெயர்களின் முன்னிலையில் அவமானம் நேரிட்டது'' என்ற துக்கமும், கலக்கமும் உண்டாகி அவளை வதைத்து விட்டன. பொது மக்கள் தங்கள் கடமையை விடாது திட்டுவதும் தூஷிப்பதும், பூஷிப்பதுமாக வம்பு பேசிச் சரியாகச் செய்துவிட்டார்கள். எங்கும் பேராச்சரியமும் பெரும் பரபரப்பும் குடி கொண்டன. உள்ளே சவத்தருகிலேயே உட்கார்ந்து கதறும் வஸந்த குமாரிக்கு வீதியில் நடக்கும் தடபுடல்கள் தெரிந்ததும் எழுந்து வீதிக்கு ஓடி வந்தாள். குலசேகரன் அவளை இழுத்துக்கொண்டு போய் உள்ளே ஒரு மூலையில் தள்ளிவிட்டான். அந்தோ பாவம்! சிற கொடிந்த பறவை போன்ற வஸந்தகுமாரி இனி என்ன செய்யமுயும்? "ஹா! கடவுளே! கடவுளே! எங்களை இவ்விதமா சோதனை செய்ய வேண்டும்? பகைக்கும் ஓர் அளவு கிடையாதா?'' என்று கதறி இடிந்துவிட்டாள்.

---


# ப்ரேமப்ரபா

அல்லது

## வாழ்க்கையின் நிழல்

மனத்தை உருக்கும் சம்பவங்கள் நிறைந்த நாவல்

விலை அணா 8. சந்தா நேயர்கட்கு அணா 6.

## 4-வது அதிகாரம்

### க்ரோதப் புயலும் காதற் சுழலும்

உலகத்தில் மனித வாழ்க்கையின் நாட்கள் உருண்டோடுவதுபோல் வேகமான சகடங்கள் கூட ஓடுவதில்லை எனலாம். முன்னதிகாரத்தின் இறுதியில் நடந்த சம்பவங்கள் ஓடி மறைந்து, இப்போது கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் ஆய்விட்டன. இவ்விரண்டு வருடங்களில் இரு குடும்பத்தாருக்கும் கிடைத்த லாபமானது முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த பகையும், க்ஷாத்திரமும் விருத்தியாகி விட்டதேயாகும்.

சாவு வீட்டிற்குத் தாமாக வந்தும் தங்களைப் பலபேர் முன்னிலையில் இத்தகைய அவமானப் படுத்தி விட்டதனால் சங்கரனின் மனம் முறிந்ததை விட கிருஷ்ணகுமாரியின் இதயமே உடைந்து விட்டது. தன் தாய் மடிந்ததே போல தாய் வீடே மடிந்து நிர்மூலமாகி விட்டதாக எண்ணி விட்டாள். அக்காலை கிருஷ்ணகுமாரி கர்ப்பவதியாயிருந்ததும், பிறகு அழகிய பெண் குழந்தை பிறந்ததும் அவர்களுக்குச் சொல்லவே இல்லை.

ஸாவித்திரியம்மாளின் மறைவினால் திருவேங்கடத்தின் மனக் குழப்பமும், வேதனையும் அதிகரித்து விட்டதால் அவர்கள் தங்கள் கிராமத்திற்கே போய்விட்டார்கள். குலசேகரன் மட்டும் நகரத்திலும் கிராமத்திலும் தன் வாழ்க்கையை மாறி மாறி நடத்தி வந்தான். விஸ்தாரமான வனத்தில் வெகு சந்தோஷத்துடன் திரிந்து விளையாடிக் கொண்டிருந்த கிளியைக் கூண்டிலடைத்து விட்டால் எவ்வாறு தவிக்குமோ அதே போன்று வஸந்தகுமாரியின் கதி ஆகி விட்டது.

பெரிய மாளிகையைப் போன்ற தன் வீட்டில் பலவிதமான சவுகரியங்களுடன் வசித்து தன் சகாக்களுடன் பள்ளிக்கூடம், ஸ்திரீகள் சங்கம், தேவாலயம், கடற்கரை, ஸினிமா, நாடகம், ஸர்கஸ். முதலிய இடங்களுக்குச் சென்று களித்து இன்புற்று சுயேச்சையாக இருந்ததை விட்டுக் காட்டில் கண்ணைக் கட்டி விட்டது போன்று தனியாக ஒரு சாதாரண மாடி வீட்டில் கிராம வாஸம் செய்வதானது அவளுக்கு மிகுந்த கஷ்டமாயும், வேதனையாயும், விசனமாயும் இருந்தது.

அந்த கிராமத்தில் இவர்களுடைய பெரிய வீட்டைத் தவிர வேறு பெரிய உயர்ந்த குடும்பத்தினர்களே கிடையாது. இவர்களுடைய காரியஸ்தர் வீடும், சில குடியானவர்களின் வீடும், சக்தி மிகுந்த விநயகரின் சிறிய கோயில் குருக்கள் வீடும் தவிர வேறு யாருமே இல்லை. வஸந்தகுமாரிக்குப் பொழுது போக்காக இருக்கும் ஜோடிப் பெண்கள் யாருமில்லை.

வீட்டில் சதா அடைபட்டுக் கிடந்து தகப்பனுரின் மாறுபட்டமான வார்த்தைகளையும், தொண தொணப்புகளையும் கேட்டு மனம் சலித்துப் போய் விட்டது. மெத்தைமீது நின்று பார்த்தால் பசுமையான வயல்களின் தோற்றமும், ப்ரம்மாண்டமான ஏரியின் காட்சியும், சற்று தூரத்தில் தெரியும் மலைகளின் இயற்கை யழகும் தவிர வேறு ஒன்றும் கண்ணிற்குப் படாததால் தினம் தினம் எத்தனை நேரந்தான் இதே காட்சியைப் பார்த்துப் பார்த்துப் பொழுதை ஓட்டுவது என்ற வெறுப்பும் உண்டாகி விட்டது.

ஓயாமல் புத்தகங்கள் படிப்பதும், இவ்விதம் சுற்றிப் பார்ப்பதும், தன் குடும்பம் போன போக்கை எண்ணிப் புலம்புவதும் தந்தையின் க்ஷாத்திரம் மாறித் தன் சகோதரியும் தானும் ஒன்று சேர்ந்து இன்புறும் காலம் வருமா வென்று ஏங்கிக் கண்ணீர் வடிப்பதுமான பலவிதமான உணர்ச்சிகளினுல் உலுப்பப் பட்டு இதே வேதனைகளினுல் மெலிந்து விட்டாள். கதைப் புத்தகங்களில் காதல் விஷயமாகப் படித்தாலும் அந்தக் கட்டத்தை மனப் பூர்வமாக வெறுப்பாள்.

"பாழும் காதல்......இந்த காதலும்...மூக்கலும் தோன்றியல்லவோ அக்காவின் கதி இப்படியாகி விட்டது. காதலுக்காக சம்மந்தம் செய்ததனாலன்றோ இந்த குடும்பம் இப்படிச் சீரழிந்தது...... சீச்சீ! இனி மக்களிடையே காதலே உதிக்கக் கூடாது. காதலே மகா கொடியது...என்று காதலைக் கசந்து நினைப்பாள். காதலின் உயர்வைப் பற்றிய பாகங்களை வேப்பங்காய் தின்பதுபோலப் படிப்பாள். தன் மனத்தை இம்மாதிரி காதலுக்குப் பறி கொடுக்கவே கூடாது; விவாகமாகாதிருப்பினும் இருக்கலாம்: காதலுக்கு அடிமையாகக் கூடாது அல்லது பிதாவே பார்த்து எப்போதாவது மணம் செய்வித்தால் பார்த்துக் கொள்ளலாம்...என்றெல்லாம் எண்ணித் தன் போக்காகத் தீர்மானிப்பாள்.

முதலில் மிகவும் கஷ்டமாயிருந்த கிராம வாழ்க்கையே நாளடைவில் சகஜமாகி விட்டது. படிப்பதும், பிரம்புக் கூடைகள், தட்டுகள், பெட்டிகள் முதலியன முடைவது, பாய் முடைவது, சவுக்கங்கள் போடுவது, விதவிதமான பூவேலைகள் செய்வது, மரவேலைகளில் பலவிதமான சாமான்கள். செய்வது முதலிய கைத் தொழில்களில் மனத்தை செலுத்தி விட்டதால் அதுவே பெரிய துணையாயும் பொழுது போக்காயும் ஆய்விட்டது. அவ்வேலைகளைச் செய்து முடித்து உருப்படியாக்கிய பிறகு அவைகளைப் பார்க்கும்போது ஒரு புறம் தன் வேலையைக் கண்டுதானே ஆநந்தமுற்று மகிழ்வதும், மற்றொரு புறம் இதைக் கண்டு சந்தோஷிக்கத் தன் தாயும், சகோதரியும் இல்லையே என்ற விசனமும் கொள்வாள். புத்தி சரியாயிருக்கும் சமயம் தகப்பனார் பார்த்துக் களிப்பார். மாறுடி விட்டால் ஒன்றுமே தெரியாது விழிப்பார்.

திருவேங்கடத்தின் தூரத்து பந்துக்களின் மகன் சிவப்ரகாசம் என்பவன் அவனுடைய சிறு பிராயம் முதல் திருவேங்கடத்தின் வீட்டில் அதிகப் பழக்கமும் உதவியும் பெற்று படித்து வந்தான். அவன் மகா புத்திசாலியாயும், பரம யோக்யனாயும் இருந்ததால் திருவேங்கடம் அவனுக்குத் தன்னால் கூடிய உதவியைக் கொடுத்து வந்தார். தற்காலப்படி நகரீகமும், பெரிய மனித வகைகளில் ப்ரியப்பட்டும் வாழ்க்கை நடத்தியதால் தன்னிரு குமாரத்திகளையும் ப்ர

காசத்துடன் தாராளமாகப் பழகவும், விளையாடவும் அனுமதி அளித்திருந்தார்.

ப்ரகாசத்தின் வீட்டார் பரம ஏழைகளாதலால் அவர்களை இவர் லக்ஷ்யம் செய்வதே கிடையாது. ப்ரகாசத்தின் புத்தி சாலித்தனத்திற்காக மட்டும் அவனைத் தன் மகனுக்கும், இரு மகளுக்கும் பாடம் சொல்லிக் கொடுக்கச் செய்து அவ்வகையில் மூவருக்கும் சேர்த்து மாதம் 30 ரூபாய் சம்பளமாகவே கொடுத்து வந்தார். ப்ரகாசமும் வெகு நன்ருகப் பாடம் கற்றுக் கொடுத்தும், தானும் ச்ரத்தையாகப் படித்தும் வந்தான்.

நாளடைவில் ப்ரகாசத்தின் மனத்தை க்ருஷ்ணகுமாரி கொள்ளை கொண்ட பரம ரகஸியத்தை யாருமே அறிய மாட்டார்கள். மகா ஏழையாகிய ப்ரகாசனும் தன் எண்ணத்தை வெளி இடவும் அஞ்சித் தன்னுள்ளே வைத்து இரவு பகல் கிருஷ்ணகுமாரி யையே த்யானம் செய்யும் நிலைமைக்கு வந்து விட்டான். இந்த மாறு தலை கிருஷ்ணகுமாரியும் அறிய மாட்டாள். ஏன்......அவளுக்கு அத்தகைய எண்ணமே உண்டாக வில்லை. ப்ரகாசத்தை பெருந்தன் மையான கவுரவத்துடன் மதித்து, அன்பாயிருந்தாளே யன்றிக் காதல் கொள்ளவில்லை.

பின்னும் சில காலம் சென்ற பிறகு ப்ரகாசத்தின் மனோ நிலை மையை கிருஷ்ணகுமாரி நன் கறிந்து கொண்டாள். இவ்விருவருக் கும் எப்போதாவது தனித்துப் பேசும் சந்தர்ப்பம் வாய்க்கும் போது கிருஷ்ணகுமாரி, "எனக்கும் அத்தகைய எண்ணம் உதய மானல் தட்டாது நாமே தம்பதிகளாவோம்.'' என்று குழந்தைத் தனமாகவே சொல்லுவாள்.

இந்த சமயத்தில் ஒரு பெரிய மனிதர், சீமைக்குத் தன் மகனை அனுப்பப் போவதாயும் அவனுக்குத் துணையாக ஓர் தக்க உத்த மனை யனுப்ப உத்தேசம் என்றும் சொன்ன செய்தி எட்டியதும் ப்ர காசத்திற்கு ஆசை தலை தூக்கியது. தான் அம்மாதிரி சென்று அவ னுடனிருந்து படித்துவிட்டு வந்தால் இவர்களுக்குச் சமதையான அந்தஸ்தைப் பெறமுடியும்; கிருஷ்ணகுமாரியைக் கட்டாயம் தான் மணக்கலாம். அந்தஸ்து ஏற்பட்டால் வாய் திறந்து சொல்லும் யோக்யதை ஏற்படும் என்ற ஓர் நம்பிக்கையும், ஆவலும் உண்டாகி விட்டன. திருவேங்கடம் என்னவோ தற்கால நாகரிகத்தைச் சேர்ந் தவராதலால் அவர் பழய வழக்கப்படி சீக்கிரத்தில் தன் மகளுக்கு விவாகம் செய்யப்போவதில்லை என்று அடிக்கடி சொல்வது இவனுக் குத் தெரியும்; ஆதலால் அந்த பெரிய மனிதரை சிபார்சினல் எப் படியோ பிடித்து, தானும் கூடப் போக ஏற்பாடு செய்து விட்டான்.

தன் பிதாவுக்கிருந்த நிலங்களில் கொஞ்சம் விற்று விட்டு அந்தப் பணத்தினலும், பெரிய மனிதரின் உபகாரத்தினலும் அவன்

விரைவிலேயே சீமைக்குச் சென்று பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படிக்கத் தயாராகிவிட்டான். போகும்போதும் கிருஷ்ணகுமாரியிடமுள்ள காதலை அவளிடம் நன்கு தெரிவித்துப் பேசியே சென்றான்.

சீமைக்குச் சென்று பெரிய மனிதரின் மகனுக்கு வேண்டிய சகல காரியங்களையும் செய்துகொண்டே பாரிஸ்டருக்குப் படித்து வந்தான். சீமானின் மகன் வேறு ஏதோ படிப்பிற்கு வந்ததால் அவன் இரு முறை தோல்வியுற்று அதையே படித்துத் தேறுவதற்கு நான்கு வருடங்களாகிவிட்டன. பாரிஸ்டர் பரிக்ஷையில் தேறி விட்டும், அங்கேயே ப்ரகாசமும் இவனுக்காக இருக்க நேர்ந்துவிட்டது. திருவேங்கடத்தின் வீட்டிலிருந்து ஒருவித தகவலும் இவனுக்குத் தெரிவதற்கு ப்ரமேயமே இல்லாதுபோய்விட்டது. அவன் விதவைத் தாயார் என்ன செய்ய முடியும்?

சுமார் நான்கு வருடங்களுக்குமேல் ப்ரகாசம் தன் தாய்நாடு திரும்பி வந்தான். திருவேங்கடத்தின் வீட்டைப் பற்றிய விஷயம் ஒன்றும் தெரியாது. ஆதலால் நேரே அவர்கள் வீட்டிற்குச் சென்று விசாரித்ததில் வீட்டின் அலங்கோலமும், அவர்கள் கதியின் பரிதாபமும் கேள்விப்பட்டுத் திடுக்கிட்டு, மனம் பதறி இடிந்து விட்டான். அவன் கட்டிய கோட்டைகள் முற்றும் பொடிசூரணமாகிவிட்டதால் அவனுடைய விசனம் கரை புரண்டுவிட்டது. உடனே அன்றே கிராமத்திற்குச் சென்று திருவேங்கடத்தையும் மற்றவர்களையும் சந்திக்கயெண்ணி ஓடினன்.

அந்த சிறிய கிராமத்திற்கு ப்ரகாசம் ஒரு நாளும் சென்றதே கிடையாது. அவன் மனத்திலிருந்த அளப்பரிய ஆசையின் பலத்தினல் இத்தனை நாட்களை நிறைய கனவுகள் கண்டுகொண்டே கழித்தான். சதா கிருஷ்ணகுமாரியின் நினைவிலேயே காலத்தைக் கடத்திவிட்டு, இனி ஒருகால் தான் நினைத்தபடி அவளை அடையலாம் என்று எதிர்பார்த்து வந்த சமயம்; இத்தகைய விஷயங்களைக் கேட்டு மனம் முறிந்தவனுய், உத்ஸாகமிழந்து ஒருவிதமான சோகத்துடன் கிராமத்தையடைந்தான்.

இவனுடைய திடும்ப்ரவேசமான வரவைக் கண்டு குலசேகரனும், வஸந்தகுமாரியும் மிக்க ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்து அன்போடு வரவேற்று உபசரித்தார்கள். ப்ரகாசத்தின் மனத்திற்குள் அழுந்திக்கிடக்கும் பரம ரகஸியமான மர்மம் யாருக்குத் தெரியும்? அவரவர்களின் ஜீவிய ரகஸ்யங்கள் சில சமயம் சிலருக்கு அவரவர்களின் முடிவுடன் மறைந்துபோய் விடுகின்றன. வெளிவராத ரகஸியங்கள் மனித வாழ்க்கையில் ஒவ்வோருவருக்கும் ஏதேனும் ஒன்று கண்டிப்பாய் இருந்தே தீருமென்பதே உலக இயல்பு. சிலருக்குத் தெரியக்கூடிய ரகஸ்யம் சிலது இருக்கலாம். தெரியக்

கூடாத ரகஸ்யமும், தன் மனத்துடன் முடிவடைவதுமானதும் சில இருக்கலாம்.

ஆனால் ப்ரகாசத்தின் மனத்தில் உள்ள ரகஸ்யம் ஏதோ ஒரு பூடகமாய் கிருஷ்ணகுமாரிக்கு மட்டும் தெரியுமேயன்றி மற்ற யாருக்கும் தெரியாது. தான் பல விதத்திலும் நம்பி இருந்த எண்ணம் ஏமாற்றத்தை யளித்துவிட்ட விசனத்தை இனி வெளிப் படையாக யாரிடம் கூற முடியும்? தன் எண்ணங்களைத் தன் னுள்ளேயே அடக்கிக்கொண்டு திருவேங்கடத்தையும் மற்றோரையும் மிக்க அன்போடு விசாரித்தான். திருவேங்கடமும் ப்ரகாசம் வெகு புத்திசாலித்தனமாய் பரீக்ஷையில் தேறி வந்துவிட்டதைக் கண்டு மிகவும் சந்தோஷத்துடன் பாராட்டிக் கூறினார்.

பிறகு குடும்பத்திற்கு நேர்ந்த விபத்துக்களையும், கிருஷ்ண குமாரியின் பிரிவையும், அவனையேதான் மணப்பேனென்று மித மிஞ்சிக் காதலித்துவிட்ட நிலைமைக்கு கிருஷ்ணகுமாரி வந்துவிட்ட தால் தன் கொள்கைக்கு மாறாக விவாகத்தை சீக்கிரம் செய்துவிட வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டதென்றும், அதனால் விளைந்த தீமைகளையும் எடுத்துக் கூறி விசனித்தார். அன்று அவருக்கு புத்தி ஸ்வாதீனமாயிருந்ததால் இன்ப துன்பத்தை அறிந்தார்.

ப்ரகாசம் அது கேட்டு அதிக விசனமும், கிருஷ்ணகுமாரியின் மாமன் வீட்டார்மீது திருவேங்கடம் கொண்டுள்ள பகைக்கு அனு குணமான பகையும் கொண்டு "மாமா! இப்படியா உங்களை அவ மானம் செய்தார்கள்! இதென்ன அனியாயம்! உங்கள் மகள்கூடவா மாமனுரைத் தடுத்துக் கூறவில்லை?" என்றான்.

திரு :—ஊம்...மகளா!...மகள்!...எனக்குப் பரம வைரி என்று எண்ணு ... குடிகாரன் ... சோதா ... அயோக்யன். அல்பனுக்கு மனைவியாகிய பிறகு அவன் புத்தியும் பழக்கங்களுமன்றோ அவளையும் பிடித்துக்கொண்டன. அவளும் சேர்ந்தல்லவோ வேலை செய்தாள். வீடு வீடாக புதிய முறையில் ஓட்டுப் பிச்சைக்குத் தானே சென்றாள். இதைவிட வயிற்றெரிச்சல் வேறு என்ன வேண்டும்? அந்த அல்ப நாய்களுக்கு பெரிய உத்யோகஸ்தர்கள், வியாபாரிகள், பிச்சைக்காரக் கூட்டங்களாகிய தொழிலாளிகள், முதலியவர்கள் தாராளமாய் உதவி புரிந்தார்கள். உத்யோகஸ்தர்களின் உதவியும், ஆதரவும் பூர்ணமாய் இருந்ததால்தான் ஜெயித்துவிட்டான்" என்றபோது ரத்தக் கொதிப்பு அதிகப்பட வாரம்பித்தது.

இதையறிந்த வஸந்தகுமாரி தந்தையை சாந்தப்படுத்தியவாறு "ஐயா"! இந்த விஷயமாக அதிகம் பேசவேண்டாம். அவருடைய மனக்கொதிப்பு அதிகரித்து விபரீதமாகிவிடும். வார்த்தையை தயவு செய்து மாற்றிவிடுங்கள். எல்லாம் போதாத வேளையின் கொடுமையே அன்றி ஒருவரால் என்று மட்டும் கூறுவது மூடத்தனமாகும்" என்று

மெல்லிய குரலில் கூறிவிட்டு, உரத்த குரலில் "ஏன் ஐயா! சீமைக்குச் சென்றிருந்தீர்களே! அந்த ஊர் எப்படி இருக்கிறது? அங்கு நம் இந்தியர்கள் நிறைய இருக்கிறார்களா? வெள்ளையர்கள் இந்தியர்களை எப்படி நடத்துகிறார்கள்? அந்த ஊரின் வனப்பும் பழக்க வழக்கங்களும் எப்படி இருக்கின்றன?'' என்று வெகு தளுக்காகக் கேட்டு வார்த்தையை மாற்றிவிட்டாள்.

அசல் கிருஷ்ணகுமாரியின் குரல்போலவே வஸந்தகுமாரியின் குரல் மாறிவிட்டதையும், அவள் அதிக சாமர்த்தியமாகப் பேசியதின் அற்புதத்தையுங் கண்டு பெருமகிழ்ச்சியடைந்து, அவள் கேட்டபடியே சீமையின் வளப்பங்களையும், அங்குள்ள இயற்கையழகு, சீதோஷ்ண நிலை, மக்களின் கட்டுப்பாடு, ஸ்திரீகளுடைய தன்மை, இந்தியர்களை அவர்கள் நடத்தும் விதம், சில அரிய முக்யமான நோக்கங்கள் முதலிய பல விஷயங்களைக் கூறினான்

இவைகளைக் கேட்ட திருவேங்கடத்துக்கு முன்பு தோன்றிய கோபம் சிறிது தணிந்து புத்தி வேறு வழியில் சென்று சாந்தியடைந்தது. "அப்பா! நீ பரம ஏழையாயிருப்பினும் மேல் நாட்டின் உயர்தரப் படிப்பு படித்து வந்திருக்கும் உனக்காவது அந்த கிருஷ்ணகுமாரியை நான் என் மனமார விவாகம் செய்து கொடுத்திருக்கலாம். நீ வருவதற்குள்ளாகத் தான் என் விதி இத்தனை தூரமாக்கி விட்டதே!''......என்று மீண்டும் அதே விஷயத்தில் பாய்ந்தார்.

இதைக் கேட்ட ப்ரகாசம் அவர் மாறுதலை யறிந்து அந்த வார்த்தையிலிருந்து மாற்றினான். சில தினங்கள் ப்ரகாசத்தைக் கூடவே இருக்கும்படி திருவேங்கடம் இச்சித்ததால் அங்கு அவர் இஷ்டம்போல சில தினங்கள் தங்கினான். ஆனால் அவனுக்கு மனம் சற்றும் இருக்கையே கொள்ளாது ஏதோ வேதனையிலாழ்ந்து விட்டது.

ப்ரகாசம் அங்கிருப்பதை வஸந்தகுமாரியும் ஒரு பெரிய பொழுது போக்காக எண்ணி அவன் மூலம் வெளி நாட்டின் விஷயங்கள் முற்றும் அறிந்தாள். அதே சம்பாஷணைகள் சதா நடக்கும். ஆனால் ப்ரகாசம் தன் மனத்தில் நீறு பூத்த நெருப்பு போலிருக்கும் காதல் ரகஸ்யத்தை இனி தான் வெளியிட்டால் அது அந்த பெண்ணுக்கே ஒருகால் அபவாதமானாலும் ஆகுமென்று பாரயோசனையுடன் தன்னுள்ளேயே புதைத்து விட்டான். வஸந்தகுமாரியிடம் பொது வார்த்தைகளை யின்றி வேறு பேசவே மாட்டான்.

சில தினங்களாயின. ப்ரகாசம் இவர்களை விட்டு நகரத்திற்குச் சென்று பாரிஸ்டர் என்ற பலகையை மாட்டிக் கொண்டு பல ப்ரமுகர்களின் உதவியால் தொழில் நடத்த வாரம்பித்தான். அவன் கிருஷ்ணகுமாரியின் நினைவை மறப்பதற்கு எத்தனையோ

முயற்சி செய்தும் அவனால் கூடாமல் போய் விட்டது. ஆனால் அவளைப் பார்க்கவும் அவன் விரும்பாது, மனத்தை மட்டும் தீர வைராக்யமாக வைத்துக் கொண்டான்.

அடிக்கடி திருவேங்கடத்தின் வேண்டுகோளுக் கிணங்கி கிராமத்திற்கு வந்து, லீவு நாட்களில் தங்குவதும், பிறகு செல்வதுமாக இருந்தான். "என்னுடைய அரண்மனையைப் போன்ற வீடு வீணாகப் பாழ் வீடுபோல் பூட்டியிருக்கிறதே. அதிலேயே நீ உன் பலகையை மாட்டிக் கொண்டு ஆபீஸ் வைத்து, வேலை செய்து விளக்கேற்றி வா. இதனால் எனக்குக் கஷ்டமில்லை. உனக்கும் வாடகை மிச்சமாகும். எங்களுடைய இரண்டு மோட்டார் கார்களில் ஒன்று வீணாகக் கிடப்பதால் உனக்கு நிர்வகிக்க சக்தியுண்டாயின் நீ உபயோகித்து வா" என்று திருவேங்கடமே கூறியது எல்லோருக்கும் மிக்க ஆச்சரியமாகி விட்டது

எப்போதும் ஓரடி விலகி இருக்கும் வரையில் தான் மதிப்பு. கிட்டே நெருங்கினால் புளிப்பு. என்ற பழமொழியை நன்கறிந்த ப்ரகாசம் அதற்கிசையாது தக்க சமாதானங் கூறி விட்டான். இவன் அடிக்கடி இங்கு வந்து செல்வதாலும், பாரிஸ்டர் தொழில் நடத்த வாரம்பித்ததும் நல்ல பெயர் வரத் தொடங்கியதாலும் திருவேங்கடம் ப்ரகாசத்தின் மீது நல்ல மதிப்பும் அபிப்ராயமும் கொண்டு தன் மகன் குலசேகரனுடன் கலந்து யோசித்ததில் வஸந்த குமாரியை இவனுக்கே மணம் செய்து விட்டால் தனக்கு அடங்கிய மருமகப் பிள்ளையாய் இவன் ஒருவனாவது இருப்பான் என்ற எண்ணம் உண்டாகியது

குலசேகரனும் இதையே ஆமோதித்ததோடு "இவ்விஷயத்தை வஸந்தகுமாரியிடம் கேட்கவே வேண்டாம். நாம் இஷ்டப்பட்டு செய்து வைப்பதையே அவள் செய்துகொள்ள வேண்டும். ஒரு சனியன் காதல் காதல் என்று அடிமைப்பட்டு நம்மைப் பாழாக்கியது போதும். இவளை நம்மிஷ்டப்படி தான் செய்யவேண்டும். இப்போதே செய்து விட்டால்தான் நல்லது. இல்லா விட்டால் இவள் கதியும் எப்படியாகுமோ!" என்று இவர்கள் பேசிக்கொண்டதை வஸந்தகுமாரி கேட்டு விட்டாள். இதனால் அவள் மனம் கசந்து வெறுத்ததே யன்றி விவாகத்தில் நாடவே இல்லை; எனினும் தான் இதை கவனித்தது போலக் காட்டிக் கொள்ளவில்லை.

ப்ரகாசம் தன் தொழிலை வெகு திறமையாக நடத்தி வந்தான். சில மாதங்களாகி விட்டன. சாந்தமூர்த்தியின் நண்பனொருவன் தன் சொந்த விஷயமாக சட்ட நியாயங்கள் அறிந்து கொள்வதற்கு ப்ரகாசத்தின் வீட்டிற்கு சாந்தமூர்த்தியையும் கூட அழைத்துக் கொண்டு வந்தான். சாந்தமூர்த்தியை ப்ரகாசம் பார்த்ததே இல்லை. சாந்தமூர்த்தியும் ப்ரகாசத்தைப் பார்த்ததில்லை. இவர்கள் வரும்

போது ப்ரகாசம் ஒரு சட்ட புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான். இவர்களைக் கண்டதும் அதை உடனே மூடி மேஜைமீது வைத்துவிட்டு வந்தவர்களை விசாரித்துப் பேசினான்.

வந்தவன் தான் அறிய வேண்டிய விஷயத்தைக் கூறினான். அதற்காக ப்ரகாசம் சட்டப் புத்தகத்தில் இருக்கும் ஆதாரத்தைப் புரட்டிக் காட்டும்போது அதில் வைத்திருந்த சிறிய புகைப்படமொன்று திடீரென்று கீழே விழுந்தது. உடனே அதைக் கவனித்த மூர்த்திக்குத் தூக்கி வாரிப் போட்டது படத்திலிருக்கும் உருவம் தன் மனைவி கிருஷ்ணகுமாரியினுடையது என்று தெட்டெனத் தெரிந்து விட்டதும் அவன் முகமே மாறு பட்டது. இதே படம் தன் வீட்டிலும் ஒன்று இருப்பதால் சந்தேகமில்லாது அவள் படம் என்று விளங்கி விட்டது.

"இந்த மனிதன் யாரோ, அவள் யாரோ! இவன் கையில் அவள் படமிருப்பதற்கு என்ன காரணம்?'' என்ற பெரிய சந்தேகம் உண்டாகிவிட்டது. ஆனால் அதை திடீரென்று பதட்டமாகக் கேட்டு விடுவதும், தன் மாறுட்டத்தைக் காட்டிக் கொள்வதும் சற்றும் சரியில்லை. எல்லாவற்றையும் பொறுமையாகக் கவனிப்போம்'' என்று தீர்மானித்தவனாய் ஏதோ ஒரு பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தான்.

வந்தவன் தன் காரியம் முடிந்த உடனே கிளம்பிவிட்டான்; அவனோடு மூர்த்தியும் சென்றுவிட்டான். இந்த எண்ணம் மட்டும் மனத்தில் ஒரு புறம் குபீர் குபீர் என்று தோன்றிக்கொண்டே இருந்தது. ஆனால் அதை கிருஷ்ணகுமாரியிடம் காட்டிக் கொள்ளாமல் ஏற்கெனவே செய்திருந்த தீர்மானப்படிக்கு, அலங்காரவதியாய் குழந்தைகளுடன் தயாராயிருந்த கிருஷ்ணகுமாரியை அப்போது நகரத்தில் நடக்கும் அருமையான கண் காட்சியைப் பார்க்க அழைத்துச் சென்றான்.

நகரத்தில் நடக்கும் கண் காட்சியின் அற்புதம் கூறி முடியாது. பல தினுசு சாமான்கள் ஒவ்வொரு தேசத்தின் வெகு நேர்த்தியான அதிசயமான மெழுகு பொம்மைக் காட்சிகள், வளையல்கள், கரும்பு ஆலையாடி சர்க்கரை வெல்லம் முதலியன செய்யும் வகைகள், சோப்பு செய்யும் விதம் முதலிய இன்னும் பலவிதக் காட்சிகள் நிறைந்திருக்கின்றன. அதோடு முக்கியமாய் ஸ்திரீகள் தம் சொந்த உழைப்பில் கையினால் செய்யப் பட்ட பெரம்புக் கூடைகள், தட்டுகள், பெட்டிகள் முதலிய வித விதமான சாமான்களும், சவுக்கங்கள், தம்பூரா வேலைகள், நூலால் பின்னிய பலவிதமான லேஸ்கள், தலையணை உறைகள், வர்ண நூல்களால் செய்த வேலைகள் மரத்தினால் செய்த பலவித சாமான்கள் முதலிய எண்ணிறந்தவைகளை ஓர் ப்ரத்யேக தனிக்கடையா யமைத்து அங்கு ஸ்திரீகளே உட்

கார்ந்து அதனதன் அருமை பெருமைகளைக் காட்டியும், கூறியும் வந்தார்கள்.

அந்த கைவேலைகளில் நமது வஸந்தகுமாரி செய்த சாமான்களும், விநோதங்களும் ஏராளமாக வைத்து அவற்றில் அவளுடைய பெயரும் வரையப் பட்டிருந்தது. இந்த ரமணீயமான கடையை கிருஷ்ணகுமாரி பார்வையிட்டுக் கொண்டே வருகையில் தன்னருமை தங்கை செய்துள்ள வேலைத் திறமையைக் கண்டதும் மின்ஸாரம் தாக்கப் பட்டவள் போல பழங்கால எண்ணங்களாகிய சுழலில் இழுக்கப் பட்டு அப்படியே அதைப் பார்த்துப் பார்த்து இன்பமும், பிரிவாற்றாத் துன்பமும் அடைந்து வைத்த விழியை வாங்காது நின்று விட்டாள்.

கூட வந்த சாந்தமூர்த்தியும் இவ்வேலைகளைக் கண்டு பரம சந்தோஷமும், ஆச்சரியமும் அடைந்து "ப்ரியே! இவைகள் முற்றும் உன் சகோதரி செய்தவைகளா! ஆகா! எத்தனை அருமையான வேலைகள்! எவ்வளவு கவர்ச்சியாக இருக்கிறது......உனக்கு இம்மாதிரி ஒன்றும் செய்யத் தெரியாதா?'' என்றான். இந்த வார்த்தையே கிருஷ்ணகுமாரியின் காதில் விழவில்லை. தானும் தன் சகோதரியும் ஆதியில் ஆடிப் பாடி இணை பிரியாப் பக்ஷிகளைப் போன்றிருந்ததும் பிறகு நேர்ந்த மிக பயங்கரமான பிரிவும் அவள் மூளையில் அலைகளைப்போல் கொந்தளித்துப் புரண்டு புரண்டு ஓடுவதால் அவனுக்குப் பதில் கூறும் சக்தி யற்றாள்.

அந்த சாமான்களை எடுத்துப் பார்த்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டு அதிலேயே லயித்திருப்பதை யறிந்த மூர்த்தி அவளைத் தொந்தரவு செய்யாமல் சற்று விலகிய சமயம், அவனுடைய சினேகிதன் வந்து அவனுடன் பேசிக்கொண்டே சற்று தூரத்திற்கு அழைத்துச் சென்றான்.

அதே சமயம் இக் கண் காட்சியைப் பார்க்க வந்த சிவப்ரகாசம் இந்த கடையில் கிருஷ்ணகுமாரி தன்னை மறந்து உணர்ச்சியுடன் நிற்பதைப் பார்த்துவிட்டான். அவன் சற்றும் எதிர்பார்க்காமல் இங்கு அவளைப் பார்க்கக் கிடைத்ததும் அவன் மனமும் ஒரு வகைச் சுழலில் அகப்பட்டுப் பரிதவித்தது. அவளைப் பார்க்கவே கூடாதென்று எண்ணி இருந்த விரக்தி, பார்த்த மாத்திரத்தில் மறைந்துபோய் அவளை நெருங்கிப் பேசவேண்டுமென்ற எண்ணம் தலை தூக்கி விட்டதால் மெல்ல பித்தன்போல இந்த கடையினருகில் வந்து சாமான்களைப் பார்த்தபடியே, "ஹா! கிருஷ்ணகுமாரி!... சௌக்யமா?''...என்று கேட்டான்.

பழங் கதைகளில் உளுப்பப்பட்டு நிற்கையில் இந்த வார்த்தையைக் கேட்டதும் கிருஷ்ணகுமாரி திடுக்கிட்டு நடுங்கியபடியே சிவப்ரகாசத்தை நிமிர்ந்து பார்த்தாள். "ப்ரகாச்!......ப்ரகாச்!!......

என்றாள். அதற்குமேல் பேச முடியவில்லை. ப்ரகாசம் தனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த காலத்தின் நினைவும், அச்சம்பவங்களும் கண்முன்பு தோன்றிவிட்டன. தன்னை அவன் முழுமனத்துடன் காதலித்த ரகஸியங்கள் சடக்கென நினைவுக்கு வந்து விட்டதும் ஒருவிதமான ப்ரமைகொண்டவள் போல நின்று விட்டாள்.

சிவப்ரகாசம் "கிருஷ்ணகுமாரீ! என்னை ஏமாற்றிவிட்டாயே! ...அந்தோ! உன் தாய் வீட்டுக் குடும்பம் சிதறியதைக் கேள்விப்பட்டு மனம் பதறினேன்''......என்று கூறும்போது கிருஷ்ணகுமாரியின் கண்ணில் நீர் முத்துக்கள்போல உதிர்ந்தது. சாந்தமூர்த்தி தூரத்தில் சென்றானேயன்றி அவன் மனம் கிருஷ்ணகுமாரியை விட்டு அகலவில்லை. அவன் மனக்குழப்பத்திற்கு ஏற்றதுபோல தான் கண்ட ப்ரகாசமே இப்போது இவளுடன் பேசும் மாதிரியும், பார்க்கும் மாதிரியும், கிருஷ்ணகுமாரியின் இப்போதிய நிலைமையும் கண்டு அவனுடைய சம்சயமும், மனக்கலக்கமும் அதிகரித்து விட்டன. "இன்னும் என்ன நடக்கிறது பார்க்கலாம்?'' என்று தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டே பார்த்தவாறு நின்றான்.

அதே கண்காட்சியைப் பார்க்க வந்த வஸந்தகுமாரி, குலசேகரன், திருவேங்கடம் மூவரும் வேறு பக்கம் வருகையில் வஸந்தகுமாரியே முதலில் தன் சகோதரியையும், சிவப்ரகாசத்தையும் பார்த்துத் திடுக்கிட்டாள். "ஹா! அப்பாவை எத்தனையோ விதம் சமாதானம் செய்து "இந்த காட்சியைப் பார்த்தால் மனம் சற்று நிம்மதியடையும்'' என்று அழைத்து வந்த இடத்தில் அவர் ஜன்ம வைரியாக நினைக்கும் அக்காளும் அவள் புருஷனும் குடிகாரனும் நிற்கிறார்களே! அவர்களைப் பார்த்த உடனே அவர் கதி என்னவாகுமோ தெரிய வில்லையே. பல பேர்கள் நிறைந்த பொது இடமாயிற்றே!......

அதோடு சிவப்ரகாசத்திற்கு என்னை விவாகம் செய்து வைக்க வேண்டிய எண்ணத்துடன் இருக்கையில் இவளுடன் அவர் பேசுவதைப் பார்த்தால், அவரையும் பகைத்து விபரீதம் செய்து விடுவாரோ! ஐயோ! இந்த கண்காட்சிக்கு நாம் ஏன் இன்று இவரையும் அழைத்து வந்தோம்! அந்த மனிதர் நம் பிதாவிடமும் உறவாடி அவர் பகைவரிடமும் உறவாடிக்கொண்டே என்ன செய்ய நினைக்கிறாரோ தெரியவில்லையே!'' என்று தவியாய் தவித்துத் துடிக்கிறாள். கண் காட்சியில் விதவிதமான பொருள்களிருப்பதேபோல இங்கு இவர்கள் ஒவ்வொருவரின் மனத்தில் ஒவ்வொரு விதமான உணர்ச்சியும், எண்ணங்களும், சந்தேகமும், தவிப்பும் ஏக காலத்தில் ஒருவருடையது ஒருவரறியாது சூழ்ந்துவிட்டன. திருவேங்கடம் வஸந்தகுமாரியை நெருங்கி வருவதைப் பார்த்து அவள் தீயை மிதித்தவள் போலாய் விட்டாள்.

---

PRINTED AT TATA PRESS & PUBLISHED BY
V. M. PARTHASARATHY, MADRAS.

**திங்கள்தோறும் தங்களைக் களிப்பித்து பொங்கிடச் செய்வது எது!**

## சாந்த குமாரி

பெற்றவர்களுக்கும், பிறந்தவர்களுக்கும் உள்ள பகை எவ்விதம் முடியப்போகிறது ? மறு தேர்தல்களின் தடபுடல் முழக்கங்கள் எப்படி ? கிருஷ்ணகுமாரியின் மீது ப்ரகாசம் கொண்ட காதலும், சாந்தமூர்த்தியின் சந்தேகமும் எவ்வித முடிவை கொடுக்கப்போகின்றன ? வஸந்தகுமாரியின் அதி விசித்திரமான எதிர்கால வாழ்க்கையின் மர்ம மென்ன? கிருஷ்ணகுமாரியின் முடிவு என்ன? சாந்தமூர்த்தியின் கிராமமும், நெற்களஞ்சியமும் எப்படி தீக்கிரை யாகின்றன? சித்திரக் காட்சியில் நடக்கும் வைபவமென்ன ? முதலில் நீறு பூத்த நெருப்புபோல இருந்து நீறு விலகிய நெருப்பு போல புகழ் யாருக்கு உண்டாகிறது ? இணையிலாத அற்புதமான காதல் சக்தி யாரிடத்தில் உண்டாகி எப்படி, யாருக்கு ஜொலிக்கப்போகிறது? இன்னும் மனித வாழ்க்கையில் திடுக்கிட்டலறும் சம்பவங்களும், அனுபவக் களஞ்சியம்போன்ற அபூர்வ விசித்திரவினோத பயங்கர விஷயங்களும் அடுத்தடுத்து வரும் இதழ்களில் கண்டு களித்து மகிழத் தவறுதீர்கள்.

---

## ADVERTISEMENT RATES

Rs. 10—0 for full page

Rs. 5—8 ,, half ,,

Rs. 3—0 for quarter page.

Rs. 12—0 for inner wrapper.

**SPECIAL RATES FOR CONTRACT ADVERTISEMENTS**

# 14—வதாண்டுப் பரிசுகளின் விவரம்

1936-ம் டிசம்பர் மீ 20 தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

| பரிசு ந. | ரூ. | சந்தா ந. | |
|---|---|---|---|
| 1 | 25. | B. 25. | Mr. K. Bakshi Sahib. Singapore. |
| 2 | 15. | M. 216. | ,, R. Muthia, Kyuanggen. |
| 3 | 10. | S. 864. | ,, P. R. Subramaniam, Pollachi. |
| 4 | 5. | V. 371. | ,, M. Varatharajoo, Seremban. |
| 5 | 5. | T. 100. | ,, Dr. Thangammal, P. T. Madras. |
| 6 | 5. | M. 432. | ,, M. Magarajan, Colombo. |

## பிப்ரவரி மீ 20 தேதிக்குள்

சேரும் சந்தா நேயர்களுடைய நம்பர்களை குலுக்கிப் போட்டு 6 சீட்டுகள் எடுத்து அவற்றிற்கு கீழ்க்கண்ட தொகையுள்ள புத்தகங்கள் பரிசாக கொடுக்கபடும்.

| ரூ. 15 | ரூ. 10/-ல் | ரூ. 5/-ல் |
|---|---|---|
| முதற் பரிசு | இரண்டு பரிசுகள் | மூன்று பரிசுகள் |

182998

## நீங்கள் இன்னும் படிக்கவில்லையா?

# அனாதைப் பெண்

அல்லது

## கனிந்த காதலர்

அனுபவம் நிறைந்த ஆச்சரிய சம்பவங்களும்,
இணையிலாக் காதலும், ஈடிலாப் பக்தியும்,
ஒருங்கே அமையப்பெற்று, உயரிட படக்
காட்சிக்கு உகந்த சிறந்த நாவல்.

விலை ரூ, 1/4. சந்தா நேயர்களுக்கு ரூ. 1.

முன்பணமனுப்பவும். வி. பி. கிடையாது.

Kabeer Printing Works, Triplicane, Madras.

# ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

## எழுதிய நாவல்கள்.

| ரூ. 29/8 க்கு 35 நாவல்கள். | முழு விலை | | "ஜகன் மோகினி" சந்தாதாரர்களுக்குக் குறைந்த விலை. | |
|---|---|---|---|---|
| | ரூ. | அ. | ரூ. | அ. |
| வைதேகி | 2 | 8 | 2 | 0 |
| ராதாமணி | 2 | 8 | 2 | 0 |
| சாருலோசனா | 2 | 8 | 2 | 0 |
| பத்மசுந்தரன் | 2 | 8 | 2 | 0 |
| காதலின் கனி | 2 | 8 | 2 | 0 |
| நவநீதகிருஷ்ணன் | 2 | 0 | 1 | 12 |
| ருக்மிணீகாந்தன் | 2 | 0 | 1 | 12 |
| சாமளநாதன் | 2 | 0 | 1 | 12 |
| தியாகக்கொடி | 2 | 0 | 1 | 12 |
| மங்களபாரதி | 2 | 0 | 1 | 12 |
| சண்பகவிஜயம் | 1 | 12 | 1 | 8 |
| கௌரீமுகுந்தன் | 1 | 12 | 1 | 8 |
| ஸாரமதி | 1 | 12 | 1 | 8 |
| சோதனையின் கொடுமை | 1 | 8 | 1 | 4 |
| பரிமளகேசவன் | 1 | 4 | 1 | 0 |
| உத்தமசீலன் | 1 | 4 | 1 | 0 |
| இன்பஜோதி | 1 | 4 | 1 | 0 |
| ராஜமோஹன் | 1 | 4 | 1 | 0 |
| அனாதைப் பெண் | 1 | 4 | 1 | 0 |
| சுகந்தபுஷ்பம் | 1 | 0 | 0 | 14 |
| கதம்பமாலை | 1 | 0 | 0 | 14 |
| கோபாலரத்னம் | 0 | 14 | 0 | 12 |
| புத்தியே புதையல் | 0 | 14 | 0 | 12 |
| பட்டமோ பட்டம் | 0 | 10 | 0 | 8 |
| நளினசேகரன் | 0 | 8 | 0 | 6 |
| வீரவஸந்தா | 0 | 8 | 0 | 6 |
| மூன்று வைரங்கள் | 0 | 8 | 0 | 6 |
| படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 | 0 | 6 |
| பிச்சைக்காரக் குடும்பம் | 0 | 8 | 0 | 6 |
| ஆனந்தஸாகர் | 0 | 8 | 0 | 6 |
| ப்ரேமப்ரபா | 0 | 8 | 0 | 6 |
| பக்ஷமாலிகா | 0 | 6 | | |
| ஜயஸஞ்சீவி | 0 | 4 | | |
| சுகுணபூஷணம் | 0 | 4 | | |
| அம்ருததாரா | 0 | 4 | | |

ரூ. 5-க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் முழு விலையில் மூன்றிலொரு பங்கைக் குறைத்து மீதியை அனுப்பினால் தபாற் செலவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ், 26, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி.



வலிகள்

சுளுக்குகள்

# Strains

அனாவசியமாக வலியினால் அவஸ்தைப்படாதீர்கள். சம்பந்தப்பட்ட இடத்தில் அம்ருதாஞ்சனத்தை தேய்த்து, அதன் உஷ்ணம் நரப்புக்குள் நுழைந்து, வலியைச் சமனப்படுத்துவதைக் கவனியுங்கள்.




சீக்கிரத்தில் அநுகூலம் உண்டாகுவதில் அம்ருதாஞ்சனத்திற்கு இணையானது வேறெதுவும் இல்லை.

## அம்ருதாஞ்சன்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும் சொஸ்தப்படுத்தும்.